விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
**Valampurii**

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 15 வியாழக்கிழமை (27.02.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 070

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# மனித உரிமை அறிக்கையை அமெரிக்கா வெளியிடுகிறது

## இலங்கை தொடர்பில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இலங்கை உள்ளிட்ட உலக நாடுகளின் 2013 மனித உரிமைகள் நிலை தொடர்பான முக்கியமான அறிக்கை ஒன்றை அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி இன்று வெளியிடவுள்ளார். அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் ஆண்டு தோறும் நாடுகளின் மனித உரிமைகள் நடைமுறைகள் என்ற பெயரில் உலகிலுள்ள அனைத்து நாடுகளின்தும் மனித உரிமைகள் நிலை குறித்த அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.**

2013-ம் ஆண்டுக்கான நாடுகளின் மனித உரிமைகள் நடைமுறைகள் அறிக்கை இன்று காலை 11.30 மணியவில் வாஷிங்டனில் உள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஊடக அறையில் வெளியிடப்படவுள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி இந்த அறிக்கையை வெளியிடவுள்ளார். இதையடுத்து ஜனநாயகம், தொழிலாளர் விவகாரங்கள் மற்றும் மனித உரிமைகளுக்கான பதில் உதவி இராஜாங்கச் செயலர் உஸ்ரா சீயா இந்த அறிக்கை தொடர்பாக விளக்கமளிக்கவுள்ளதுடன் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் பதிலளிக்கவுள்ளார்,

19 ஆம் பக்கம் பார்க்க..

## நவிபிள்ளையின் அறிக்கை கடுமையானதாக இருக்கும்

### மனித உரிமை ஆணையம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இம்முறை கொண்டு வரும் யோசனையானது கடந்தமுறை கொணடு வந்த யோசனையை விட பாரதூரமானது என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு எதிராக கொண்டு வரும யோசனையை ஏற்றுக்கொளவது அல்லது ஏற்றுக்கொள்ளாமல் விடுவது நாட்டுக்கு அழுத்தங்களை ஏற்படுத்தாது.

இந்த யோசனை மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்டு ஐ.நா பாதுகாப்புச் சபை ஊடாக வெளியிடப்பட்டால், கடந்த வருடத்தில் கொண்டு வரப்பட்ட அறிக்கையினால் ஏற்பட்ட நிலைமைகளை விட பாரதூரமான நிலைமை உருவாகும்.

பாதுகாப்புச் சபை நோக்கி இந்த அறிக்கை செல்லுமானால் இலங்கையிலஉள்ளவெளி நாட்டு முதலீடு

19 ஆம் பக்கம் பார்க்க..

## இராணுவ படைக்கலைப்பை ஒருபோதும் செய்ய முடியாது

### பாதுகாப்புச் செயலாளர் திட்டவட்டம்



(கொழும்பு)

எந்தவொரு சூழ்நிலையிலும் அரசாங்கம், இராணுவத்தில் படைக் கலைப்பைச் செய்யவோ, வடக்கு மாகாணத்தில் இராணுவத் தலையீட்டைக் குறைக்கவோ மாட்டாது என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 25-வது கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், அனைத்துலக சமூகத்தின் ஒரு பகுதி, இராணுவத்தில் படைக் கலைப்பைச் செய்யுமாறு இராஜதந்திர முனையில்அழுத்தங்களைக் கொடுத்தாலும், அது மட்டும் நடக்காது என்று அவர் கூறியுள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணம் சென்றிருந்த கொழும்பிலுள்ள நோர்வே மற்றும் பிரித்தானிய தூதுவர்கள், இராணுவத்தில் படைக்கலைப்புச் செய்வது சாத்தியமா என்று யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மேஜர்ஜெனரல் உதய பெரேராவிடம் கேள்வி எழுப்பியிருந்தனர்.

நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும் அவர்களின் திட்டத்தின்படி, ஐ.நா மனித உரிமை

19 ஆம் பக்கம் பார்க்க..

## அரசியல் கருவியாக மனிதவுரிமை மீறல்

(திருக்கேதீஸ்வரம்)

மனித உரிமை விவகாரம் அரசியல் கருவியாக பயன்படுத்தப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை தொடர்பிலான பிரச்சினைகள் தெரிவு அடிப்படையில் எழுப்பப்படுகின்றது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

உலகின் அனைவருக்கும் மனித உரிமை விவகாரம் தொடர்பில்

19 ஆம் பக்கம் பார்க்க..

## இறுதி நேரத்தில் ஜப்பானின் முடிவு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா ஜெனீவாவில் கொண்டுவரவுள்ள யோசனைக்கு வாக்களிப்பது குறித்து இறுதிநேரத்திலேயே முடிவெடுக்கப்படும் என்று ஜப்பான் தெரிவித்துள்ளது.

ஜப்பானிய தூதுவர் நொபுஹிடோ ஹொபோ இதனை தெரிவித்துள்ளார். வடக்கில் இடம்பெயர்ந்த நிலையில் மீள்குடியமர்ந்த மக்களுக்காக ஜப்பான் 70 மில்லியன் ரூபாய்களை

19 ஆம் பக்கம் பார்க்க..

## மகிந்த-மன்மோகன் மியன்மாரில் சந்திப்பர்

(கொழும்பு

மியான்மரில் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன சிங், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திக்கவுள்ளதாக தெரிவக்கப்படுகிறது. இது தொடர்பாக இந்திய வெளியுறவு செயலர் சுஜாதாசிங் தெரிவக்கையில்,

மியான்மரில் எதிர்வரும் மார்ச் 4-ம் திகதி பிம்ஸ்டெக் அமைப்பின் உச்சிமாநாடு நடக்கிறது.

இம்மாநாட்டில் கலந்து கொள்ள உள்ள இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவை, பிரதமர் மன்மோகன் சிங் சந்தித்து பேசுகிறார் என்றார்.

கடந்த ஆண்டு டிசம்பரில் இலங்கையில் நடந்த பொதுநலவாய

19 ஆம் பக்கம் பார்க்க..



தமிழகத்தின் பல பாகங்களிலும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக நேற்று இடம் பெற்ற தமிழர் எழுச்சிப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் அலையெனத் திரண்டனர். சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் இடம் பெற்ற எழுச்சிப் போராட்டத்தில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, தமிழின ஆர்வலர்கள், மாணவர்கள, கழகத் தோழர்கள் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டு முழக்கங்களை எழுப்பினர்.

## நல்லை ஆதீன குரு முதல்வருடன் உதுஹம ரத்னபால தேரர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணத்திற்கு நேற்றுக்காலை வருகைதந்த ஜனாதிபதி ஆலோசகரும் பௌத்த விவகாரங்களுக்கான இணைப்பாளருமான உதுஹம ர்த்னபால சிறி புத்தராக்கித மகாநாயக்க தேரர் யாழ்.நாக விகாரையில் புதிதாக புத்தர்சிலையொன்றினை நிறுவி வழிபாட்டில் ஈடுபட்டார்.

இவருடன் பல பௌத்த துறவிகளும் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதி மேஜர் ஜென்ரல் உதயப்பெரேரா மற்றும் இராணுவ அதிகாரிகளும் வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் யாழ். மாவட்ட பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளும் இநத வழிபாட்டில் ஈடுபட்டனர் .

இந்த வழிபாட்டுக்கு முன்னதாக உதுஹம ரத்னபால சிறி புத்தரா்க்கித மகாநாயக்க தேரர் , பௌத்த மதத்துறவிகள் ஆகியோர் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய ஞானதேசிக சம்பந்த சுவாமிகள் மற்றும் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் ஆகியோரை காலை 10 மணியளவில நல்லை ஆதீனத்தில் சந்தித்து கலந

19 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# அத்துரலியே ரத்ன தேரர் அரசியலில் ஈடுபட முடியாது

## பௌத்தபீடம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் முக்கிய பௌத்த பீட பிரிவான அமரபுர சிறி சத்தம்ம வங்ஷிக பௌத்த பீடத்திற்குரிய பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதற்கு தடைவிதித்து அண்மையில் தீர்மானம் ஒன்றை கொண்டு வந்தது.

பௌத்த பீடத்தின் இந்த தீர்மானம் காரணமாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரும் சம்பந்தப்பட்ட பௌத்த பீடத்தின் பிக்குவுமான அத்துரலியே ரத்ன தேரருக்கு துறவறமா அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியா என்ற இரண்டில் ஒன்றை தெரிவு செய்யும் இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது.

பலப்பிட்டி - வெலிதரயில் கூடிய அமரபுர சிறி சத்தம்ம வங்ஷிக பீடதின் மாநாயக்கர் அஹுங்கல்ல சிறி சீல விசுத்தி தேரர் தலைமையிலான பீடத்தின் சங்க சபையினர் தமது பீடத்தின் பிக்குகள் நேரடியான அரசியல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுளில் ஈடுபட இடமளிப்பதில்லை என்ற வரலாற்று சிறப்புமிக்க தீர்மானத்தை எடுத்தது.

இந்த நிலையில், தீர்மானத்தை அடுத்து அமரபுர பீடத்தின் பிக்குவான அத்துரலியே ரத்ன தேரரின் தொடர்பில் எடுக்க போகும் நடவடிக்கை குறித்து கருத்து வெளியிட்ட அந்த பீடத்தின் மாநாயக்கர் சீல விசுத்தி தேரர்,

அத்துரலியே ரத்ன தேரர் எமது பீடத்தில் இருந்து விலகி வேறு சிலரை இணைத்து கொண்டு தனியான பௌத்த பீடமாக செயற்பட புத்தசாசன அமைச்சிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும் புத்தசாசன அமைச்சு அதற்கு அனுமதி வழங்கவில்லை. இதனால் அத்துரலியே ரத்ன தேரர் எமது பௌத்த பீடத்தின் பிக்கு அல்ல என்றே என்னால் கூற முடியும். அவர் எம்முடன் மீண்டும் இணைய வேண்டுமானால் அவர் அரசியல் நடவடிக்கைகளை கைவிட வேண்டிய நிலைமை ஏற்படும்.

பிக்குமார் எவராவது அரசியலில ஈடுபடும் தேவை இருந்தால், அவர்கள் காவியை கழற்றி வைத்து தமது வீடுகளுக்கு சென்று அரசியலில் ஈடுபடலாம் என குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் பௌத்த பீடங்களின் சட்டத்திற்கு அமைய பிக்கு ஒருவர் பீடங்களை விட்டு தனித்து செயற்பட முடியாது.

பிக்கு ஒருவர் பௌத்தபீடம் ஒன்றில் அங்கத்தவராக இருக்க வேணடும். அப்படி அங்கத்துவம் கொண்டவராக இருந்தால் மட்டுமே சமூகத்திலும் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதோடு அரசாங்கம் சட்ட ரீதியாக அங்கீகரிப்பதற்கும் அது அத்தியாவசியமானது.

இவ்வாறான நிலைமையில் அத்துரலியே ரத்ன தேரரின் பௌத்த பிக்கு என்ற அடையாளம் பாரதூரமான நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது.

பௌத்த பீடத்தின் தீர்மானத்திற்கு அமைய செயற்பாட்டு ரீதியான அரசியலை கைவிட்டு பௌத்த பிக்கு என்ற துறவறத்தை பாதுகாத்து கொள்வதா அல்லது காவியை துறந்து வீட்டுக்கு சென்று நாடாளுமன்ற உறுப்பினர் பதவியுடன் ஜாதிக ஹெல உறுமயவில் இணைந்து அரசியலில் ஈடுபடுவதா ஆகிய இரண்டு தெரிவு செய்யும் நிலைமை ரத்ன தேரருக்கு ஏற்பட்டுள்ளது. (எ-11)

# இலத்திரனியல் கைரேகை புதிய முறை அமுலுக்கு

(கொழும்பு)

குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர்களை அடையாளம் காணும் இலத்திரனியல் தானியங்கி கைரேகை அடையாள முறைமை இன்று முதல் அமுலுக்கு கொண்டு வரப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இலத்திரனியில் ரீதியில் கைரேகைகளை அடையாளம் காணும் முறைமை இந்த வாரம் அறிமுகப் படுத்தப்படும் என பொலிஸ் தலைமையகம் அண்மையில் அறிவித்திருந்தது.

குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களின் கைரேகைகளை அடையாளம் காண இதுவரை சுமார் இரண்டு வாரங்கள் ஆனதாகவும், புதிய முறையின் மூலம் மூன்று விநாடிகளில் கைரேகைகளை அடையாளம் காண முடியும் எனவும் பொலிஸ் திணைக்களம் கூறியுள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஆலோசனையின பேரிலேயே இந்த புதிய முறைமை அறிமுகப்படுத்தப்படுவதாகவும் இலங்கையில் உள்ள சகல நபர்களின் கைரேகைகளையும் விபரங்களை கணனிமயப்படுத்தும் நோக்கில் இந்த திட்டம் செயற்படுத்தப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகி இருந்தன. (எ-11)

# வவுனியா இளைஞன் யாழ்ப்பாணத்தில் கொலை?

(யாழ்ப்பாணம்)

வவுனியாவைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் யாழ்ப்பாணத்தில் கொலை செய்யப்பட்ட பின்பு தூக்கிலிடப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ். நாவலர் வீதியிலுள்ள கட்டிடத்தொகுதியிலிருந்தே குறித்த இளைஞனின் சடலத்தை நேற்றுக் காலை யாழ்ப்பாணம் பொலிஸார் மீட்டுள்ளனர்.

வவுனியா அண்ணா வீதியைச சேர்ந்த லெனின் ரூக்ஷன் (வயது - 26) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஓமந்தையிலிருந்து பளை வரையான புகையிரதப்பாதை அமைக்கும் நிறுவனமொன்றின் அலுவலக உதவியாளராக கடமையாற்றிவந்த இவர் மேற்படி கட்டிடத்தொகுதியில் தங்கி வந்துள்ளதாகவும், இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு அவர் தங்கியிருந்த கட்டடத் தொகுதியில் திடீரென தீவிபத்து ஏற்பட்டு பொருட்கள் அனைத்தும் சேதமாக்கப்பட்டிருந்ததாகவும் இந்நிலையில் நேற்றுக் காலை குறித்த இளைஞர் கால்கள் நிலத்தில் முட்டுண்டபடி கழுத்தில் கயிறு சுருக்குண்ட நிலையில் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.


இதேவேளை தனது சகபணியாளர்கள் 9 பேருடன் உயிரிழந்த நபரும் குறித்த கட்டடத்தில் வசித்து வந்திருந்ததாகவும் நேற்று முன் தினம் இரவு அனைவரும் மது போதையில் இருந்ததாகவும் இதனால் எழுந்த மோதலே கொலையில் முடிந்திருக்கலாம் என்றும் பொலிஸ் தரப்பு தகவல்கள் மூலம் அறிய முடிந்தது.

யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் மு.திருநாவுக்கரசு சடலத்தை பார்வையிட்டதுடன், பிரேத பரிசோதனைக்கு சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார்.

நேற்றைய தினம் குறித்த சடலம் பிரேதபரிசோதனைக்குட்படுத்தபடவில்லையெனவும் இன்று பிரேத பரிசோதனை இடம் பெறுமெனவும் வைத்தியசாலை வட்டாரத்தகவல்கள் தெரிவித்தன. (செ-5)

சணல் ஆடு தேவை
கலப்பற்ற சணல் நல்லின பால் ஆடு குட்டியுடன் தேவை
தொடர்புகளுக்கு :-
077 663 1655

# ஏப்ரலில் யாழிற்கு யாழ்தேவி வரும்



(யாழ்ப்பாணம்)

23 வருடங்களின் பின்னர் கிளிநொச்சியில் இருந்து பளை வரையான ரயில் சேவை எதிர் வரும் 4 ஆம் திகதி ஆரம்பிக்கப் படுவதாக ரயில்வேத் திணைக்களம் தெரிவித்தது.

இந்திய இர்கொன் நிறுவனத்தினால் வட பகுதிக்கான ரயில் பாதை துரிதமாக நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

கிளிநொச்சியில் இருந்து பளை வரையான 21 கிலோ மீட்டர் தூர ரயில் பாதையை நிர்மாணிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதோடு பரந்தன், ஆனையிறவு ரயில் நிலையங்களும் மீள நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம, இந்திய உயர் ஸ்தானிகர் சிங்ஹா ஆகியோர் ரயில் சேவையை ஆரம்பித்து வைக்க உள்ளனர்.

பளையில் இருந்து யாழ்ப்பாணம் வரையான ரயில் பாதையும் துரிதமாக நிர்மாணிக்கப்பட்டு வருவதாக வடபகுதி ரயில் பாதை நிர்மாணப் பணிகளுக்குப் பொறுப்பான பொறியியலாளர் லியோ பெர்ணாந்து தெரிவித்தார்.

ஏப்ரல் மாதத்தில் யாழ்தேவி ரயில் யாழ்ப்பாணம் வரை பயணிக்க உள்ளதோடு யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை வரையான நிர்மாணப் பணிகள் யூனில் பூர்த்தி செய்யப்பட திட்டமிடப்பட்டுள்ளது என்றார் அவர். (எ-11)

# யாழ் நகரில் 'மலரும் .கொம்'

(யாழ்ப்பாணம்)

தரணி எங்கும் வாழும் தமிழர்களை தாயகத்திலிருந்து இணைக்கும் புதிய இணையத்தளம் ஒன்று மலரும்.கொம் (malarum.com) என்ற பெயரில் எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் யாழ்ப் பாணத்திலிருந்து செயற்படவுள்ளது.

யாழ்.இந்துக் கல்லூரி, வீதி 20ம் இல.கட்டத்தில் இருந்து இயங்கும் இந்த இணையத்தளத்தை சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளர் ந.வித்தியாதரன் ஒழுங்குபடுத்தி வழிப்படுத்துவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஏ)

# சிவராத்திரி விழாக்கள்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை மகா சிவராத்திரி விழா இன்று இரவு 7.30 மணிக்கு மன்ற அதிபர் ந.து. ஜெகதீஸ்வரன் தலைமையில் மன்றத்தின் மைதானத்தில் நடைபெறும்.

நிகழ்வில் வட மாகாண சபையின் தவிசாளர் சீ.வீ.கே.சிவஞானம் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிப்பதுடன் மன்ற மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் நடைபெறும். (எ-11)

+ + + + + + +

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய மகா சிவராத்திரி உற்சவம் இன்று சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இன்றைய தினம் விசேட அபிடேக ஆராதனைகளுடன் நான்கு ஜாமப் பூஜைகளும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

அடியவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு மகிமை நிறைந்த சிவராத்திரித் திருநாளில் வழிபாடாற்றி எம்பெருமானுடைய திருவருட்கடாட்சத்தைப் பெற்றுய்யுமாறு பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (ஏ)

வீடு வாடகைக்கு
நல்லூர் அரசடி வீதியில்
14-ம் இலக்க வீடு
வாடகைக்கு விடப்படும்.
(ச-6587)
தொடர்புகளுக்கு : 0770711521

வண்ணை வைத்தீஸ்வரனே கொடியேற்று
நிறையருள் பொழிகின்ற வைத்தீஸ்வரனே கொடியேற்று
நெடுமறைப் பொருளான இறைவனே கொடியேற்று
துறை தொறும் சோதியான ஈசனே கொடியேற்று
தொன்மை சைவத்தின் முழுமுதலே கொடியேற்று
இறையருள் பெருக்கிடும் தமிழவனே கொடியேற்று
ஈழத்து யாழ் வண்ணையிலே பெருமானே கொடியேற்று
மறையருள் பொலிந்திட மானிலமோங்க கொடியேற்று
மகா சிவராத்திரியிலே எங்கள் சிவனே கொடியேற்று
-மதுரகவி, காரை.எம்.பி.அருளானந்தன்
(C-6602)
(இன்று 27.02.2014 வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரப் பெருமானின் கொடியேற்றம்)

தொடர்ந்தும் உங்கள் சேவையில்....
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER
(C-6598)

தற்போது புதிய இடத்தில் வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
தற்போது எமது கிளை புதிய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது இல. 30 கனகபுரம் வீதி, கிளிநொச்சிக்கு மாற்றப்பட்டுள்ளது.
வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், அன்பளிப்புப் பொருட்கள் உணவுப் பண்டங்கள் என்பவற்றை மிகவிரைவாக அனுப்பிட. 220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான மிகக் குறைந்த கட்டணம்.
11Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1Kg க்கான மிகக் குறைந்த கட்டணம்
• லண்டன் - 650/= • சுவிஸ்- 850/=
• பிரான்ஸ் - 750/= • நெதர்லான்ட் - 850/=
• கனடா - 900/= • நோர்வே - 900/=
• டென்மார்க் - 800/= • இத்தாலி - 875/=
• அவுஸ்திரேலியா - 750/= • ஜேர்மனி - 700/=
உங்கள் இல்லங்களில் இருந்தவாறே பொதிகளை அனுப்பிட தொடர்பு கொள்ளவும்
0770569642
திருமுருகன் கொம் நெற்
இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோனிற்கு முன்பாக அமைந்துள்ளது.)
பிரதான வீதி, சங்கானை. 021 222 7835
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. (HNP வங்கிக்கு அருகாமையில்)
இல. 30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
TCN EXPRESS இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6
3-5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்
(C-6603)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மனச்சாட்சி

நாம் எந்த சாட்சியை வேண்டுமானாலும் ஏமாற்றி விடலாம். ஆனால் மனசாட்சியை மட்டும் நம்மால் ஒருபோதும் ஏமாற்றவே முடியாது. அது சரியான நேரத்தில் நம் உண்மை நிலையை வெளியே காட்டிவிடும். பெஞ்சமின் பிராங்ளின் என்ற அறிஞரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் எப்போதுமே நண்பர்களோடு உரையாடிக் கொண்டே இருப்பார். ஒரு நாள் ஓர் ஹோட்டலில் நண்பர்களுடன் நீண்டநேரம் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அமர்ந்து அவருடன் பேசிக்கொண்டிருந்த ஒரு நண்பர் தன்னுடைய கைக்கடிகாரத்தை கழற்றி மேசையில் வைத்திருந்தார். பேசி முடித்தபின் பார்த்தால் அந்தக் கைக்கடிகாரத்தைக் காணவில்லை. அந்த அறைக்குள் இருந்தவர்கள் பத்து பேரில் யாராவது ஒருவர் தான் கடிகாரத்தை எடுத்திருக்க முடியும். அதை கண்டுபிடிப்பதற்காக பிராங்ளின் ஓர் ஐடியா செய்தார். என்ன செய்தார். அந்த ஹோட்டல் சமையல் அறையில் இருந்த வெந்நீர், தேநீர் தயாரிக்கின்ற பாத்திரம் ஒன்றை எடுத்து வந்து ஒரு மேசை மீது வைத்து விட்டார். அந்த பாத்திரத்தில் நன்றாக கரி பிடித்திருந்தது.

அதற்குப் பக்கத்தில் ஒரு சேவல் பொம்மையை வைத்து விட்டார். இப்போது அங்கிருந்த பத்து பேரையும் பார்த்து அவர் சொல்கிறார். ''இந்தப் பாத்திரத்தை நீங்கள் ஒவ்வொருவராக வந்து தொட வேண்டும். அப்படித் தொடும் போது கடிகாரத்தை எடுத்தவர் தொட்டதும் இந்தப் பொம்மைச் சேவல் உடனே கூவும்.

அதை வைத்து கடிகாரத்தை எடுத்தவரை நாங்கள் கண்டுபிடித்து விடுவோம் என்று சொல்லிவிட்டு வெளியே வந்து விட்டார். இப்போது ஒவ்வொருவராக யார் அந்தப் பாத்திரத்தை தொட்ட போதும் அந்தப் பொம்மைச் சேவல் சத்தம் போடவில்லை.

கடைசியாக ஒருத்தர் போகிறார். நிச்சயமாக இவர்தான் எடுத்திருப்பார். இப்போது அந்த சேவல்கூவப் போகிறது என்று எல்லோரும் நினைத்தார்கள். கடைசியில் அவர் தொடும் போதும் அந்தச் சேவல் கூவவில்லை. என்னடா இது யார் எடுத்தார் என்று எல்லோரும் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது பெஞ்சமின் பிராங்ளின் என்ன செய்தார். ஒவ்வொருவரினதும் கையையும் பிடித்துப் பார்த்துக்கொண்டே வந்தார். அப்போது அங்கிருந்த ஒன்பது பேருடைய கையில் அந்த பாத்திரத்தில் இருந்த கரி படிந்திருந்தது தெரிந்தது. ஒரே ஒருத்தர் கையில் மட்டும் அந்தக் கரி இல்லை.

உடனே பெஞ்சமின் பிராங்ளின் சொன்னார். ''மற்றவர்கள் தைரியமாக அந்தப் பாத்திரத்தைத் தொட்டிருக்கிறார்கள். ஆனால் இவருக்கு மட்டும் மனசாட்சி உறுத்தியிருக்கிறது. அந்த பாத்திரத்தைத் தொட்டால் ஒருவேளை அந்தப் பொம்மைச் சேவல் கூவி விடுமோ என பயந்து தொடாமல் வந்து விட்டார். அதனாலே இவர் கையில் கரி இல்லை.

கடிகாரம் இவரிடம் தான் இருக்கிறது என்று உறுதியாக சொல்லி விட்டார். அந்த நண்பருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. "ஆமாம்" என்று தன் தவறை ஒப்புக்கொண்டு கடிகாரத்தை எடுத்துக் கொடுத்தார். ஆக இந்த மாதிரியான குற்றங்களை கண்டுபிடிப்பதற்கு இப்படிக்கூட சில நுட்பங்கள் இருக்கிறதைப் பாருங்கள்.

இதிலிருந்து 'மனச்சாட்சியை மீறி நம்மால் எதுவுமே செய்ய முடியாது என்ற உண்மை நமக்கு விளங்குகிறது. தவறு செய்கின்ற நேரத்தில் அதை மறைத்துவிட்டால் கூட சமய சந்தர்ப்பம் வரும்போது மனச்சாட்சி நம்மை உறுத்தி அந்த உண்மையை வெளியே கொண்டு வந்து விடும். அதனால் தான் பெரியவர்கள் 'மனச்சாட்சிப்படி நடந்து கொள்' என்று சொல்கிறார்கள். மனச்சாட்சிதான் நமக்கொரு சிறந்த ஆசான்.

அதே போல் 'நமக்குரியதை நாம் அனுபவித்தால் போதும். மற்றவர் பொருள் மீது நாம் ஏன் வீணாக ஆசைப்பட வேண்டும்?' என்ற மனப்பான்மையை வளர்த்துக்கொண்டால் போதும்.

தேவைக்காக திருடுபவர்கள் உண்டு. சும்மா திரில்லுக்காக ஜாலிக்காக திருடுபவர்களும் உண்டு. எப்படித் திருடினாலும் பாதிக்கப்படுவது அந்தப் பொருளை பறி கொடுத்தவர்கள்தானே. இவற்றில் எல்லாம் எச்சரிக்கையாக இருந்தோமென்றால் செருப்பு திருட்டு, சைக்கிள் திருட்டு, கோழிதிருட்டு இவையெல்லாம் நமது சமூகத்தில் நடக்காமல் தடுத்து விடலாம்.

திருடுபவர்களை மட்டும் குற்றம் சொல்லிப் பிரயோசனம் இல்லை. நாமும் சற்று எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதாவது ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்கள் இந்த உலகத்திலே இருந்து கொண்டேதான் இருப்பார்கள் இல்லையா? அதனால் ஏமாற்றுகிறார்களே, திருடுகிறார்களே என்று சொல்லிப் புலம்புவதை விட அந்தச் சூழ்நிலையை உருவாக்காமல் நாம் எச்சரிக்கையாக இருந்தால் இந்த திருட்டு வேலையெல்லாம் நடக்காது.

ஒருவர் வந்து இன்னொருவரிடம் புலம்பினார்.

''ஐயா என்னை பார்த்தால் எப்படி இருக்கிறது என்று தெரியவில்லை. எல்லோரும் என்னிடம் வந்து இரவல் பேனா கேட்பதே பழக்கமாகப் போய்விட்டது. எங்கே நின்றாலும் கேட்கிறார்கள். நானும் கொடுக்கக்கூடாது என்று நினைக்கிறேன். ஆனால் அவர்கள் கெஞ்சிக் கேட்கும் போது கொடுக்காமல் இருக்க முடியவில்லை. ஆனால் பேனா திரும்ப வராது என்று சொல்லிப்புலம்பினார் அவர். கேட்டுக் கொண்டிருந்த இவர் அவருக்கு ஒரு ஆலோசனை சொன்னார். "வேண்டுமானால் ஒன்று செய்யுங்கள். நீங்கள் பேனாவை இரவல் கொடுக்கும் போது மூடியை கழற்றி வைத்துக்கொண்டு கொடுங்கள். நிச்சயமாக அந்தப் பேனாவை அவர்கள் திருப்பி கொடுத்து விடுவார்கள்'' என்று. ''அப்படி கொடுத்து கொடுத்துத்தான் இப்போது என்னிடம் முப்பது மூடிகளுக்கு மேலே இருக்கிறது" என்றார் இரவல் கொடுத்தவர்.

இளைய சுந்தரம்

# கோபிதாஸின் மரணம் தொடர்பில் பிரிட்டன் விசாரணை கோர வேண்டும்

## தமிழ் தேசிய கூட்டமைப்பு வலியுறுத்து

மகசின் சிறைச்சாலையில் மர்மமான முறை யில் இறந்த பிரித்தானிய பிரஜையான விஸ்வலிங்கம் கோபிதாஸ் தொடர்பில் ஓர் முழுமையான விசாரணையை பிரித்தானியா கோரவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேசாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மகசீன் சிறைச்சாலையில் கடந்த 24 ஆம் திகதி பிரித்தானிய பிரஜையான வஸ்வலிங்கம் கோபிதாஸ் (வயது 43) என்பவர் மர்மமான முறையில் இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரித்தானிய பிரஜையான 43 வயதையுடைய விஸ்வலிங்கம் கோபிதாஸ கடந்த 2007ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்தபோது விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீண்ட காலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். கடந்த 2013ஆம் ஆண்டு இவரின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொளளப்பட்டு இவருக்கு 5 வருட சிறைத் தணடனை விதிக்கப்பட்டது. இத் தண்டனைக் காலத்தை லண்டன் சிறையில அனுபவக்க அனுமதிக்குமாறு கோபிதாஸ் வேண்டுகோள் விடுத்தார். இவரின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டால் அவ்வாறு செய்யத் தயார் என பிரித்தானியா அறிவித்த போதும இலங்கை நீதியமைச்சு அனுமதி வழங்கவில்லை. இதனால் இவர் மகசீன் சிறையிலேயே தொடர்ந்தும் தடுத்து வைக் கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் மகசீன் சிறைச்சாலையன் சீ பிரிவிலுளள குளியல் அறையில் மர்மமான முறையில் இறந்துகிடக்க காணப்பட்டுள்ளார்.

எனவே இம்மரணம் தொடர்பில் முழுமையான நீதியான விசாரணை வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கோருவதோடு இம் மரணம் தொடர்பில் நீதியான விசாரணையைப் பிரித்தானியாவும் கோர வேணடும் எனக் கேட்டுக் கொளகின்றது.

ஏனெனில் இலங்கை சிறைகளில் கைதிகள் கொல்லப்படுவதோ அல்லது இவ்வாறு மரணமடைவதோ இதுதான முதற்தடவையல்ல என்பதும் உலகறிந்த உண்மை என்று குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சிறைக்கைதி மரணத்திற்கு மாரடைப்பே காரணம்

## சிறைச்சாலை ஆணையாளர்

மகசின் சிறைச்சாலையில் உயிரிழந்த புலி சந்தேக நபரின் மரணத்தில் எதுவித மர்மமும் கிடை யாது எனவும் மாரடைப்பினாலே அவர் இறந்திருப்பதாகவும் சிறைச்சாலைத் திணைக்களம் கூறியது. இறந்த கைதியின் பிரேத பரிசோதனை நேற்று முன்தினம் இடம் பெற ஏற்பாடாகியிருந்ததோடு, இந்த மரணத்தின் பின்னணியில் எதுவித சதியோ சந்தேகமோ கிடையாது என சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் கைதாகி நீதிமன்ற உத்தரவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் மந்திகையை பிறப்பிடமாகக் கொண்ட பிரித்தானிய குடியுரிமையுள்ள விஸ்வலிங்கம கோபிதாஸ் என்பவர் கடந்த 24 ஆம் திகதி காலை மகசின் சிறையில உயிரிழந்தார்.

இச் சம்பவம் குறித்து சிறைச்சாலை ஆணையாளர் சந்ரரத்ன பல்லேகம கூறுகையில், இந்த மரணத்தில் சந்தேகம் கிடையாது. தமிழ், சிங்களம், முஸ்லிம் என்று பேதம் பாராது சகல கைதிகளும் சமமாகவே இங்கு நடத்தப்படுகின்றனர்.

இவரின் தண்டனை அடுத்த வருடம் டிசம்பர் 3 ஆம் திகதி முடிவடைய இருந்த நிலையிலேயே திடீர் நோய் வாய்ப்பட்டு இறந்ததாக சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்தார்.

கடந்த 24 ஆம் திகதி காலை 7.10 மணிக்கு மலசல கூடத்துக்குச் சென்ற குறித்த கைதி 7.20 ஆகியும் வெளியில் வராததால் ஏனைய கைதிகள் மலசல கூடத்திற்கு சென்று பார்த்துள்ளனர். கைதி நெஞ்சைப் பிடித்தவாறு முனங்கியபடி கீழே வீழ்ந்து கிடந்துள்ளதோடு 7.35 மணிக்கு சிறைச்சாலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதாக ஆணையாளர் கூறினார்.

வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்கையில் கைதி இறந்திருந்ததாகக் கூறிய அவர் சட்ட மருத்துவ அதிகாரியின் விசாரணை இடம்பெற ஏற்பாடாகியிருந்ததாகக் குறிப்பிட்டார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 50 | 30 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 100 | 100 |
| தக்காளி | 20 | 20 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 |
| கோவா | 30 | 40 | 50 |
| கரட் | 60 | 70 | 80 |
| பூசணி | 30 | 40 | 50 |
| புடோல் | 30 | 50 | 60 |
| வாழைக்காய் | 30 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-90 | 60 | 80 |
| பெரிய வெங்காயம் | 50-70 | 70 | 70 |
| பாகற்காய் | 60-90 | 90 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 40 | 100 |
| கருணைக் கிழங்கு | 30 | 40 | 50 |
| பயற்றங்காய் | 70-100 | 80 | 80 |
| லீக்ஸ் | 60 | 40 | 80 |
| பீற்றூட் | 30 | 35 | 40 |
| கறிமிளகாய் | 80 | 90 | 80 |
| முருங்கைக்காய் | 200-350 | 400 | — |
| போஞ்சி | 40 | 60 | 80 |
| கத்தரிதம்புள்ள | 20 | — | — |
| கீரை - 1 பிடி | 5-10 | 15 | 20 |
| தேசிக்காய் | 40-60 | 35 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40 | 35-45 |
| இராசவள்ளி | 70-90 | 70 | 100 |

# இராசி பலன்

27.02.2014
(மாசி 15, வியாழக்கிழமை )
சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு
திரயோதசி முன்னிரவு 7.03 மணிவரை
திருவோணம் முன்னிரவு 11.17 மணிவரை
இராகுகாலம் 1.59-3.29 மணிவரை
சுபநேரம் 7.59-9.29 மணிவரை
மகாசிவராத்திரி விரதம்
பிரதோச விரதம்

**மேடம்**  புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், ஆரோக்கியமான நாள்.

**இடபம்**  நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய திருப்பங்கள் ஏற்படும் நாள்.

**மிதுனம்**  கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், எந்தக் காரியத்தையும் நிதானமாகச் செய்வது நல்லது, வேலைச்சுமை அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**கடகம்**  நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறலாம், வெளியூர்ப்பயணமொன்றால் புதிய அறிமுகம் கிடைக்கும், போசன சுகமுண்டு, முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**சிங்கம்**  பெண்களால் பெருமை வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், பகைவர்கள் விலகுவர்.

**கன்னி**  மன நிறைவு கூடும் நாள், நீண்ட நாட்களாக தள்ளிப்போட்ட காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்**  செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வாகன சுகமுண்டு, பயந்த சுபாவமுண்டு, தேக நலனில் கவனம் எடுக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்**  விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், உறவினர்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**தனுசு**  நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம்.

**மகரம்**  ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**கும்பம்**  உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், அலைச்சல்கள் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் பெறுவீர்கள், சயன சுகக் குறைவான நாள், சஞ்சலங்கள் கூடும்.

**மீனம்**  குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்தி தரும், முயற்சிகள் எளிதில் கைகூடும், உறவினர் வருகையுண்டு, பொது வாழ்வில் புகழ் கூடும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண கலை இலக்கிய மன்றங்களிடையே போட்டி


(மானிப்பாய்)

வடமாகாண பாரம்பரிய கூத்துக்களை எதிர்கால சந்ததியினருக்கு தெரியப்படுத்தும் நோக்குடன் சர்வதேச ரீதியில் கூத்துக்களை பிரபல்யப்படுத்தவும் வடமாகாணத்திலுள்ள கலை இலக்கிய மன்றங்களுக்கிடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.




இதனடிப்படையில், கூத்துக்கள், இசை நாடகம், கூத்து வழி நடனம் ஆகிய போட்டிகள் மாகாணமட்டத்தில் நடத்தப்பட்டு வெற்றி பெறும் மன்றங்களுக்கு முதலாம் பரிசாக ஜனாதிபதி விருதுடன் ஒரு இலட்சம் ரூபாய் பணப்பரிசும், இரண்டாம்பரிசாக ஆளுநர் விருதுடன் 75ஆயிரம் ரூபா பணப்பரிசும், மூன்றாம் பரிசாக முதலமைச்சர் விருதுடன் 50ஆயிரம் பணப்பரிசும் வழங்கப்படவுள்ளன.

மேலும் ஆர்வமுள்ள மன்றங்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை நாடகப் போட்டி, இணைப் பாளர் இல 48, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் எனவும் அறிவுறுத் தப்பட்டுள்ளது. (அ-9-23)





# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க விரைவில் நடவடிக்கை எடுங்கள்

## ஆறு. திருமுருகன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

விசாரணைகளின்றி இலங்கை சிறைகளில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி ஆலோசகரும் பௌத்த விவகாரங்களுக்கான இணைப்பாளருமான உதுஹம ரத்னபால சிறி புத்தரக்கித மகாநாயக்க தேரர் கைதிகளின் விடுதலைக்கு உரியநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று யாழில் உறுதியளித்துள்ளார்.





யாழ்ப்பாணத்திற்கு நேற்றுக்காலை 10 மணியளவில் வருகைதந்த ஜனாதிபதி ஆலோசகரும் பௌத்த விவகாரங்களுக்கான இணைப்பாளருமான உதுஹம ரத்ன பால சிறி புத்தரக்கித மகாநாயக்க தேரர் உள்ளிட்ட பௌத்த துறவிகள் மற்றும் யாழ். மாவட்ட இராணுவக்கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் உதயபெரேரா ஆகியோர் நல்லை ஆதீனகுருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோரை நல்லை ஆதீனத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இந்தச்சந்திப்பின் போது, இலங்கைச் சிறைச்சாலைகளில் மிக நீண்டகாலமாக பல தமிழ் அரசியல் கைதிகள் வழக்கின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் விடுதலைக்கு மதகுருமார்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

எனவே நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தை கருணையுள்ளத்துடன் அணுகி விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்ய ஜனாதிபதிடன் பேசி உரிய நடவடிக்கை எடுத்தால் அவர்களின் உறவினர்கள் எப்பொழுதும் உங்களுக்கு நன்றியுடையவர்களாகயிருப்பார்கள் என்றும் தமிழ்ச்சமூகம் அந்த உதவியை மறக்க மாட்டார்கள் என்றும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவரும் யாழ்.சிவில் சமூகப்பிரதிநிதியுமான கலாநிதி ஆறு.திருமுருகன் வேண்டுகோள் விடுத்தார்.

இதனையடுத்து கருத்து தெரிவித்த ரத்னபால சிறி புத்தரக்கித மகாநாயக்க தேரர், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசியுள்ளோம். எதிர்காலத்திலும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக உரிய நடவடிக்கை மேற்கொள்வேன் என்று உறுதியளித்தார்.

இதேவேளை ரத்னபால சிறி புத்தரக்கித மகாநாயக்க தேரருடனான சந்திப்பில் அரசியல் ரீதியான விடயங்கள் குறித்து பேசி இந்தச்சந்திப்பை அரசியலாக்க வேண்டாம் என்றும் அரசியல் விவகாரங்களை பின்னர் ஒருமுறை பேசலாம் என்றும் யாழ். மாவட்ட இராணுவக்கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் உதயபெரேரா கேட்டுக்கொண்டார். இருப்பினும் அவரது வேண்டுகோள் புறந்தள்ளபட்டு நீண்டநேரமாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து பேசப்பட்டது.

மேலும் சமய ரீதியாக இங்கு எந்தப்பிரச்சினையும் இல்லை.அரசியல்வாதிகளினால் தான் பிரச்சினை என்று நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மகா நாயக்க தேரரிடம் எடுத்துரைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண் பொலிஸாரால் கைது

(கரணவாய்)



துன்னாலைதெற்கு சக்குச் சம்பா பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, பெண்ணொருவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

சக்குச் சம்பா பகுதியிலுள்ள வீடொன்றில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் குறித்த பகுதிக்குச் சென்றுள்ளனர்.

அவ்வேளை பெண்ணொருவர் 25 லீற்றர் கசிப்பை வடித்துக்கொண்டும் கோடாவை தயாரித்துக் கொண்டும் இருந்த போது நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறித்த பெண்ணிற்கு குழந்தை உள்ளதனால் அவரைப் பிணையில் விடுவித்துள்ளனர். அத்தோடு கசிப்பு உற்பத்தியில் இப்பெண்ணுடன் சிலர் தொடர்புபட்டுள்ளதாக சந்தேகித்து நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கசிப்பு, கோடா போன்றன நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் வைக்கப் பட்டுள்ளது. (அ-9-60)

# அகில இலங்கை சிவாலய தரிசன துவிச்சக்கரவண்டி யாத்திரை

அகில இலங்கைசிவாலயதரிசனதுவிச்சக்கர வண்டி யாத்திரை இன்று அதிகாலை 5.30 மணியளவில் சித்தன்கேணி சிவ சிதம்பரேஸ்வரர் ஆலய முன்றலில் சிறப்பு வழிபாட்டுடன் பிரம்மசிறி ஞான சபாரட்ணசர்மாவின் ஆசியுடன் ஆரம்பமாகவுள்ளது. இந்நிகழ்வில் பல துவிச்சக்கரவண்டி ஓட்டங்களில் கலந்து பல பரிசில்களையும் விருதுகளையும் பெற்ற ஜேர்மனியில் இருந்து வருகை தந்துள்ள இராஜா. இரத் தினசிங்கம் குணசேகர மற்றும் சுழிபுரத்தை சேர்ந்த வைத்திலிங்கம் கைலைநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்யாத்திரை சித்தங்கேணி சிவன் கோவில் முன்றலில் ஆரம்பமாகி மானிப்பாய் வீதி ஊடாக மருதனார் மடம் ஆஞ்சநேயர் ஆலய முன்றலூடாக நல்லூரை சென்றடைந்து அங்கிருந்து செம்மணி வீதி ஊடாக ஏ-32 வீதியூடாக பூநகரி முழங்காவிலூடாக திருக்கேதீஸ்வரத்தை சென்றடையும்.

நாளை அதிகாலை திருக்கேதீஸ்வரத்திலிருந்து ஆரம்பமாகி ஏ-32 வீதி வழியாக மாங்குளம் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரம் ஊடாக வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயத்தினை சென்றடையும்.

எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி திருக்கோனேச்சரர் ஆலயத்தை சென்றடையும் மறுநாள் கொக்கடிச்சோலை தான்தோன்றிஸ்வரர்ஆலயத்தினை சென்றடையும். எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி மொனராகலை சிவன் ஆலயத்தினை சென்றடையும்.

மறுநாள் கதிர்காமத்தினை சென்றடையும். 5.3.2014 மாத்தறை, 6.3.2014 காலி சிவன் ஆலயம், 7.3.2014 இரத்தினபுரி, 8.3.2014 கொழும்பு, 9.3.2014 மத்துகம, 10.3.2014 புத் தளம், 11.3.2014 அனுராதபுரம், 12.3.2014 வவு னியா, 13.3.2014 யாழ்ப்பாணம் நகுலேஸ்வரம் ஊடாக சித்தன்கேணி சிவ சிதம்பரேஸ்வரர் ஆல யத்தை வந்தடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலைவாய்ப்பை நோக்காக கொண்ட கல்வி தனித்துவமானது.**

வயது வேறுபாடு எதுவுமின்றி உங்களின் வேலை வாய்ப்புக்கென வடிவமைக்கப்பட்ட குறுகிய கால கற்கைநெறி. வீட்டிலிருந்தே வருமானம் ஈட்டலாம். முதலாவது கற்கைநெறி விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

உங்கள் சுயவிபரங்களை தொலைபேசி இலக்கத்துடன் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். தெரிவு செய்யப்படும் மாணவர்கள் அறிமுக செயலமர்வுக்கு அழைக்கப்படுவர்.

jfxacademy@gmail.com

(சி-6582)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P.:- 0212223378
Fax:-0212227829



# நாட்டியமயில் 2014



**இது ஒரு போட்டி நிகழ்ச்சியாகையால் போட்டியில் கலந்து கொள்ளும் பரதநாட்டியப் போட்டியாளர்கள்.**

1. 18-28 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. போட்டிக்கு விண்ணப்பிக்கும் போது போட்டியாளர்களின் பிறப்புச் சான்றிதழ் பிரதி அல்லது தேசிய அடையாள அட்டையின் பிரதி இணைக்கப் படல் வேண்டும்.
3. போட்டியாளர்கள் நிகழ்வில் **வர்ணம்** 20-25 நிமிடம் வரை தயாரித்து வழங் குதல் வேண்டும்.
4. பக்கவாத்தியம், இறுவெட்டு அல்லது ஒலிநாடா பயன்படுத்தலாம்.
5. விண்ணப்பதாரிகள் இலங்கையில் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும் அல்லது அவர்களது பெற்றோர்கள் இலங்கையில் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
6. கடந்த காலங்களில் நடைபெற்ற நாட்டியமயில் போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

விண்ணப்ப முடிவுத் திகதி: 30.03.2014 விண்ணப்பப்படிவங்களை பெறுவ தற்கும் மேலதிக தொடர்புகளுக்கும்.

இந்து பௌத்த கலாசார பேரவை,
29, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 0021



MTS சர்வதேச சட்ட நிறுவனம்
166/3, புதுக்கடைத் தெரு,
(Hultsdrof Street)
கொழும்பு -12
தொ.பே. 0112339660

நிகழ்ச்சி ஒழுங்கமைப்புக்குழுவின் தலைவர்
M.T.S. இராமச்சந்திரன் (சர்வதேச சட்ட ஆலோசகர்)

(5693)


## சிங்களமொழி அத்தாட்சிப்பத்திரப் பரீட்சை-II,III

(Diploma in Sinhala language level II,III & Diploma in English Language)

இந்து பௌத்த கலாசார பேரவையும் EUROPA BUILDUNGS FORUM உம் இணைந்து நடத்தும் சிங்கள, ஆங்கில மொழி கற்கைநெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் சித்திரை மாத இறுதியில் நடைபெறவுள்ளது. வெளிவாரியாக சிங்கள, ஆங்கில மொழியைக் கற்றவர்களும் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் பெறவிரும்பினால் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். விரும்புபவர்கள் பின்வரும் முகவரிகளில் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

- இந்து பௌத்த கலாசார பேரவை, 29, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் தினமும் காலை 9.00 மணி - மாலை 4.00 மணி வரை.
- சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 1.00 மணிவரை.
- யா/ நெல்லியடி மத்திய கல்லூரியில் சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணிவரை.
- யா/ இராமநாதன் கல்லூரியில் சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை.

***நிர்வாகம்***

***தேசிய இரண்டாம் மொழிக் கற்கைநிலையம்***

(5693)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### அழைப்பின் பேரில் பேருந்து ஒன்றினை வாடகைக்கு வழங்கக் கூடியவர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சியில் அறிவியல் நகரில் அமைந்துள்ள பொறியியல்/ விவசாய பீடங்களின் உத்தி யோகபூர்வ தேவைக்காக அப்பீடங்களிற்கு தேவையான நேரங்களில் பயன்படுத்துவதற்கு (On call) ஆங்கில இலக்கப் பதிவுடைய கீழ்க் குறிப்பிட்ட வகை பேருந்து ஒன்றின் சேவையை அவ் வாகனத்திற்கான சாரதி உதவியாளருடன் எரிபொருள், காப்புறுதி, திருத்த வேலைகள் போன்றவற்றுடன் கிலோமீற்றர் அடிப்படையில் வாடகைக்கு வழங்க க்கூடிய வாகன உரிமையாளரிடமிருந்து விலைமனு கோரப்படுகின்றது. மேலும் வாகணங்களின் ஆரம்ப கிலோமீற்றர் கணிப்பீடுகள் யாவும் அறிவியல் நகரில் அமைந்துள்ள பீடங்களில் இருந்து கணிப்பீடு செய்யப்படும்.

**பேருந்து- ஆசன எண்ணிக்கை 54- அரை சொகுசு**

மீளளிப்புச் செய்யப்படாத வைப் புப்பணமாக வாகனம் ஒன்றிற்கு ரூபா 1000.00 பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். அல்லது கிளிநொச்சியில் அறிவியல் நகரில் அமைந்துள்ள பிரதிப் பதிவாளர்/ பொறியியல்பீட அலுவலகத்தில் மேற்படி பணத்தினை செலுத்தி கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரப் படிவங்களை 2014.03.11 பிற்பகல் 3.00 மணிக்க முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபா லில் தலைவர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். நேரடியாக சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த காலவரையறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியுள் இடலாம். கேள்விப் பத்திரப் படிவம் மற்றும் நிபந்தனை விபரங்களை நிர்வாகக் கிளையில் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் தொடர்புகொண்டு பார்வையிடலாம். அல்லது கிளிநொச்சியில் அறிவியல் நகரில் அமைந்துள்ள பிரதிப் பதிவாளர்/ பொறியியல் பீட அலுவலகத்தில் பார்வையிடலாம். பல்கலைக்கழக கேள்விச் ச்பையின் முடிவே இறுதியானது.

பதிவாளர்

(சி-6601)


## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1978
நட்சத்திரம்: பூரம் 1
கி.பா: 43.75 செவ் 2 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: M.Sc / உணவு பகுப்பாய்வு (UK - PR)
தொ.இ: B/2857

பிறப்பு: 1979
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா: 47 உயரம்: 5'5"
தகைமை/தொழில்: B.Sc / வங்கியாளர் (குவைத்)
தொ.இ: B/2858

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா: 48.25 செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: B.Com / அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொ.இ: B/2860

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 79.75 செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: B.Sc / IT Teacher
தொ.இ: B/2861

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூரம் 1
கி.பா: 65.5 சூரி. செவ் 12 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/2886

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: விசாகம் 2
கி.பா: 49.5
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: B.Com, HNDA / வங்கியாளர்
தொ.இ: G/2887

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 4
கி.பா: 12.25 செவ் 12 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: கணக்கியல் பட்டதாரி / ஆசிரியர் (கனடா - PR)
தொ.இ: G/2888

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அத்தம் 1
கி.பா: 14.5 செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: O/L, Business Management
தொ.இ: G/2890


## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிவனை நினைத்து வழிபடும் விரதங்களில் முதன்மையான விரதம் மகா சிவராத்திரி

சைவ மக்கள் சிவபெருமானை நினைத்து வழிபடும் விரதங்களில் முதன்மையானது சிவராத்திரி விரதமாகும். மாசி மாதத்து அபரபக்கச் சதுர்த்தசி தினத்தன்று மகாசிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது.



சிவராத்திரி விரதத்தின் மகிமையின் மேன்மை பற்றி கந்த புராணம் சிறப்பாகக் கூறுகின்றது.

*மறைகளிற் சாமம் மகங்களிற் புரவிமகம் மலைகளில் மகாமேகி*
*நிறை புனல் நதியிற் கங்கை ஓரைந்தாய் நிகழ்ந்த பூதத்தின் ஆகாயம்*
*முறை தெரி சுரரிற் கரு முகில் ஊர்தி முதன்மை பெற்றுயர்ந்த போல*
*அறை தரு விரதம் அனைத்திலும் உரைக்கும்*
*அரன் இரவு அதிகம் என்றறிமின்*

அதாவது, வேதங்களில் சாம வேதமும், யாகங்களில் அஸ்வமேத யாகமும், மலைகளில் மகா மேருவும், நதிகளில் கங்கையும், பூதங்களில் ஆகாயமும், தேவர்களில் இந்திரனும் முதன்மை பெற்று விளங்குவது போல, சிவவிரதங்களில் சிவராத்திரி முதன்மை பெறுகிறது.

அருவமாய் உள்ள இறைவன் அருவுருவமாய் சோதி வடிவமாகத் தோன்றிய சொரூபமே சிவலிங்க வடிவமாகும். இறைவனை வழிபட வேத, ஆகம, உபநிடத அறிவு தேவை என்பதல்ல. உள்ளன்போடு ஆத்ம சுத்தியோடு சிவநாமத்தை உச்சரித்தாலே போதும். சிவபெருமானது மூல மந்திரம் பஞ்சாட்சரமந்திரமாகும். 'ஓம் நமசிவாய' எனும் இம்மந்திரம் வேதசாரமாக விளங்குவதுடன் மந்திரங்களுக்கெல்லாம் மூலமாக விளங்குகிறது.

ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்யச் செய்வது நாதன் நாமமாகிய 'நமசிவாய' என்பதுவாம். இதனை, திருஞானசம்பந்தர்– 'வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாவது, நாதன் நாமம் நமசிவாயவே' என்றும், திருநாவுக்கரசர்– 'கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமசிவாயவே' என்றும், சுந்தரமூர்த்திநாயனார்–'நற்றாவுனை நான்மறக்கிலும் சொல்லும் நா நமசிவாயவே' என்றும், மாணிக்கவாசகர் – 'நமசிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க' என்றும் இம் மந்திரத்தின் முக்கியத்துவத்தை மெய்யன்போடு தம் பதிகங்களில் பாடியுள்ளனர்.

இவ்வாறெல்லாம் மகா மகிமை கொண்ட பஞ்சாட்சர மந்திரமான "ஓம்நமசிவாய" அகண்டநாம ஜெபம், சிவனுக்கே உரிய சிறப்பான மகா சிவராத்திரி தினத்தன்று தொடர்ந்து 12 மணி நேரம் மாலை 6 மணியிலிருந்து மறுநாள் காலை 6 மணி வரை யாழ்ப்பாணம் சின்மயா மிஷனில் நடைபெறவுள்ளது.

மனதின் நல்லெண்ணங்களை ஒரு வழிப்போகும் படி ஒழுங்கமைத்து ஒரு ஒழுக்க இனிமைக்கும் வரச் செய்து மனதை ஒருமுகப்படுத்தும் படி செய்வதே ஜபமாகும்.

சரியாகச் செய்யப்பட்ட ஜபம் அதிக நல்ல முறையில் மனதை ஒருமுகப்படுத்தவல்லது. எம்பெருமானுடைய மந்திரத்தை திரும்பத் திரும்ப அனைவரும் இணைந்து உச்சரிக்கும்போது அதனால் கிடைக்கும் சக்தி அளப்பெரியது. ஆத்ம முன் னேற்றத்துக்கு ஜபம் சக்தி வாய்ந்த சாதனையாகும். பகவான் ஸ்ரீகிருஷ்ணன் கீதையில் 'யோகங்களில் எல்லாம் நான் ஜபயோகம்' என்றார்.

மகாசிவராத்திரி தினத்தன்று எம்பெருமானை மனதில் இருத்தி எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளான சிவபெருமானுக்கு அருகிலிருந்து அவன் நாமம் சொல்லி அனந்த கோடி பயன்பெற்று வல்வினைகள் யாவும் அகன்று செல்வங்களெல்லாம் நிறைந்து இம்மையிலும் மறுமையிலும் இன்பமே நிறைய நினைத்திடும் கணத்தினில் நினைவினில் நிறைந்து நேசிக்கும் நெஞ்சத்தில் கோயில் கொண்டவரும் எல்லாம் வல்ல எம்பெருமான் அருள் அனைவருக்கும் கிடைத்திட மெய்யன்போடு பிரார்த்திப்போமாக!!

மகாசிவராத்திரி தினத்தன்று 'ஓம் நமசிவாய' எனும் கருப்பொருளில் 11 வயது முதல் 16 வயது வரையான மாணவர்களுக்கான ஓர் நாள் விழுமிய முகாம் சின்மயாமிஷனில் நடைபெறவுள்ளது.

மாலை 6 மணி முதல் காலை 6 மணிவரை 'ஓம்நமசிவாய' அகண்ட நாம ஜெபம்.

அத்தோடு, நான்கு யாமத்திலும் அபிஷேகம், அர்ச்சனை என்பனவும் இடம்பெறும்.

**சின்மயஞானவேல்**
**சின்மயாமிஷன், இல. 9,**
**செட்டித்தெரு ஒழுங்கை,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

# டெங்குநோய் தாக்கத்தால் தொடர்ந்தும் அச்சுறுத்தல்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் அரசாங்கத்தின் ஒன்றிணைந்த வேலைத்திட்டத்தின் பயனாக உயிரிழப்போரின் எண்ணிக்கையை வெகுவாக குறைக்க முடிந்துள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

டெங்குநோயின் தற்போதைய நிலைமை குறித்து விளக்கமளிக்கும் கருத்தரங்கு நேற்று முன்தினம் தகவல் தொடர்பாடல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தொழில்நுட்ப ரீதியாக பாரிய முன்னேற்றம் கண்டுள்ள சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் நாளுக்கு நாள் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் அதனால் ஏற்படக்கூடிய மரணமும் அதகரித்து வருகின்ற நிலையில் எம்மால் டெங்கு மரணத்தின் வீதத்தை குறுகிய காலத்திற்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்ட வரமுடிந்துள்ளமை எமக்கு கிடைத் துள்ள மிகப் பெரியவெற்றியாகுமெனக்கூறியுள்ளார்.

மரண வீதம் குறைக்கப்பட்ட போதிலும் டெங்கு நோய் தாக்கம் தொடர்ந்தும் எமக்கு அச்சுறுத்தலாகவே இருந்த வருகிறது.

டெங்கு நுளம்புகளுடனான போராட்டமல்ல, அது காலநிலையுடனான போராட்டம் என்பதனை உணர்ந்து ஒவ்வொருவரும் நாம் வாழும் சூழலை சுத்தமாக வைப்பது குறித்து விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

டெங்கு நோயினால் உயிரிழப்போரின் எண்ணிக்கை 2012 ஆம் ஆண்டில் 181 ஆகவிருந்து 2013 ஆம் ஆண்டில் 68 ஆக குறைவடைந்துள்ள நிலையில் 2014 ஆம் ஆண்டில் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் 10 மரணங்கள் ஏற்பட்டுள்ளதெனவும் சுகாதார அமைச்சின் செயலாளர் பாக்ர்நிஹால் ஜயதிலக்க தெரிவித்தார்.

மேலும் 3 நாட்களுக்கும் மேல் கடும் காய்ச்சல் நீடிக்குமாயின் உடனடியாக சகல தகுதிகளுடனுமான வைத்தியரை நாடும் அதேநேரம் வைத்தியர் பரிந்துரை செய்யும் வரை பெரசிட்டமோல் தவிர்ந்த வேறு எந்த வலி நிவாரணியையும் உள்ளெடுத்தலாகாதெனவும் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித்த மஹிபால கேட்டுக் கொண்டார்.

குறித்த நபர் உண்மையில் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளாகியிருப்பாராயின் சில வலி நிவாரணிகள் உடலினுள் பாதகமான விளைவினை ஏற்படுத்தும்.

குருதி தட்டுக்களின் எண்ணிக்கை குறைவடைவது டெங்கு தாக்கத்தின் ஒரு அறிகுறி மாத்திரமேயாகும்.

குருதி தட்டுக்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதன் மூலம் டெங்கு நோய் தாக்கத்திலிருந்து நிவாரணம் பெற்றுவிட முடியுமென கருதுவது மூட நம்பிக்கையாகுமென தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் அசித்த திசேரா கூறினார்.

பப்பாசி, மா மற்றும் எலுமிச்சை இலைகளை அடித்துக் குடிப்பதன் மூலம் டெங்கு தாக்கத்திலிருந்து விடுதலை பெற முடியுமென்பதை இதுவரை விஞ்ஞானம் நிரூபிக்கவில்லை. மருத்துவ சிகிச்சைக்கு முன்னர் குருதி தட்டுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முயல்வது வைத்தியர்களுக்கு முறையான சிகிச்சையை வழங்குவதற்கு முட்டுக்கட்டையாக அமையுமென்பதனால் வைத்தியரது சிகிச்சை முடிவடையும் வரை இத்தகைய கைவைத்தியங்களை தவிர்ப்பதே சிறந்தது எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (அ–2)

## திருகோணமலையில் ஆயுதங்கள் மீட்பு

திருகோணமலையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் சில, மீட்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

திருகோணமலை முருகாபுரியின 3ஆம் மைல்கல் பகுதியில் இருந்து இவ் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்பிரகாரம் ரி.56 ரக துப்பாக்கிகள் 5, ஒரு இயந்திர துப்பாக்கி, மகசீன்கள், துப்பாக்கிரவைகள் உள்ளிட்ட பல ஆயுதங்கள் இராணுவத்தினரால் மீட்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ–2)

## மகா சிவராத்திரி

உருத்திர புரீஸ்வரம் சிவன் கோவிலின் மகா சிவராத்திரி இன்று வியாழக்கிழமை நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளது.

அன்றைய தினம் 4 சாம பூசைகள் நடைபெறவுள்ளதோடு விசேடமாக 4 ஆவது சாம பூசை முற்றுமுழுதாக [illegible] தாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ-9-254)

# மனுஸ்தீவு முகாம் மூடப்பட வேண்டும்

பப்புவா நியூகினி மனுஸ்தீவு முகாமின் பொறுப்பை இலங்கையின் முன்னாள் இராணுவ அதிகாரி ஏற்றுள்ளதாக வெளியான தகவலை அடுத்து அதனை மூடிவிடுமாறு அவுஸ்திரேலிய மனிதவுரிமை நடவடிக்கையாளர்கள் கோரியுள்ளனர்.

மனுஸ்தீவில் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருப்பவர் தினேஸ் பெரேரா என்பவரே என்று அவுஸ்திரேலிய அரசாங்கம் அறிவித்திருந்தது.

எனினும் அவருடைய முன்னைய பதவியான இலங்கையின் முன்னாள் இராணுவ அதிகாரி என்பதை அவுஸ்திரேலிய அரசாங்கம் வெளியிடவில்லை.

மனுஸ்தீவு முகாம், அடர்ந்த காடுகளால் சூழப்பட்ட பப்புவா நியூகினியின் வடக்கு கரையோர பிரதேசமாகும்.

இங்கு அவுஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் சென்ற அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இங்கு ஆப்கானிஸ்தான், இலங்கை, ஈராக், ஈரான் உட்பட பல நாட்டு அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர.

இந் நிலையில் தினேஸ் பெரேரா, ஜி4எஸ் என்ற சர்வதேச பாதுகாப்பு நிறுவனத்தில் பணியாற்றியவர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, மனுஸ்தீவின் வசதிகள் உட்பட்ட விடயங்கள் மனிதாபிமானமற்ற வகையில் உள்ளதாக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் எமலி ஹெய்வி குற்றம் சுமத்தியுள்ளார்.

இதற்கிடையில் அண்மைக்காலமாக மனுஸ்தீவு முகாமில் கலவரங்கள ஏற்பட்டு பலர் காயமடைந்த நிலையிலேயே தினேஸ் பெரேரா என்பவரின் தகவல் வெளியாகியுள்ளது. (அ–2)

# அரசுக்கு எதிரானவர்கள் கண்காணிக்கப்படுகின்றனர்

## சர்வதேச மன்னிப்பு சபை குற்றச்சாட்டு

அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் மீது அரசாங்கம் கடுமையான முறையில் நடந்து கொள்வதாக சர்வதேச மன்னிப்புசபையின் ஆசிய பசுபிக பிரதிப் பணிப்பாளர் பொலிட்ரஸ் கோட் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கத்தின் அதிகாரிகள், அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் மீது கடந்த 6 மாதங்களாக கடுமையான அழுத்தங்களையும் நீதியற்ற தாக்குதல்களையும் மேற்கொண்டு வருகிறது.

நேரடியாகவோ அல்லது பாதுகாப்பு படையினரை கொண்டோ பௌத்த அடிப்படைவாதிகளை கொண்டோ அவர்கள் தாக்கப்படு கின்றனர்.

அரசாங்கத்துக்கு எதிரானவர்கள், தொடர்ந்தும் கண்காணிக்கப்படுகின்றனர். இது மோசமான நடவடிக்கையாகும்.


இதன்காரணமாக பெரும்பாலானவர்கள் தமது கருத்துக்களை வெளியிட பயப்படுகின்றனர்.

எனவே ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகள் இலங்கைக்கு எதிராக எதிர்வரும் மனிதவுரிமைகள் அமர்வின்போது கடுமையான யோசனையை நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜெனீவா மனிதவுரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பமாக நிலையில் இத்தக் குற்றச்சாட்டை மன்னிப்பு சபை நேற்று முன்தினம் சுமத்தியுள்ளது. (அ–2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளின்றி மாமூலை கிராம மக்கள்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கீமுள்ள மாமூலை கிராம மக்கள் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வருவதாக கிராம மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மாமூலை கிராம மக்கள் கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

இந்நிலையில் 361 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் 267 வீடுகள் முழுச் சேதமடைந்துள்ளதுடன் 94 வீடுகள் பகுதிச் சேதமடைந்தன.

இதில் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினரால் 18 புதிய வீடுகளும் இந்தியன் வீட்டுத் திட்டத்தின் கீழ் 151 புதிய வீடுகளுமாக 169 புதிய வீடுகள் அமைத்துக் கொடுக் கப்பட்டுள்ள போதிலும் 98 புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும்.

அத்தோடு 94 பகுதிச் சேதமடைந்த வீடுகளில் 28 வீடுகளை UN HABITAT நிறுவனம் புனரமைத்து கொடுத்துள்ளது.

ஆயினும் 66 பகுதிச்சேத வீடுகள் புனரமைத்துக் கொடுக்கப்பட வேண்டிய நிலையுள்ளது.

இது மாத்திரமன்றி இக்கிராமத்திலு ள்ள ஏனைய வளப்பற்றாக் குறைகளாக முன்பள்ளிக் கட்டடம், கிராம சேவையாளர் அலுவலகம், சமுர்த்தி அலுவலகம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கமக்கார அமைப்பு, பொதுநோக்கு மண்டபம், சனசமூக நிலையம், பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் என்பனவற்றிற்கு காணிகள் உள்ள நிலையில் அதற்கான கட்டடங்கள் அமைக் கப்படவில்லை.

அத்துடன் 150 பேருக்கு கிணறுகளும் 75 குடும்பங்களுக்கு காணிகளும் 5 பேருக்கு தற்காலிக வீடுகளும் இல்லாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இக்கிராமத்தில் கணவனை இழந்த 56 பெண்களும் 2 மாற்றுத் திறனாளிகளும் 10 தனிநபர்களும் 10 வயோதிபர்களும் உள்ள போதிலும் அவர்களுக்காக வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

7 பிரதான வீதிகளும் 3 உள் வீதிகளும் புனரமைப்புச் செய்ய வேண்டிய நிலையில் காணப்படுகின்றது.

எனவே, மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 4 வருடங்கள் கடந்துள்ள போதிலும் பல்வேறு வளக் குறைபாடுகளுடன் உள்ள மாமூலை கிராமத்திற்கு அவ் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க உரியவர்கள் முன் வர வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-267)

## வெயிலின் கொடுமையால் மயங்கி வீழ்ந்த பெற்றோர்

(குருமன்காடு)

வவுனியா இறம்பைக்கும் மகளிர் கல்லூரி ஆரம்ப பிரிவு விளையாட்டுப போட்டியின் போது பெற்றோர்கள் மயங்கி விழுந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஆரம்ப பிரிவு மாணவர்களின் விளையாட்டுப் போட்டி நேற்று மதியம் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றபோது பெற்றோர் மற்றும் பார்வையாளர்களின் தொகைக்கு ஏற்ப இடம் ஒதுக்கப்படாமையினால் பெற்றோர்கள் கடும் வெயிலில் நின்று தமது பிள்ளைகளின் நிகழ்வுகளை பார்வையிடவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

இதன் காரணமாக வெயிலின் கொடுமை தாங்க முடியாமல் சில பெற்றோர்கள் மயங்கி விழுந்த நிலையில் அவர்களுக்கு மற்றைய பெற்றோர் முதலுதவிகளை வழங்கியிருந்தனர். (அ-9-266-250)




## மாங்குளம் அஞ்சலலுவலகத்தில் போதிய தபாலதிபர்கள் இல்லை

(மல்லாவி)

மாங்குளம் அஞ்சல் அலுவலகத்தில் போதிய தபாலதிபர்கள் இன்மையால் ஊழியர்களும் பொது மக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ் அஞ்சல் அலுவலகத்தில் முன்னர் மூன்று தபாலதிபர்கள் கடமையாற்றி வந்தனர். இதில் ஒருவர் இடம் மாற்றப்பட்டுள்ளதால் தற்போது இருவர் மாத்திரமே கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒருவர் விடுமுறை எடுக்கும் பட்சத்தில் பெரும் நெருக்கடிக்கு ஊழியர்களும் பொதுமக்களும் உள்ளாகின்றனர்.

மாங்குளம் அஞ்சல் அலுவலகத்தின் கீழ் யோகபுரம் துணுக்காய், புத்துவெட்டுவான், வவுனிக்குளம், திருமுறிகண்டி, நட்டாங்கண்டல், கரிப்பட்ட முறிப்பு ஆகிய ஏழு உப தபாலகங்கள் இயங்கி வருகின்றன.

இந்நிலையில் குறித்த அஞ்சல் அலுவலகம் காலதாமதமாக திறக்கப்படுகின்ற போது ஏனைய உப தபால் அலுவலகங்களுக்கு கொண்டு செல்லப்படவேண்டிய தபால் பொதிகள், சேவையைப் பெற வருவோர் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.


எனவே அஞ்சல் அலுவலகத்திற்கு போதிய தபாலதிபர்களை நியமித்து சீரான சேவையை வழங்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-15)

## வலம்புரி செய்தியை அடுத்து பாடசாலைக்கு உதவிகள்

(கிளிநொச்சி)

கிளி/ அன்னை சாரதாதேவி வித்தியாலயத்தின் வளப்பற்றாக் குறை தொடர்பாக வலம்புரி பத்திரிகை சுட்டிக்காட்டியதையடுத்து இப் பாடசாலைக்கு பல அடிப்படை வசதிகள் கிடைக்கும் வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் வலம்புரி செய்தியைப் பார்த்த யாழ்.மகப்பேற்று வைத்தியர் கே.சுரேஸ்குமார் தம்பதியினர் தமது மகள் மயூரதியின் 12 ஆவது பிறந்த தினத்தையொட்டி இப்பாடசாலைக்கு 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான மின் விநியோக நடவடிக்கை, குழாய் மூலமான நீர் விநியோகம் ஆகியவை



நேற்று பாடசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

கடந்த 2013 ஆம் ஆண்டில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு அன்பளிப்பு பொருட்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேள், அருகிலுள்ள பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட வைத்தியர், வலம்புரி பத்திரிகையில் பிரசுரமான இப்பாடசாலையின் வளப் பற்றாக்குறை தொடர்பாக வெளியான செய்தியையடுத்தே தமது குடும்பத்தினர் உதவி செய்ய முன்வந்ததாகக் கூறியதுடன் அப் பத்திரிகைக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். (அ-9-254)

## சொந்தப் பலத்தில் மீண்டெழும் காலம் விரைவில் வரும்

### வடக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு

"சொந்தப் பலத்தில் மீண்டெழும் காலம் விரைவில் வரும்" என வட மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் அமைந்துள்ள புழுதி ஆற்றை அடிப்படையாகக்கொண்டு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை அமைக்கும் வேலைத் திட்டம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் வெளியிடுகையில்,

இயற்கையான நீர் ஊற்றையும், பருவ மழையால் கிடைக்கும் நீரையும கொண்டுள்ள இந்தக் குளத்தில் இருந்து ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை உருவாக்குவதன் மூலம் மாயவனூர் கிராமத்தில் குடியேறிய 843 குடும்பங்கள் சுமார் 800 ஏக்கர் நிலத்தில் ஏற்று நீர்ப்பா சனத்தை மேற்கொள்ள முடியும்.

மேலும் வரலாற்றில் நீங்கள் ஒவ்வொருவரும் கடந்து வந்த பாதைகள் கடினமானவை, இந்த மண்ணில் போராடிய போராளிகள் மாத்திரமன்றி இங்கு வாழ்ந்த மக்களாகிய நீங்களும் போராளிகள் எதிர்கொண்ட அளவில் துயரங்களையும், சுமைகளையும் தாங்கியவர் கள்.

எனவே, மாற்றங்கள்நிகழ வேண்டும் என்பது தான் எமதுவிருப்பம். ஆனால் அத்தகைய மாற்றங்கள் போலித் தனமானவையாக இல்லாமல் உண்மைத்தன்மையாகவும் மக்களுக்குப் பயன்படத் தகுநதவையாகவும் இருத்தல் வேண்டும்.

கிளிநொச்சி மண்ணில் ஏ9 வீதியில் பயணிக்கின்றவர்கள் பார்க்கின்ற அழகான கிளிநொச்சி நகரத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் உள்ளே வருகின்ற போது அவலங்களோடும் கண்ணீ ரோடும், மாத்திரமன்றி, வாழவேண்டும் என்கின்ற ஆசைகளோடுமே இருக்கின்ற மக்களைப் பார்க்கின்றேன்.

உங்களுடைய வாழ்க்கையில் நிரந்தரமான மாற்றங்கள் நிகழ நாங்கள் உழைப்போம். அந்த வகையில் இந்தப் புழுதியாற்று ஏற்று நீர்ப்பாசனத்திட்டத்தை அடுத்த ஆண்டுக்குள் நிறைவு செய்து உங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த உழைப்போம் என்றார்.

பின்னர் புழுதியாற்றிலிருந்து ஏற்று நீர்ப்பாசனம் அமையவுள்ள பகுதிகளையும் அமைச்சர தலைமையிலான குழுவினர் பார்வையிட்டனர்.

இந்த நிகழ்வில் அமைச்சருடன் மாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, மாவட்ட அமைப்பாளர் அ.வேழமாலிகிதன், மாயவனூர், இராமநாதபுரம் விவசாயக் குழுக் கள், விவசாய அமைப்புக்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (அ-9-23)



கரைச்சி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த ஒருவருக்கு காது கேட்கும் கருவியை பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் வழங்குவதையும் அருகில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன், கரைச்சி பிரதேச செயலக சமூக சேவைகள் அபிவிருத்தி அலுவலர் ப.சிவகரன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:- சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

732

## கந்தர்வலோகத்துப் பெண்...!

வைசாலி ராஜ்யத்தில் திரிசங்கம் எனும் ஊரில் கலாதரன் என்ற ஒரு தெய்வீக சிற்பி வசித்து வந்தான். அவன் கல்லில் வடிக்கும் சிற்பங்கள் உயிருள்ளவைபோல் தத்ரூபமாக இருக்கும்.

ஒருநாள் இரவில் பௌர்ணமி நிலவொளியில் மொட்டை மாடியில் அவன் உறங்கிக் கொண்டிருந்தான். அப்போது அவனுடைய கனவில் மிக அழகான ஓர் இளமங்கை தோன்றி "சிற்பியே! என்னுடைய உருவச்சிலையை நீ கல்லில் செதுக்க வேண்டுமென நான் மிகவும் விரும்புகிறேன். என் ஆசையை நீ நிறைவேற்றுவாயா?" என்று கேட்டாள்.

அதிரூப சுந்தரியான அந்தப் பெண்ணின் அழகில் தன் மனத்தைப் பறிகொடுத்த கலாதரன், "கண்டிப்பாக வடிக்கிறேன். அடுத்த பௌர்ணமி இதே நேரம் உன் சிலையை நீ காண்பாய்!" என்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறினான்.

அக்கணமே அவன் கனவும், தூக்கமும் கலைந்தன. கனவுதான் கலைந்ததே தவிர அந்த ரூபவதியின் அழகு அவன் மனத்திரையில் நன்றாகப் பதிந்துவிட்டது. உடனே, தன் ஊரின் எல்லையில், மலைகள் சூழ்ந்த பகுதியில், ஒரு நீர் வீழ்ச்சியருகே அமர்ந்து ஒரு பாறையில் இரவும், பகலுமாகப் பாடுபட்டு அடுத்த



பௌர்ணமிக்குள் அவளுடைய உருவச்சிலையை செய்து முடித்தான்.

கலாதரனின் கனவில் தோன்றிய அந்த அழகி ஒரு கந்தர்வலோகத்துப் பெண். அவள் பெயர் நீலாஞ்சனா! ஒவ்வொரு பௌர்ணமி இரவிலும் அவள் தன் தோழிகளுடன் பூலோகத்தில் சஞ்சாரம் செய்வதுண்டு. அத்தகைய ஓர் இரவில்தான் உறங்கிக் கொண்டிருந்த கலாதரனின் கனவில் தோன்றித் தன்னை சிலை வடிக்குமாறு வேண்டினாள். பிறகு அடுத்த பௌர்ணமி இரவில் வழக்கப்படி அவள் தன் தோழிகளுடன் பூலோக சஞ்சாரத்திற்குப் புறப்பட்டாள். நேராகத் தன் தோழிகளுடன் வைசாலி ராஜ்யத்துத் திரிசங்கத்தை அடைந்து, கலாதரன் வடித்திருந்த சிற்பத்தைக் காட்டி நடந்தவற்றைக் கூறினாள்

சிலையைக் கண்டு வியந்த நீலாஞ்சனாவின் தோழிகளில் ஒருத்தி, "இதற்கு உயிர் இருந்தால் இன்னொரு நீலாஞ்சனா பூலோகத்தில் தோன்றிவிடுவாள்," என்றாள். மற்றொருத்தி, "நீலா... நீ இதற்கு உயிர் கொடுத்து விடு!" என்றாள். மற்றொருத்தி, "உன்னுடைய அறிவையும், மனத்தையும் இதற்கு அளித்து விடு!" என்றாள். அதற்கு நீலாஞ்சனா, "சிலைக்கு என் உயிரைத் தந்துவிட்டால் நான் என்ன ஆவது?" என்றாள்.

"இல்லை. கந்தர்வர்களாகிய நமக்கு அபூர்வ சக்திகள் உண்டு. நீ சிறிது காலம் உன் உயிரையும், மனதையும், புத்தியையும் சிலைக்கு அளிப்பாய். அதே சமயம் உன் உயிர், மனம், புத்தி ஆகியவை உன்னிடமும் இருக்கும். கந்தர்வலோகத்திலும் பூலோகத்திலும் இரட்டைப் பிறவிகள் போல் இருப்பீர்கள்!" என்றாள் இன்னொரு தோழி.

"இது என்ன விபரீத விளையாட்டு?" என்று நீலாஞ்சனா கூற, "சிறிது காலம் நீ உன் அறிவினால் பல காரியங்களை சாதித்தபின், பூலோக நீலாஞ்சனாவை அழித்துவிடு!" என்றனர் தோழிகள் அனைவரும். நீலாஞ்சனாவிற்கு அந்த யோசனை பிடித்திருந்தது. உடனே அவள் தன் சக்தியினால் சிலைக்கு உயிர் கொடுத்து, அதனுடன் தன் புத்தியையும், மனதையும் பகிர்ந்து கொண்டாள்.

சிலை உயிர் பெற்று பூலோக நலாஞ்சனாவாக மாறியது. உறககத்திலிருந்து எழுந்தவள் போல் உயிர்த்தெழுந்த பூலோக நீலாஞ்சனா, நகரத்திற்குச் சென்று தன் திறமையைக் காட்டுவோம் என்று எண்ணி இரவு முழுவதும் நடந்தாள்.

காலையில் ஒரு காட்டை அடைந்தாள். அங்கு புதரிலிருந்து ஒரு புலி அவள்மீது பாய, அடுத்த கணம் புலியின் மீது ஓர் அம்பு பாய்ந்தது.

தன்னைக் காப்பாற்றியது யார் என்று நீலாஞ்சனா சுற்றுமுற்றும் பார்க்க, தொலைவில் வில், அம்புகள் ஏந்தி ஓர் இளைஞன் குதிரையின் மீது வருவதைக் கண்டாள்.

அவளருகில் வந்ததும் அவன், "நீ இந்தக் காட்டில் என்ன செய்கிறாய்?" என்று கேட்டான்

முதல் பார்வையிலேயே அவனிடம் மனதைப் பறிகொடுத்த நீலாஞ்சனா, "நான் பிழைப்பைத் தேடி தலைநகரம் செல்லும் வழியில் இந்தப் புலி குறுக்கிட்டது.

என் உயிரைக் காப்பாற்றியதற்கு நன்றி! ஆனால் என்னிடம் வாள் இருந்திருந்தால், நானே புலியைக் கொன்று இருப்பேன்" என்றாள்.

(தொடரும்)

## 02.2014 27 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1560 - ஸ்கொட்லாந்தில் இருந்து பிரெஞ்சுக்காரரை வெளியேற்ற ஸ்கொட்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் பேர்விக் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1594 - பிரான்சின் மன்னனாக நான்காம் ஹென்றி முடிசூடினான்.
- 1700 - புதிய பிரித்தானியா தீவு கண்டுபிடிக்கப்பட்டது.
- 1801 - வோஷிங்டன், டிசி நகரம் அமெரிக்க காங்கிரசின் நிர்வாகத்தின் கீழ் வந்தது.
- 1844 - டொமினிக்கன் குடியரசு ஹெயிட்டியிடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1861 - போலந்தில் ரஷ்ய ஆக்கிரமிப்பை எதிர்த்து வார்சாவில் மக்கள் எதிர்ப்புப் போராட்டம் நடத்தினர்.
- 1879 - சக்கரீன் என்ற செயற்கை இனிப்பூட்டி கண்டு பிடிக்கப்பட்டது.
- 1900 - இரண்டாம் போவர் போர்: தென்னாபிரிக்காவில் போவர்களின் தளபதி பியெட் குரோனியே நிபந்தனையின்றி சரணடைவதாக அறிவித்தார்.
- 1900 - பிரித்தானிய தொழிற் கட்சி அமைக்கப்பட்டது.
- 1933 - பெர்லினில் ஜேர்மனியின் நாடாளுமன்றம் தீ வைத்து எரிக்கப்பட்டது.
- 1940 - ரேடியோ கார்பன் என்ற கரிமம்-14 கண்டு பிடிக்கப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜாவா கடலில் இடம் பெற்ற சமரில் கூட்டுப் படைகளை ஜப்பான் படைகள் தோற்கடித்தன.
- 1951 - ஐக்கிய அமெரிக்காவில் ஜனாதிபதி ஒருவர் இருதடவைகளுக்கு மேல் போட்டியிட முடியாதவாறு அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டது.
- 1967 - டொமினிக்கா ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1976 - முன்னாள் ஸ்பானிய நாடான மேற்கு சகாரா சாராவி அரபு ஜனநாயகக் குடியரசு என்ற பெயரில் விடுதலையை அறிவித்தது.
- 1991 - வளைகுடாப் போர்: அமெரிக்க ஜஜோர்ஜ் டபிள்யூ. புஷ் குவெய்த் விடுதலையானதாக அறிவித்தார்.

### பிறப்புகள்

- 1807 - ஹென்றி லோங்ஃபெலோ, அமெரிக்க கவிஞர் (இ. 1882)
- 1902 - ஜோன் ஸ்டெயின்பெக், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளர் (இ. 1968)
- 1926 - டேவிட் ஹியூபெல், நோபல் பரிசு பெற்ற கனேடியர்
- 1942 - றொபர்ட் கிரப்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர்


### இறப்புகள்

- 1869 - அல்போஃன்ஸ் தெலமர்த்தின், பிரெஞ்சுக் கவிஞர் (பி. 1790)
- 1936 - இவான் பாவ்லொவ், நோபல் பரிசு பெற்ற ரஷ்யர் (பி. 1849)
- 1989 - கொன்ராட் லொரென்ஸ், நோபல் பரிசு பெற்ற விலங்கியலாளர் (பி. 1903)
- 1998 - ஜோர்ஜ் ஹிட்சிங்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர் (பி. 1905)
- 2008 - சுஜாதா, எழுத்தாளர் (பி. 1935)

### சிறப்புதினம்

- மகா சிவராத்திரி நோன்பு தினம்

### மகா சிவராத்திரி நோன்பு



மகா சிவராத்திரி இந்துக்களால் கொண்டாடப்படும் சிவனுக்குரிய விரதமாகும். இவ்விரதம் ஆண்டுதோறும் மாசி மாதத்தில் வரும் கிருஷ்ண பட்ச (தேய்பிறை) சதுர்த்தசி திதியில் இரவில் கொண்டாடப்படும். சிவனடியார் பலர் இந்த சிவராத்திரியையும் மாதந்தோறும் தவறாமல் கடைப்பிடித்து வருகின்றனர்.

விரதம் கடைப்பிடிப்போர் (விரதம் பிடிப்போர்) முதல் ஒருநாள் ஒரு பொழுது உணவருந்தி சிவராத்திரியன்று உபவாசமாய் காலையில் குளித்து சிவ சிந்தனையுடன் கண்விழித்திருந்து நான்கு யாம வழிபாடு செய்யவேண்டும். அடுத்தநாள் காலையில் தீர்த்தமாடி, சுவாமி தரிசனம் செய்து அடியார்களுடன் உணவருந்தி (பாரணை செய்து) விரதத்தை நிறைவு செயதல் வேண்டும். விரத காலங்களில் ஓதக் கூடிய தேவாரங்களாவன, திருக்கேதீச்சரப் பதிகங்கள், திருவண்ணாமலைப் பதிகங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....கையில் பெரிய கொம்பு, காவி வேட்டியும், துண்டும் அணிந்து நெற்றியில் திருநீறு துலங்க சித்தர் வடிவினராகத் தோற்றமளித்த அந்த இளைஞருக்கு வயது இருபத்தைந்துக்கு மேல் இருக்காது. முகத்தில் அப்படி ஒரு தெய்வீக ஒளி களை கட்டியிருந்தது.

ஆனந்தமாக லிங்காஷ்டகத்தை அனுபவித்து ரசித்த அவர், தம் கையிலிருந்த மாலையை அந்த முரட்டு இளைஞருக்கு அணிவித்துப் பெருமைப்படுத்தினார்.

ஆஹா! லிங்காஷ்டகம் பாடிய அந்த இளைஞருக்குத்தான் எத்தனை சிறப்புகள்.


மாலை அணிவித்த இளம் துறவியைப் பற்றி விசாரித்ததில் அவர் பெயர் கொங்கண அடிகள் ரங்கசாமி என்றும்; தூத்துக்குடியைச் சேர்ந்த அவர் தூத்துக்குடியில் சிறிய மடமொன்றை நிர்வகித்து வருகிறார் என்றும்; அமாவாசை தினங்களில் சதுரகிரிக்கு வருவார் என்றும், தன்னை அவரது சீடராக அங்கீகரித்தது மிகப் பெரிய பாக்கியம் என்றும்; அவரைப் பற்றி வேறெந்தத் தகவலும் தமக்குத் தெரியாது என்றும் லிங்காஷ்டகம் பாடிய லிங்கேஸ்வரன் தெரிவித்தார்.

சித்தர் மலைக்கு வந்து சித்த சந்நியாசி ஒருவரைத் தரிசித்த திருப்தியுடன் எங்கள் பயணத்தைத் தொடர்கின்றோம்.

முதலில் வருவது பசுக்கிடை; அதனையடுத்து வருவது வெண்ணாவல் ஊற்று.

### வெண்ணாவல் ஊற்று

இரட்டை மகா லிங்கங்கள் ஆலயத்திலிருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்திலுள்ளது வெண்ணாவல் ஊற்று. வெண்ணாவல் மரத்தினடியில் உள்ள ஊற்றால் இப் பெயர் பெற்றது.



நாவல் ஊற்று லிங்கம்

இந்த ஊற்றில் காணப்படும் நீரின் மேல் எண்ணெய் மிதப்பது போல் காணப்படுகிறது. பலாவடிக் கருப்பண்ணசாமி ஆலயத்தினருகில் உள்ள தைலக் கிணற்றிலிருந்து எண்ணெய் கசிந்து வருவதாகக் கூறப்படுகிறது. மேலே எண்ணெய் மிதந்தாலும், குடிப்பதற்கு அருமையான குடிநீர், கடும் கோடையில்கூட இந்த ஊற்று வற்றுவது கிடையாதாம்.

இந்த நாவல் மரத்தையொட்டி லிங்கம் ஒன்றும் வழிபடப்பட்டு வருகிறது.

நாங்களும் அந்த நாவல் ஊற்று லிங்கத்தை வழிபட்டுப் பயணத்தைத் தொடருகிறோம்.

சார், ஒரு நிமிடம். இந்த ஊற்று நீரில் எண்ணெய் மிதப்பது பற்றியும், தைலக் கிணறு பற்றியும் எதுவும் சொல்லாமல் போனால் எப்படி? என்று தயங்கினார் கோமதிநாயகம்.

"பலாவடிக் கருப்பர் சொல்லுவார் வாருங்கள்" என்றபடியே பயணத்தைத் தொடர்ந்தார் வழிகாட்டி.

செல்லும் வழியில் கீழேயிருந்து ஒரு பாதை வந்து சேர்ந்தது. அருகில்

**ஆன்மீகம் 46**

உள்ள மரத்தில் வருஷ நாடு, கம்பம், தேனி, சின்னமனூர் செல்லும் வழி என வழிகாட்டுப் பலகை காணப்பட்டது. பாதை நாம் வந்த பாதையை விட மோசமாகத் தெரிகிறது. பழக்கமானவர்கள் துணையிருந்தால் மட்டுமே அந்த வழியைப் பயன்படுத்த முடியும்.

### நாற்காலிப் பாறை

வெண்ணாவல் ஊற்றிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் நடந்து விட்டோம். இடது கைப்பக்கமாக பாறை ஒன்றுக்கு சாமியார் ஒருவர் பூசை செய்துகொண்டிருந்தார்.

இதுவும் ஒரு லிங்கமாக இருக்குமோ? எட்டிப் பார்த்தோம். நம்மவூர் (ஈசி சேர்) சாய்வு நாற்காலி போன்று பாறை ஒன்று காணப்பட்டது. இயற்கையாகவே நாற்காலி வடிவத்தில் அமைந்துள்ள இப்பாறையை ஆசனப் பாறை என்று சொல்கிறார்கள்.

பாறை இருக்கும் அமைப்பைப் பார்த்தால் ஹாயாகப் படுத்து காற்று வாங்கலாம் போலிருந்தது.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



## 58 கை தவறிய சங்கிலி

தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையின் பொன் விழா. அதையொட்டி திரையுலக மேதை வி.சாந்தாராம் அவர்கள் சென்னை வந்து இருந்தார். பிரபாத் டாக்கீஸ் முதலாளி சி.பார்த்தசாரதி முதலியார் சாந்தாராமின் மிக நெருங்கிய நண்பர். சாந்தாராமின் பிரபாத் ஸ்தாபனப் பெயரில்தான் அக்கால அந்தப் பெரும் திரை அரங்கம் உருவானது. சாந்தாராமே வந்து அதனைத் திறந்து வைத்தார். இந்தமுறை சாந்தாராம் சென்னை வந்தபோது முதலியாரின் மகன்கள் சென்று தந்தை செய்ய வேண்டிய மரியாதைகளைச் செய்தார்கள்.

சாந்தாராம் அவர்களுக்கு எத்தனையோ நிறுவனங்கள் வரவேற்பு அளித்தாலும், செம்மல் முதல்வர் ஆன பின்பு தனிப்பட்ட முறையில் ஒரு வரவேற்பு விழா வைத்தார்.

அப்போது சாந்தாராமுக்கு ஒன்பது சவரனில் ஒரு சங்கிலி செய்து, அன்பளிப்பாக வழங்கினார். சாந்தாராம் நவரச நாயகன் நவ்ரங் என்று ஒரு அபூர்வ படம் தயாரித்து வெளியிட்டார் என்பதற்கு, ஒன்பது பவுன் சங்கிலி.

அதை சாந்தாராம் அவர்களுக்குக் கொடுத்த போது அந்த மேதை, செம்மலின் கைகளினாலேயே கழுத்தில் போட்டுவிடச் சொன்னார். அப்படிப் போடும்போது அது தவறி விழுந்து விட்டது. அ[illegible]



முதலமைச்சராகப் பதவியேற்கும் விழாவில்....

குனிய சாந்தாராமை தடுத்து நிறுத்தி, காலடியில் விழுந்திருந்த சங்கிலியை குனிந்து எடுத்தார் செம்மல். அந்தக் காட்சியை பத்திரிகையாளர்கள் படம் பிடித்திருந்தனர். சிலர் அதனை வெளி[illegible] எம்.ஜி.ஆர். சாந்தாராம் கால்களில் விழுந்து ஆசி கோரினார் என்று எழுதியிருந்தனர்.

இச் செய்திகளைப் படித்தபின் செம்மல் சொன்னார். "அப்படியே நான் விழுந்து இருந்தாலும் திருப்தியே பெற்று இருப்பேன். நம்மை விடப் பெரியவர்கள் காலில் விழுவது நமக்குப் பெருமையே. தாழ்வு தன்னை உயர்த்தும் என்பதே இது தான்" என்றார்.

மணியன் தயாரித்த பல்லாண்டு வாழ்க படம் சாந்தாராமுக்குக் காட்டப்பட்டது. சாந்தாராம் இந்தியில் நடித்த கதாபாத்திரத்தில்தான் செம்மல் நடித்து இருந்தார். படத்தில் நாங்கள் அமைத்திருந்த காட்சிகளை ரசித்தார் சாந்தாராம்.

ஒரு கதையை உங்கள் ரசிகர்களுக்கு ஏற்றாற் போல் மாற்றியிருக்கிறீர்கள். தப்பில்லை. இந்தப் படத்தை கேட்ட போது நான் ஒரு மலரைக் கொடுத்தேன். நீங்கள் மலருக்கே வண்ணம் பூசி ரசிக்க வைத்திருக்கிறீர்கள் என்றார் சாந்தாராம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவநீதம்பிள்ளையின் அறிக்கையை நடைமுறைப்படுத்த முன்வாருங்கள்

## சர்வதேசத்தை அழைக்கிறது மன்னிப்புசபை

(கொழும்பு)

இலங்கை மீது மனித உரிமை மீறல் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை விடுத்துள்ள பலமான புதிய அறிக்கையின் பரிந்துரைகளை செயற்படுத்த சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் யுத்தம் முடிந்து ஐந்து வருடங்கள் கடந்துள்ள நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் இன்னமும் நியாயம் வேண்டி நிற்பது வெட்கப்பட வேண்டிய செயல் என சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்திய தலைமை நிர்வாகி ஆனந்த பத்மநாபன் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு வலியுறுத்தி நவிப்பிள்ளை வெளியிட்டுள்ள புதிய அறிக்கை முக்கியமானதும் அவசர மற்றும் கசப்பான நினைவூட்டலுமாகும். இனியும் விசாரணையில் தாமதிக்க முடியாது.

மனித உரிமை மீறல் தொடர்பில் சர்வ தேசம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு செவிசாய்க்காது சர்வ தேசத்தின் கண்ணில் மண்ணை தூவும் நடவடிக்கையில் இலங்கை ஈடுபட்டு வருகின்றது.

எனவே நவிப்பிள்ளையின் புதிய அறிக்கை ஒரு கண் திறப்பாக இருக்க வேண்டும், இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை நடத்தும் வலுவான பிரேரணை ஒன்றை ஐ.நா. மனித உரிமை பேரவையில் நிறைவேற்ற வேண்டும்.

நவிப்பிள்ளையின் கண்டுபிடிப்புகள்ளங்களது கருத்துகளுடன் ஒத்துப் போகின்றன. இலங்கையில் இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல் மற்றும் போர்க்குற்றம் குறித்து எமக்கு இன்னும் ஆதாரம் கிடைத்த வண்ணமுள்ளன என்றார். (அ-2)

## மக்களுக்கான சகல நன்மைகளையும் 2015 ஆம் ஆண்டில் பெற்றுக் கொடுப்போம்

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில்

(கொழும்பு)

ராஜபக்ச அரசாங்கத்தினால் மக்களுக்கு நன்மைகளை வழங்க முடியாது என எதிர்க்கட்சித் தலைவர ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நெலுவ பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இந்த அரசாங்கத்திற்கு எதிராக பலர் குரல்கொடுக்கின்றனர். எனினும், மகக்ளுக்கு நன்மை வழங்கக் கூடிய ஆற்றல் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மட்டுமே உண்டு.

இந்த அரசாங்கத்தினால் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட சகல நலன்களையும் 2015ஆம் ஆண்டில் மீளப் பெற்றுக்கொடுக்க முடியும் என வாக்குறுதி அளிக்கின்றோம்.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர. ஜயவர்தன, ஆர்.பிரேமதாச, டி.பி.விஜேதுங்க, சந்திரிக்கா பண்டாரநாயக்க ஆகியோரின் ஆட்சி காலத்தில் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வன்னிப் பகுதியில் ஒடுக்கப்பட்ட பிரபாகரனுடன் ஜனாதிபதி மஹிந்த போர் புரிந்தார்.

போர் நிறைவடையும் வரையில் மக்களுக்கு நலன் வழங்க முடியாது என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

போர் முடிவடைந்து ஐந்து ஆணடுகள் கடக்கவுள்ள நிலையிலும் மக்களுக்கு நிவாரணம் கிடையாது.

நாட்டில் இன்று 99 வீதமானவர்கள் பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஒரு வீதமானவர்கள் சுவிட்சர்லாந்து வங்கிகளை பணத்தை வைப்புச் செய்துள்ளனர்.

ஊழல் மோசடி மூலம் இந்தப் பணம் சம்பாதிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியினால் மட்டுமே நாட்டு மக்களுக்கு நன்மை வழங்க முடியும் என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (அ-2)



பிரதமரும் பௌத்த சாசன அமைச்சருமான டி.எம்.ஜயரட்ன தனது குடும்பத்தினர் சகிதம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். இதன்போது யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயம் மற்றும் ஈழத்துச் சிதம்பரம் ஆகிய ஆலயங்களில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

## 90 கிலோ சிவப்பு சந்தனம் மீட்பு

இலங்கைக்கு புறப்பட்ட விமானம் தரையிறக்கப்பட்டு 90 கிலோ சிவப்பு சந்தனம் கைப்பற்றப்பட்டது.

திருவனந்தபுரத்தில் இருந்து இலங்கைக்கு புறப்பட்ட பயணிகள் விமானம் ஒன்று மீண்டும் இறக்கப்பட்டு மூவர் இந்திய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர். இதன்போது அவர்களிடம் இருந்து சந்தனம் கைப்பற்றப்பட்டது. குறித்த விமானம் நேற்று முன்தினம் முற்பகல் 9.40 மணிக்கு திருவனந்தபுரத்தில் இருந்து புறப்பட்டது.

எனினும் இந்திய சுங்க அதிகாரிகளின் கோரிக்கையின்படி விமானம் மீண்டும் திருவனந்தபுரம் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

இதன்பின்னர் நடத்தப்பட்ட சோதனையின் போது 90 கிலோ சிவப்பு சந்தனம் கைப்பற்றப்பட்டது. அதனை கொண்டு சென்ற மூவரும் கைது செய்யப்பட்டனர்.

இதனையடுத்து விமானம் மீண்டும் கொழும்புக்கு புறப்பட்டு சென்றது. (அ-2)

# தனிநபர் வருமானம் எட்டு வருடங்களில் 3200 டொலராக அதிகரிக்கப்பட்டுள்ளது

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

நாட்டின் தனிநபர் வருமானத்தை ஆயிரம் அமெரிக்க டொலராக்குவதற்கு 56 வருடங்களாயின. எனினும் தற்போதைய அரசாங்கத்தினால் எட்டு வருடங்களில் அதனை 3 ஆயிரத்து 200 டொலராக அதிகரிக்க முடிந்துள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தலைமையில் குருநாகலில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பாடசாலைகளில் தற்போது கல்வி கற்கும் நான்கு இலட்சம் மாணவர்களுக்கும் சில வருடங்களில் 4 இலட்சம் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பாரிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

கடந்த எட்டு வருடங்களில் நாட்டில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பாரிய அபிவிருத்திகள் நாடெங்கிலும் இடம்பெற்றுள்ளதுடன், அதற்காக பாரிய முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அபிவிருத்தியுடன் கூடிய புதிய தொழில் முயற்சிகளையும் இவற்றில் குறிப்பிட முடியும். எதிர்காலத்தில் மேலும் முன்னேற்றங்களையும் மாற்றங்களையும் எதிர்பார்க்க முடியும்.

2004 ஆம் ஆண்டில் தனிநபர் வருமானம் ஆயிரத்து 200 அமெரிக்கன் டொலர்களாக இருந்தது. எனினும் அது 2013 இல் 3 ஆயிரத்து 200 அமெரிக்கன் டொலர்களாக்க முடிந்துள்ளது. இதுவும் மாற்றங்களில் குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

கஷ்டப் பிரதேச கிராமங்கள் தற்போது இல்லை. அனைத்துக் கிராமங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

2005 இல் 15 வீதமாக இருந்த வறுமை நிலை தற்போது 5 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதில் மேலும் முன்னேற்றம் தேவை என்பதைக் கருத்திற்கொண்டு செயற்பட்டு வருகின்றோம்.

தேசிய வர்த்தகத் துறைக்கும் முதலீடுகளுக்கும் முக்கியத்துவமளித்து வரும் காலகட்டமிது, வெளிநாட்டு முதலீடுகள் பற்றி மட்டுமே சிந்தித்த காலம் போய் தற்போது தேசிய முதலீடுகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

வர்த்தகர்களுக்கான வசதி வாய்ப்புகள், தொழில்நுட்பம் நிதி நிலைமைகள் மிகவும் அவசியமாகும். இவற்றை நூற்றுக்கு நூறு வீதம் பெற்றுக்கொடுத்துள்ளதாக நான் கூறவில்லை. எனினும் கடந்த காலங்களோடு ஒப்பிடுகையில் நாம் உயர்ந்த மட்டத்தில் உள்ளோம் என்பதைக் குறிப்பிட முடியும்.

சுற்றுலாத்துறை உட்பட ஆறு முக்கியமான கேந்திர துறைகளில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பொருளாதாரத்தை விரிவுபடுத்தும் அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தற்போது சுற்றுலாப் பயணிகளின் வருகை 12 இலட்சமாக அதிகரித்துள்ளது. சில வருடங்களில் இதனை 25 இலட்சமாக அதிகரிப்பதே எமது இலக்காகும்.

பல புதிய துறைகள் இணைக்கப்பட்டு பொருளாதாரத்திற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வங்கித் துறையை மேம்படுத்தி அதன் மூலம் நிதி நிலைமைகளை முறையாக முன்னெடுக்கவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வர்த்தகத் துறையினர் தமது நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் தேவையான சூழல் வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

நாட்டின் உற்பத்தித் துறையை பலப்படுத்துவது அவசியம். தனியார் துறையினரும் இதில் கவனம் செலுத்துதல் சிறந்தது. அரச துறை மற்றும் தனியார் துறையும் இணைந்து 100 வீதம் உற்பத்தியை அதிகரிக்க முடியுமானால் பொருட்களின் விலை அதிகரிப்பு வேகம் மேலும் குறைவடையும்.

சீனாவுடன் வர்த்தக உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அதற்கான முன்னோடி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் பல நாடுகளுடன் வர்த்தக நடவடிக்கைகள் பலப்படுத்தப்படவுள்ளன. வர்த்தகத்துறை மிக முக்கியமானது. வர்த்தகர்கள் உருவாக்கப்படுவது போல் அவர்கள் பாதுகாக்கப்படுவது அவசியம்.

வரலாற்றில் பொருட்கள் விலை அதிகரிப்பு வேகத்தை தனி இலக்கத்தில் தொடர்ச்சியாக 60 மாதங்களுக்கு தக்க வைத்துக்கொள்ள முடிந்துள்ளது. முன்னர் சில மாதங்களுக்குக் கூட இதனை தக்க வைத்துக்கொள்ள முடியாதிருந்தது.

தற்போது நான்கு இலட்சம் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதை நாம் காணமுடிகிறது. இவர்கள் அத்தனை பேருக்கும் சில வருடங்களில் தொழில்வாய்ப்புகளை வழங்க வேண்டிய பொறுப்பு எம்மிடமுள்ளது. நான்கு இலட்சம் தொழில்கள் அவசியமாகிறது.

இதற்கிணங்க புதிய தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். அதற்கான முதலீடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. கடந்த வருடங்களில் 8 வீதமாக இருந்த வேலைவாய்ப்பற்ற நிலையை தற்போது 4 வீதமாகக் குறைக்க முடிந்துள்ளது. அதற்கிணங்க புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான வசதிகளை நாம் ஏற்படுத்தி வருகிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கிளி/ தம்பிராசபுரம் அ.த.க.பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் திருமதி. இந்திராகாந்தி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் சிறார்களின் இசையும் அசைவும் நிகழ்வையும் மாணவனுக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.




யாழ்/ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி வித்தியாலயத்தின் அதிபர் கோ. பத்மநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் உள்ளிட்ட விருந்தினர்கள் மங்கல விளக்கேற்றுவதையும் மாணவர்களின் அணிநடையையும் படங்களில் காணலாம்.




## நிகழ்வின் நிழல்கள்





அரியாலை கிழக்கு அ.த.க.பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் கு.அகிலன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வீராங்கனைகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதையும் படங்களில் காணலாம்.





கிளிநொச்சி ஊற்றுப்புலம் பாடசாலையில் இடம்பெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுவதையும் விளையாட்டு வீரர் ஒருவருக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன் வெற்றிக் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.






யா/ புற்றளை மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாண்ட் வாத்தியங்கள் சகிதம் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் இடைவேளை நிகழ்வையும் திருமதி நாகலட்சுமி அனந்தேஸ்வரன் வெற்றி பெற்ற வீராங்கனைக்கு கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய சுப்ரீம் கோர்ட்டின் புரட்சிகர தீர்ப்புகள்...!



ராஜீவ் கொலை வழக்கு மீண்டும் தமிழகத்தில் லைம்லைட்டிற்கு வந்திருக்கிறது. அவ்வழக்கில் மூவரின் தூக்குத்தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றி தீர்ப்பளித்தது இந்திய உச்சநீதிமன்றம். இத்தீர்ப்பை அளித்த தலைமை நீதிபதி சதாசிவம், தமிழகத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஏறக்குறைய 14 வருடங்களாக நடைபெற்ற கருணை மனு போராட்டம் முடிவுக்கு வந்திருக்கிறது. ஆனாலும் இவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கியதை ஏற்று, அவர்களின் எஞ்சிய தண்டனையையும் இரத்து செய்து அவர்களை விடுதலை செய்ய உத்தரவிட்டார் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா. முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு மட்டுமல்ல விடுதலை. அவர்களுடன் ராஜீவ் வழக்கில் தண்டனை பெற்று, ஏற்கனவே சிறையில் இருக்கும் நளினி, ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகிய நால்வருக்கும் சேர்த்தே இந்த விடுதலை வழங்கப்பட்டுள்ளது.

ஏழு பேரின் விடுதலை தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்கும் அதிகார யுத்தமாக மாறியிருக்கிறது. இதனால் மாநில அரசின் விடுதலையை உச்சநீதிமன்றம் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. இது ஒரு புறம் என்றால், தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய கட்சிகளுக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் வேறு மாதிரியான தலைவலி வந்துவிட்டது. குறிப்பாக தமிழக காங்கிரஸ் கட்சிக்கும், ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோவிற்கும் அது திருகுவலியாகவே அமைந்துவிடும் போலிருக்கிறது. விரைவில் வரப்போகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்கனவே காங்கிரஸ் கட்சி தீண்டத்தகாத கட்சியாக இருக்கிறது. எந்த அரசியல் கட்சியும் அவர்களுடன் மனமுவந்து கூட்டணி வைக்க முன்வரவில்லை. இன்னும் சொல்லப்போனால் 2 ஜி விவகாரத்தை காண்பித்து இன்னமும் கூட கூட்டணிக்கு வாருங்கள் என்று தி.மு.கவை மிரட்டிக்கொண்டிருக்கிறது காங்கிரஸ் கட்சி என்ற பத்திரிகை செய்திகளுக்குப் பஞ்சமில்லை. காங்கிரஸுடன் கூட்டணி வைக்க யாருக்கும் இஷ்டமில்லை என்பதைவிட அவர்களுக்கு சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் கொடுத்த 16 நாடாளுமன்றத் தொகுதிகளைக் கொடுக்கவும் யாருக்கும் மனமில்லை.

இந்நிலையில், ராஜீவ் வழக்கில் தண்டனை பெற்றவர்கள் விடுதலை செய்யப்பட்டதில் தமிழக காங்கிரஸ் கட்சி கான்கிரீட்டாக கண்டனத்தைச் சொல்ல முடியாமல் தவிக்கிறது. அதற்கு காரணம் அ.தி.மு.க. தலைமையிலான ஆட்சி இருப்பதால் கடுமையான கருத்துக்களைச்சொல்லி வம்பில் மாட்டிக்கொள்ள வேண்டாம் என்றே பல மாநில காங்கிரஸ் தலைவர்களும் நினைக்கிறார்கள். மத்திய அமைச்சர்களாக இருக்கும் வாசன் போன்றோரே, இது துரதிர்ஷ்டவசமானது என்றுதான் கூறியிருக்கிறாரே தவிர அ.தி.மு.கவை கடுமையாக விமர்சிக்க முடியவில்லை. தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகனோ அ.தி.மு.கவை மட்டும் விமர்சித்தால் சிக்கல் என்று கருதி தி.மு.க.மீதும் பாய்ந்து பிராண்டியிருக்கிறார். இலங்கைத் தமிழர் பிரச்சினையை வைத்து அரசியல் பண்ணுகிறார்கள் என்று குற்றம் சாட்டியிருக்கிறார்.

ராகுல்காந்தி, டில்லி காங்கிரஸ் தலைவர்கள் எல்லாம் இதில் கண்டனம் தெரிவித்த பிறகே தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியிலுள்ள இளைஞர் காங்கிரஸின் சார்பில் இதைக் கண்டித்து ஓர் உண்ணாவிரதம் தொடங்கப்பட்டது. அக்கூட்டத்தில் கூட, எங்கள் முன்னாள் அமைச்சர்கள் வீட்டில் ஏன் தாக்குகிறீர்கள். எங்கள் மத்திய மந்திரிகள் அனைவரும் தமிழகத்திற்குள் வரப்போகிறார்கள். அவர்களைத் தாக்கிப்பாருங்கள் என்று பிரகடனம் செய்தார். தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் மீது அவருக்கு அவ்வளவு கோபம் ஏன் என்பது விளங்கவில்லை. இவர்கள் அனைவரையும் மிஞ்சி பிரதமர் அலுவலக அமைச்சர் நாராயணசாமி மட்டும்தான் நேரடியாக அ.தி.மு.கவை விமர்சித்தவர். அதனால்தான், நீதிமன்றமே தன்னிச்சையாக நாராயணசாமி மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கை எடுக்க வேண்டும் என்று புதுச்சேரி மாநில அ.தி.மு.க. செயலாளர் அன்பழகன் அறிக்கை விடுத்துள்ளார்.

தமிழக காங்கிரஸ் தலைவர்களுக்கு எம்.பியாகி நாடாளுமன்றத்துக்குப் போகவேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அதற்கு கூட்டணி வேண்டும். இந்த விடயத்தில் அளவுக்கு அதிகமாக எதிர்த்துப் பேசினோம் என்றால் யாரும் நம்முடன் கூட்டணியும் வரமாட்டார்கள். நாம் நாடாளுமன்றத்துக்கும் போக முடியாது என்ற கவலை அவர்களை வாட்டி வதைக்கிறது. இதனால் அடக்கி வாசிக்கிறார்கள். தி.மு.கவும் வேண்டாம். அ.தி.மு.கவும் வேண்டாம் விஜயகாந்திடம் கூட்டணிபோவோம். என்றாலும், அவர் தரப்பில் விதிக்கப்படும் நிபந்தனையில் காங்கிரஸ் கட்சியின் டில்லித்தலைவர்களே அதிர்ச்சி அடைந்துபோய் இருக்கிறார்கள். இதனால் விஜயகாந்த் கட்சியுடன் மட்டும் நேரடியாக கூட்டணி வைக்கும் விடயமும் கைகூடி வராமல் காங்கிரஸ் காரர்களுக்கு கடுக்காய் கொடுக்கிறது.

காங்கிரஸ் கட்சியின் நிலை இது என்றால் வைகோவுக்கு வேறு தலைவலி. அவர் இப்போது அகில இந்தியக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியுடன் கூட்டணி சேர விரும்புகிறார். அந்த கூட்டணிக்கான பல ரவுண்ட் பேச்சுவார்த்தைகள் முடிந்துவிட்டன. ஆனாலும் இன்னும் இறுதி உடன்படிக்கைக்கு வர முடியவில்லை. இதுபோன்ற சூழ்நிலையில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பா.ஜ.க. எடுக்கும் நிலைப்பாடுகள் அவருக்கு உடன்பட்டதாக இல்லை. இன்னும் சொல்லப்போனால் ராஜீவ் வழக்கில் தண்டிக்கப்பட்டவர்களை விடுதலை செய்த விவகாரத்தில் அகில இந்திய பா.ஜ.க. கடுமையாகவே எதிர்த்திருக்கிறது. ஏனென்றால் அக்கட்சிக்கு பயங்கரவாத எதிர்ப்பு என்பது ஒரு பிரசாரமாகவே இந்தத் தேர்தலில் முன்வைக்கக் காத்திருக்கிறது. ஏற்கனவே இந்திய நாடாளுமன்றத் தாக்குதலில் தண்டனை பெற்ற அப்சல் குரு, மும்பைத்தாக்குதலில் தண்டனைபெற்ற கசாப் போன்றவர்களை எல்லாம் ஏன் தூக்கிலிடவில்லை என்று கேள்வி எழுப்பியது பா.ஜ.கதான் அவர்கள் உடனடியாக தூக்கிலிடப்பட்டார்கள் என்றால் அதற்கு பா.ஜ.க. கொடுத்த அழுத்தம்தான் காரணம்.

அதேபோல், மும்பை குண்டு வெடிப்பு வழக்கில் சிறைத்தண்டனை பெற்று அது உச்சநீதிமன்றத்திலும் உறுதி செய்யப்பட்ட நிலையில் தொடர்ந்து நடிகர் சஞ்சய் தத்திற்கு பெரோல் வழங்கிக் கொண்டிருப்பதை கடுமையாக விமர்சித்துக்கொண்டிருக்கிறது பா.ஜ.க. இதுபோன்ற சூழ்நிலையில் ராஜீவ் விவகாரத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைக் குறைப்பை ஆதரித்துப்பேச முடியாத இக்கட்டில் பா.ஜ.க. சிக்கிக்கொண்டிருக்கிறது. ஆனால், இதற்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம், வைகோவிற்கு வரும். தேர்தல் களத்தில் அதுபற்றி பதில் சொல்வது எப்படி என்பதில்தான் வைகோ கவலை கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது. ஏனென்றால் தி.மு.கவும் வேண்டாம். அ.தி.மு.கவும் வேண்டாம். காங்கிரஸும்வேண்டாம். என்றுதான் பா.ஜ.க. பக்கமாக கூட்டணிக்கு போனார். ஆனால், அங்கு கூட்டணியில் இருப்பதற்கும் ராஜீவ் வழக்கில் தண்டனை அடைந்தவர்களை விடுதலை செய்யும் விவகாரம் சிக்கலாக வந்து நிற்கிறதே என்ற எண்ணம் ம.தி.மு.க. தலைவருக்கு மட்டுமல்ல அவர் கட்சியிலிருக்கும் முன்னணித் தலைவர்கள் பலருக்கும் இருக்கிறது. இப்போதைக்கு மாநில பா.ஜ.க. தலைவர்கள் இதை ஆதரித்து கருத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அக்கட்சியின் மேலிடத் தலைவர்கள் வெறுத்துப் பேசுகிறார்கள். இது ஒருபுறமிருக்க புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கேஜ்ரிவால் இந்த விடுதலையைக் கண்டித்திருக்கிறார். அவருடைய மாநில கட்சித்தலைவர் இந்த விடுதலையை ஆதரித்திருக்கிறார். இப்படி ராஜீவ் வழக்கில் விடுதலை ஆவோரின் விவகாரம் வில்லங்கமாகிக் கொண்டிருக்கிறது. அதற்கு மேல் சுப்ரீம்கோட்டில் மத்திய அரசு தொடர்ந்த வழக்கின் காரணமாக இந்த ஏழுபேரின் விடுதலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அந்த வழக்கு விசாரணை மார்ச் 6 ஆம் திகதி வருகிறது.

அரசியல் சிக்கலும் சட்டச்சிக்கலும் சூழ்ந்து நிற்கும் இந்த விடுதலை விவகாரம் எப்படி நாடாளுமன்றத் தேர்தலில் விஸ்வரூபம் எடுக்கும் என்பதுதான் இப்போது எஞ்சியிருக்கின்ற கேள்வி, ஆனால், தூக்குத்தண்டனை என்பது இந்தியாவில் அரசியல்வாதிகள் நீக்க வேண்டியதில்லை. அந்த தண்டனைக்கு எதிராக மனித உரிமை அமைப்புக்களும் உலக அளவிலுள்ள விழிப்புணர்வும் இந்திய உச்சநீதிமன்றத்தை உசார்படுத்தியிருக்கிறது. கருணை மனுக்களை தாமதமாக பரிசீலிப்பது- அதுவும் போதிய காரணம் ஏதும் சொல்ல முடியாமல் அரசு தரப்பில் தாமதம் செய்வது தூக்குத் தண்டனையை ஆயுள்தண்டனையாக குறைக்க பொருத்தமான காரணமே என்று இந்திய உச்சநீதிமன்றம் அடுத்தடுத்து பல வழக்குகளில் தீர்ப்பளித்து வருகிறது. சத்ருகன்சவுகான் வழக்கில் 15 பேரின் தூக்குத்தண்டனை ஆயுள் தண்டனையாக குறைத்தது. இப்போது ராஜீவ்கொலை வழக்கில் மூவரின் தூக்குத்தண்டனையை ஆயுள்தண்டனையாக குறைத்தது. இத்துடன் சேர்த்து கடந்த 18 பேரின் தூக்குத்தண்டனை இரத்து செய்யப்பட்டிருக்கிறது. இப்படி புரட்சிகரமான தீர்ப்புக்களை வழங்கி வரும் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி வருகின்ற ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி ஓய்வுபெறுகிறார். அதற்கு முன்பு இன்னும் எத்தனை இதுபோன்ற தூக்குத்தண்டனை விவகாரங்கள் அவர் முன்பு தீர்ப்புக்குப்போய் நிற்கப்போகின்றதோ?

எம்.காசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்காலத்தில் வீதியில் இறங்கி போராட மாட்டோம்

எதிர்காலத்தில் வீதியில் இறங்கி போராடப் போவதில்லை என பொது பல சேனா அமைப்பு அறிவித்துள்ளது.

போராட்டங்கள் கோரிக்கைகளுக்காக வீதியில் இறங்கி போராடப் போவதில்லை என அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

பௌத்த மதத்தலைவர்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பௌத்த மதத்தை இழிவுபடுத்தக் கூடிய செயற்பாடுகளில் ஈடுபடப் போவதில்லை.

சில பிக்குகள் பௌத்த மதத்தை அபகீர்த்தி செய்யும் வகையில் செயற படுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## பட்டிமன்றம்

சிவராத்திரி தினத்தன்று சொல்வேந்தர் பொன்.சுகந்தன் தலைமையில் **சமூகத்தை பெரிதும் மேம்படுத்த உதவுவது ஆன்மீகமா? அறிவியலா?** எனும் தலைப்பில் பட்டிமன்றம் பருத்தித்துறை சிவன் கோவிலில் நடைபெறவுள்ளது.

சிவராத்திரி தினமான இன்று வியாழக்கிழமை இரவு 1.30 மணிக்கு ஆலயத்தில் இப் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

# அமைச்சர் ராஜிதவின் யோசனைக்கு வடபகுதி மீனவர் சங்கங்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

இந்திய-இலங்கை மீனவர்களுக்கிடையில் நீண்ட காலமாக இழுபறியில் உள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு கூட்டு மீன்பிடி தொழில் முறையைத் தீர்வாக வைக்கவிருப்பதாக இலங்கை மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ள கருத்து ஏற்றுக்கொள்ள முடியாதது என்று இலங்கையின் வடபகுதி மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை-இந்திய கடற்பரப்புகளுக்குள் இருநாட்டு மீனவர்களும் இணைந்து தொழில் செய்வதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்றும், இது இந்திய மீனவர்கள் ஆழ் கடலில் சென்று மீன்பிடிப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கு ஒரு தீர்வாக அமையும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அரசுகளால் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளை அனுமதிக்காத வகையில் தொழில்புரிய வேண்டும் என்ற அடிப்படையில் இந்த கூட்டுத் தொழில் முறைபற்றி முடிவெடுக்கப்படும் என்று அமைச்சர் கூறியிருப்பது ஏற்கத் தக்கதல்ல என இலங்கை-இந்திய மீனவ பிரதிநிதிகள் குழுக்களுக்கிடையில் அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டிருந்த மன்னார் மாவட்ட மீனவர் சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்டின் சொய்சா குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அடுத்த மாதம் இருநாட்டு மீனவ பிரதிநிதிகள் இரண்டாம் கட்டமாக சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தவுள்ள நிலையில்வெளியிடப்பட்டுள்ள அமைச்சரின் இந்தக் கூற்று மீனவர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஏற்கனவே நடைபெற்றுள்ள பேச்சுவார்த்தைகளில் இலங்கை எல்லைக்குள் யாரும் அத்துமீறி நுழையக் கூடாது என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக எதிர்வரும் மார்ச் மாதம் 13 ஆம் திகதி வரையில் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பினுள் பிரவேசிக்கக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் நடக்கவிருக் கும் பேச்சுவார்த்தைகளில் மீனவர் கள் சார்பாகவும், மன்னார் மாவட்ட மீனவர் சம்மேளனத் தலைவர் என்ற ரீதியிலும், இந்தியாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் எடுக்கப்பட்டுள்ள முடிவை நாங்கள் மீளவும் வலியுறுத்துவோம்.

இருநாட்டு மீனவர்களும் கூட்டுத் தொழிலில் ஈடுபடலாம் என்ற முடிவுக்கு நாங்கள் ஒருநாளும் உடன்பாட்டுக்கு வரமாட்டோம் என்றார்.

இது பற்றி கருத்து வெளியிட்ட யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அந்தோனிபபிள்ளை எமிலியான்பிள்ளை, கட்டுப் பாட்டுகளுக்கு உட்பட்டு இந்திய மீனவர்கள் கூட்டுத்தொழிலில் ஈடுபடுவார்களா? என்பது சந்தேகமே என்று தெரிவித்தார்.

எல்லை தாண்டி மீன்பிடிப்பதற்கு வரக் கூடாது என்று கூறி, அவ வாறு வருபவர்களைக் கைது செய்து சிறைச்சாலைகளில் அடைத்தும், நீதிமன்றங்களில் நிறுத்தியும் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்துகின்ற போதிலும், இந்திய மீனவர்கள் எல்லைதாண்டி வருவதை நிறுத்தவில்லை.

காரணம் எல்லை தாண்டி வந்து எங்கள் கடல் வளத்தை அழித்து பாரிய இலாபத்தை ஈட்டுவதில் இந்திய மீனவர்கள் பழகிப் போயிருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்கள் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு செயற்படுவார்கள் என்று சொல்ல முடியாது.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு வரக் கூடாது என்பதே இதற்கு ஒரே தீர்வு என்பது எங்கள் கருத்து என்றார். (அ-2)




***பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டு கடந்த மூன்று வருடங் களாக சிறையில்வாடும் கிளிநொச்சி திருநகரை சேர்ந்த வீரலிங்கத்தின் மகன் அண்மையில் இறப்புற்றதை தொடர்ந்து கனடா வாழவைப்போம் அமைப்பு மற்றும் ஜேர்மன் வாழ் தமிழ் உறவுகள் இணைந்து ஒரு இலட்சத்து இருபது ஆயிரம் ரூபா பண உதவியை வழங்கியுள்ளனர்.***

# அரசு சகல மதங்களுக்கும் மதிப்பளிக்கும் -ஜனாதிபதி

எந்தவிதமான பிரிவினைகளும இன்றி அனைத்து மதங்களையம் பாதுகாப்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



கேரகல பத்மாவதி பிரிவெனயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி இந்த கருத்தை வெளியிட்டார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பௌத்த சாசனத்தை பாதுகாப்பதற்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்கும் அதேவகையில் ஏனைய மதங்களுக்கும் மதிப்பளிப்பளிக்கும்.

சில அரசியல் கட்சிகள் சர்வதேச சமூகத்தின் மத்தியில் பிழையான சித்திரிப்புகளை தோற்றுவித்தாலும், அரசாங்கம் அனைத்து இனங்களுக்கும் சமதன்மைகளுடன் பணியாற்றி வருகிறது.

இலங்கையின் எதிர்கால சந்ததியினர் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி நன்மை, தீமைகளை புரிந்துகொண்டு செயற்படவேண்டும்.

அதற்கு பெற்றோரும் அவதானம் செலுத்தி செயற்பட வேண்டும் என்றும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (அ-2)

# அனந்தி சசிதரன் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து கடிதம் அனுப்பினார்

(கொழும்பு)

ரஜீவ்காந்தி கொலைவழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட பின்னர், ஆயுள் தண்டனை அண்மையில் விதிக்கப்பட்ட மூன்று தமிழ் இளைஞர்களது முழுமையான விடுதலை தொடர்பாக தாங்களும் தங்கள் அரசும் மனோதர்மத்தின்படியும் மனிதநேயத்தின் அடிப்படையிலும் எடுத்த முடிவு உலகம் வாழ் தமிழர்கள் அனைவருக்கும் பெருமகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கி ன்றது.

இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தமிழக அரசின் நடவடிக்கைகளை சரித்திரத்தில் பதியப்படும் என்பது உண்மையே. இந்த வகையில் தாங்கள் தமிழ்பேசும் நல்லுலகத்தினரால் என்றென்றும் நன்றியுடன் நினைக்கப்பட வேண்டியவரே எனத்தெரிவித்துள்ளார் வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன்.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு அவர் நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு எழுதியுள்ளார்.

அவர் குறிப்பிட்டவை வருமாறு,

தமிழகத்தில் சிலதசாப்த காலமாக அகதி முகாம்களில் பல்வேறு துன்ப, துயரங்களை சுமந்தபடி பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தபடி அகதிகள் என்ற பெயரில் நிரந்தரமாக அடையாளப்படுத்தப்பட்டவர்களாக வாழ்ந்துவரும் ஈழத்தமிழர்கள் பற்றி தங்கள மேலான கவனத்திற்கு கொண்டு வருவதன் மூலம் அவர்கள் வாழ்விலும் இயல்பு நிலைமையினை தோற்றுவிக்க வேண்டும் என நாம் விரும்புகிறோம்.

உண்மையில் அவர்கள் அகதிகளும் அல்ல. அநாதைகளும் அல்ல. சிங்கள அரசின் அளப்பரிய கொடுமைகளுக்கு முகம்கொடுக்கமுடியாது உயிர்பாதுகாப்பிற்கென மட்டுமே புலம்பெயர்ந்து வந்தவர்கள்.

கடந்த நான்கு தசாப்தங்களில் அவர்கள் வசதிகளற்ற அகதிமுகாம்களிலும் சிறப்புமுகாம் என அழைக்கப்படும் தடுப்புமுகாம்களிலும் படும் இன்னல்கள் ஒன்றும் இரகசியமானதல்ல. அவர்களும் அவர்களது உறவுகளும் சொந்த மண்ணிற்கு திரும்பி இயல்பு வாழ்க்கை வாழும் எதிர்காலம் குறித்த நம்பிக்கையற்ற நம்பிக்கைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்குள்ளவர்களின் துன்ப, துயரங்களை நேரில் சென்று பார்த்தாலே புரிந்துகொள்ள் முடியும்.

இந்த நிலையில் தங்களால் சொந்த மண்ணிற்கு திரும்பும் வரையிலான காலம் கண்ணியமான அவர்கள் குறைந்தபட்சம் தக்கும் மனித உணர்வுகளை இழக்காமல் வாழ்வதற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது தமிழக அரசினதும் முதல்வராகிய உங்களதும் மனிதநேய கடமையாகும் என எண்ணுகிறோம்.

மரணதண்டனைக் கைதிகளில காட்டிய மனிதநேயமும் நியாய உணர்வும் ஈழத்தமிழ் அகதிகள் விடயத்திலும் அக்கறையுடன் காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை எம்மக்களுக்கு ஏற்பட்டுள்ள தென்றுள்ளது. (அ-2)

# மாத்தளை மனித புதைகுழி சாட்சியங்கள் பதிவாகின்றன

(மாத்தளை)

மாத்தளை பொது வைத்தியசாலை வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட மனித புதைகுழி தொடர்பான விசாரணைகளுக்காக, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சாட்சியங்கள் பதிவுசெய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

87 பேரிடம் இன்றைய தினம் சாட்சியங்கள் பதிவு செய்யப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் எம்.ஏ.சிரில் குறிப்பிட்டார்.

மாத்தளை மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணிக்கு ஆரம்பமான சாட்சிய பதிவுகள் மாலை 5 மணிவரை இடம்பெற்றதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மனித புதைகுழி கண்டெடுக்கப்பட்ட பகுதியில் ஆய்வுகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாக எம்.ஏ.சிரில் கூறினார்.

2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையில், மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளில் 155 மனித எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து, மாத்தளை புதைகுழி தொடர்பான விசாரணைகளுக்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மீனவர் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படும்

## முன்னாள் வெளிவிவகார அமைச்சர் சின்ஹா

தமிழக மீனவர் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும் என முன்னாள் இந்திய வெளி விவகார அமைச்சர் யஸ்வந்த் சின்ஹா தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில், தமிழக மீனவர் பிரச்சினைக்கும் இலங்கை தமிழர் பிரச்சினைக்கும் மூன்று மாதகால இடைவெளிக்குள் தீர்வு வழங்கமுடியும்.

பாரதீய ஜனதா கட்சி ஆட்சியை ஏற்றுக் கொண்டால் குறுகிய காலத் தில் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முடியும். நான் பதவி வகித்த காலத்தில் எந்தவிதமான பிரச்சினைகளும் இருக்கவில்லை. இலங்கைப் பிரச்சினைகள் குறித்த காங்கிரஸ் அரசாங்கத்தின் அணுகுமுறை ஏற்றுக் கொள்ளக் கூடிய தல்ல என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பது ஆண்டு கால யுத்தமும் யாழ். மாவட்டத்தின் சமூக பொருளாதார அரசியல் மாற்றங்களும் பிரச்சினைகளும்



Dr. சி. விஜயகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொருளியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்

சென்ற வாரத் தொடர்ச்சி...

### நீர்ப்பங்கீடு

யுத்தத்தின் பின்னரான முக்கிய சமூகப் பிரச்சினையாக நீர்ப்பங்கீடு உருவாக்கம் பெற்று வருவது மிகவும் கவலைக்கிடமான விடயமாகும்.

யாழ். மாவட்டத்தில் நீரைப் பெறுவதில் பொது மக்கள் இடர்பாடுகளை பல ஆண்டுகளாக எதிர்நோக்கி வருவது உண்மையே. ஆனால் நீர்த்தட்டுப்பாடு என்ற விடயம் யாழ்ப்பாண மக்களுக்குப் புதியது. கரவெட்டி நீர்ப் பிரச்சினையுள்ள பிரதேசம் தான் ஆண்டாண்டு காலமாக இப்பிரதேச மக்கள் நீரைப் பெறுவதில் இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர். ஆனால் தேவையான நீரை அவர்களால் ஒரு கிலோ மீற்றர் அல்லது 2 கிலோ மீற்றர் தூரத்திற்குச் சென்று தமது தேவையை பூர்த்தி செய்து கொள்ளலாம். மேலும் குழாய் நீர் மூலம் தமது தேவையின் ஒரு பகுதியை நிறைவு செய்து வருகின்றார்கள்.

உண்மையில் சென்னை நகரில் ஒரு குடம் நீரைப் பெற மக்கள் எவ்வளவு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். சொல்லொணாத்துன்பங்களை அவர்கள் அனுபவிக்கின்றனர். நீரை அளந்து செலவளிக்கின்றனர்.

குடிப்பதற்கு தினமும் பல நூறு ரூபாய்க்களை செலவு செய்கின்றனர். உண்மையில் யாழ்ப்பாணத்தில் இன்னும் நீர்த்தட்டுப்பாடு ஏற்படவில்லை. இப்போதைக்கு ஏற்படப் போவதுமில்லை. அவ்வாறு இருக்க ஏன் நாங்கள் எமது சகோதரர்கள், உறவினர்கள் வாழ்ந்துவருகின்ற கிளிநொச்சி மாவட்ட மக்களோடு முரண்பாட்டை ஏற்படுத்த வேண்டும்? கிளிநொச்சி மாவட்டம் விவசாயத்தை அடிப்படையாக கொண்டது.

அதுவே அவர்களது வாழ்வாதாரமுமாகும். நீர் அவர்களுக்கு அத்தியாவசியப் பண்டமாகும். நீர் அவர்களது அடுத்த நாள் வாழ்க்கைக்கான முதலீடாகும். அவர்களுக்குத் தேவையான நீரை அவர்களுக்கு வழங்காமல் அதை எவ்வாறு யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவர முடியும்.

உண்மையில் சம்பந்தப்பட்டோர் முதலில் கிளிநொச்சி மாவட்ட மக்களின் நீர்த் தேவை பூர்த்தி செய்யப்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துங்கள். அங்குள்ள விவசாயிகளைக் கொண்டு ஓர் குழுவை அமையுங்கள்.

அவர்களது ஆலோசனையைப் பெறுங்கள். நாங்கள் அடைய வேண்டிய அரசியல் உரிமைகளுக்காக போராட வேண்டிய சூழ்நிலையில் உள்ளோம். எமக்குள் முரண்படுவது எதிரிகளுக்கு பலத்தை அளிப்பதோடு சீரழிவு நிலைக்கு எம்மை அவர்கள் தள்ளி விடுவதற்கு நாமே நமக்கும் பொறி அமைத்தவர்களாவோம்.

முதலில் யாழ்ப்பாணத்திலுள்ள நன்னீர் ஏரித்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். குளங்களை புனரமைத்து நீர் ஆதாரங்களைப் பேண வேண்டும்.

அதைவிடுத்து காவிரி ஆற்று நீருக்காக கர்நாடக- தமிழ் நாடு அரசுகள் மோதிக் கொள்வது போல, கலவரம் ஏற்பட்டது போல இங்கும் ஓர் சூழ்நிலையை ஏற்படுத்த முனைவது நமது வங்குரோத்து சிந்தனையையும் வங்குரோத்து அறிவையுமே காட்டி நிற்கிறது.

இப்போது இரணைமடு நீர்ப்பாசன திட்டத்தின் பலா பலன்களை முதலில் அம் மாவட்ட மக்கள் அனுபவிப் பதை உறுதி செய்ய வேண்டும். இதன் பின்னர் நன்கு வடிவமைக்கப்பட்ட ஓர் குழுவை நியமித்து நீர்ப்பங்கீடு தொடர்பாக ஆராயலாம்.

இரணைமடுக்குளத்திட்டம் ஓர் அரசியல் செய்யும் திட்டம் அல்ல. அது சாதாரண விவசாயிகளின் வாழ்வாதார திட்டம் என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

### கலாசார சீரழிவுகள்

கலாசார சீரழிவுகள் பற்றி யுத்தம் முடிவடைந்த பின்னர் பத்திரிகைகளில் நாளாந்தம் வரும் செய்தியாகவுள்ளது. 5 வயதுக் குழந்தை 10 வயதுக் குழந்தைகளை வன்புணர்வு செய்யும் ஒரு கூட்டம் உருவாகியமை யுத்தத்தின் விளைவே.

பிஞ்சுப் பாலகர்களை கொஞ்சி செல்லக் கதை கேட்கும் நேரத்தில் வக்கிர மனப்பான்மை யோடு செயற்படும் நபர்கள் தொடர்பில் நாம் விழிப்புணர்வுடன் இருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் பெற்



கல்வித் தரிசனம்

றோர்கள் தமது குழந்தைகளை தமது கண்காணிப்பில் வைத்திருப்பது சிறந்தது. அயலவர்கள் உறவினர்கள் போன்றோரினால் பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை இலங்கையில் அதிகரித்து வருவதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

யாழ்ப்பாண கலாசார பண்பாட்டு இறுக்கம் காரணமாக அவ்வாறான செய்திகள் வெளி வருவது குறைவாகும்.

எனவே பெற்றோர்கள் இது தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

கணனி உபயோகம், இணையத் தளபாவனை, முக நூல் என்றவாறான அறிவியல் புரட்சியின் பலாபலன்களை ஒதுக்கித்தள்ளி விட முடியாது.

யுத்தம் முடிவடைந்த பின்னரே எமது மக்கள் இவ்வாறான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பலா பலன்களை அனுபவித்து வருகின்றனர். கால ஓட்டத்தில் இது அவசியமானது, ஆரோக்கியமானது. அதனை எமது அறிவை பெருக்கக் கூடியவிடயங்களுக்கு எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை மாணவர்களுக்கு வழிகாட்டுவது பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் கடமையாகும்.

அதைவிடுத்து மாணவர்களை அதிலிருந்து தூரவைப்பது, வைக்க முயல்வது உசிதமானதல்ல. இணையத் தளப்பாவனைகளை தனியார் நிலையங்களுக்குச் சென்று பயன்படுத்துவோர் தவறான வழியில் செல்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திவிடுகிறது.

எனவே கூடிய அளவிற்குப் பெற்றோர்கள் தமது வீடுகளில் தமது மேற்பார்வையின் கீழ் இணையத்தளத்தை பயன் படுத்துவதற்கு அனுமதிப்பது ஆரோக்கியமானதாகும்.

### நுகர்வுக்கோலம்

பெரும்பாலான மக்கள் 1980 களிலும் 1990களின் ஆரம்பத்திலும் சாதாரண அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு கூட போதியளவான வருமானத்தைக் கொண்டிருக்கவில்லை.

யுத்தம் தீவிரமடைந்து பெருமளவான இளைஞர்களும் நடுத்தர வயதுடையவர்களும் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று பின்னர் யாழ்ப்பாண தமிழர்களின் நுகர்வுக் கோலத்தில் பாரியளவான மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

அயலவர்கள், உறவினர்கள் ஆகியோர்களின் நுகர்வுக் கோலத்தை பின்பற்றும் பழக்கம் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு இருந்த போதும் அதற்கு வருமானம் முக்கிய ஒரு தடையாக இருந்தது.

சாதாரண மக்களினால் மற்றவர்களின் நுகர்வை பின் பற்றுவது கடினமானதாக இருந்தது. சிறுதொகையான வசதி படைத்தோர் மாத்திரம் உயர் கொள்வனவு ஆற்றலைக் கொண்டிருந்ததோடு தமக்கு விரும்பிய நுர்வுக் கோலத்தை அமைத்துக் கொண்டனர்.

> **யா/ கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் நிறுவுநர் வீரபாகு சிற்றம்பலமுடையார் நினைவுப்பேருரை, பொருளியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சின்னத் துரை விஜயகுமார் அவர்களால் 12.01.2014 அன்று ஆற்றப்பட்டது.**

ஆனால் தற்போது யாழ்ப்பாண மக்களில் குறிப்பிட்டத்தக்களவானோர் ஓர் குறித்தளவான கொள்வனவாற்றலை கொண்டிருக்கின்றனர்.

தற்போது அயலவர்கள், உறவினர்களது நுகர்வுக் கோலத்தை பின்பற்றும் நுகர்வோர் கூட்டம் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ளது.

காணி கட்டடம் போன்ற மெய் ஆதனங்களின் விலை செங்குத்தாக உயர்ந்தமை இதற்கு நல்ல ஆதாரமாகும். சாதாரண கேள்வி நிரம்பல் விலைப் பொறி முறைக்கு அப்பாற்பட்டதாகவே இவ்விலை உயர்வு காணப்படுகிறது.

இது சராசரியாக யாழ்ப்பாண மக்களின் நுகர்வு ஆற்றல் பல மடங்கு உயர்ந்துள்ளமையே காட்டுகிறது.

### சாதியமைப்பின் தீவிரத்தன்மையில் மாற்றம்

1970களில் யாழ்.மாவட்டத்தில் சாதிப்பாகுபாடு ஆழமாக காணப்பட்டது. சாதி ஒரு தீவிரவாதி போல செயற்பட்டமை நினைவுகூரத்தக்கது பொருத்தமானது.

பெரும்பாலான சாதியினருக்கு சமூக அந்தஸ்து இருக்கவில்லை. சாதியச்சண்டைகளும் மலிந்து காணப்பட்டன. உயர் சாதியினர் தாழ்ந்த சாதியினர் என்ற அடிப்படையில் உயர் சாதியினரின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிவது பிறப்புக் கடமையாக காணப்பட்டது. கல்வியைத் தொடர்வதில் தடைகள் காணப்பட்டன. சாதிக் குரிய தொழிலை அல்லது தந்தை செய்த தொழிலை பிள்ளைகள் பின்பற்ற வேண்டிய நிலை காணப்பட்டது.

இது ஒட்டுமொத்த சமூக பொருளாதாரத்திற்கு உகந்ததாக இல்லை. இவ்வாறு இறுக்கமாக இருந்த சாதிமுறை யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் படிப்படியாக வலுவிழந்து சாதியின் தீவிரத்தன்மை தொய்வு நிலைக்கு வந்துவிட்டது.

தமிழர்களின் விடுதலையை முன்னெடுத்தோர் சாதி முறையின் தீவிரத்தன்மையினைபோக்கு வதற்கு கடுமையாக உழைத்தனர். சாதியை முன்நிறுத்துவது ஒரு குற்றமாக கருதப்பட்டு சில சந்தர்ப்பங்களில் தண்டனைகளும் வழங்கப்பட்டன.

இம்மாற்றங்களினால் எல்லா சமூகத்தினருக்கும் கல்வி கற்கும் வாய்ப்பு கிட்டியது. தான் விரும்பும் தொழிலை தனது கல்வி மற்றும் ஆற்றலுக்கேற்ப செய்தற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கின்றது.

சாதிரீதியான பிணக்குகளிலும் செங்குத்தான ஓர் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. சாதியின் தீவிரத்தன்மையின் வீழ்ச்சியோடு எல்லோரும் கல்வி கற்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டதனால் நடுத்தர மற்றும் உயர் அந்தஸ்துள்ள தொழில்களில் எல்லா சமூகத்தினருக்கும் வாய்ப்புக் கிட்டி யது.

இன்றைக்கு சகல சமூகத்தினரும் படித்தசமூகத்தினரே. யுத்தத்தின் மிகப் பெரிய விளைவு சாதியத்தின் தீவிரத் தன்மை குறைந்ததும் எல்லா சமூகத்தினரும் சமமானவர்கள் என்ற அங்கீகாரம் கிடைத் தமையே ஆகும். இது இளைஞர் போராட்டத்தின் முக்கிமான சமூக சீர்திருத்தமாகும்.

### கல்வி

கடந்த 30 வருட யுத்தம் காரணமாக யாழ்.மாவட்ட மாணவர்கள் நவீன கல்வியின் பலாபலன்களை அடைந்து கொள்ள முடியாதவர்களாக இருந்தனர். யுத்தத்தின் தீவிரத் தன்மை மற்றும் போக்குவரத்துத் தடைகள் காரணமாக உயர் கல்வியை தொடர்வது கடின மானதாக இருந்தது. கடும் யுத்தம் தவிர வருமானமும் உயர்கல் வியை தொடர்வதற்கு தடையாக இருந்தது. ஆனால் 2002 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட் பின்னர் உயர் கல்விக்காக சாதாரண குடும்ப பிள்ளைகள் வெளிநாடுகளுக்கு செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

1970,1980களில் செல்வம் படைத்தோர் மட்டும் உயர் கல்வியினையும் வெளிநாட்டில் கல்வி கற்கக்கூடிய நிலைமையும் காணப்பட்டது. ஆனால் யுத்தம் தீவிரமடைந்த பின்னர் சாதாரண குடும்பத்து இளைஞர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு இடம்பெயர்ந்தமை காரணமாக அவர்களது பணத்தை முதலீடாகக் கொண்டு அவர்களது சகோதரர்களும் உறவினர்களும் உள்நாட்டில் உயர்கல்வியினையும் வெளிநாட்டிற்குச் சென்று மருத்துவம், பொறியியல், தொடர்பாடல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் கல்வியை கற்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

உயர்கல்வி மற்றும் வெளிநாட்டுக் கல்வி உயர்குடிகளுக்கு என்ற நிலை மாறி சாதாரண குடும்பத்து பிள்ளைகளும் பல்வேறு துறைகளில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கல்வி கற்கக்கூடிய வாய்ப்பை யுத்தம் வழங்கியுள்ளது.

### முடிவுரை

30 வருடகால நீண்ட யுத்தம் காரணமாக பெறுமதிமிக்க மனித உயிர்களும் பௌதீக மெய்ச் சொத்துக்களும் அழிவடைந்துள்ளன. எமது தொழிற்றுறைகளான விவசாயம் மீன்பிடி, சிறுகைத் தொழில்கள் என்பன நலிவு நிலைக்கு வருவதற்கு யுத்தம் பிரதான காரணமாயிற்று.

மீன்பிடிப்பதற்கு நீண்ட தடைகள் காணப்பட்டன.

ஆழ்கடலிற்குச் சென்று மீன் பிடிக்க இயலாத நிலை காணப்பட்டது. விவசாய நிலங்கள் பெருமளவு இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் காணப்ப ட்டன.

விவசாய உள்ளீடுகளை பெறுவது மிகச்சிரமமான காரியமாக இருந்தது. சிறு கைத் தொழிலுக்கு தேவையான மூலப் பொருட்களை பெற முடியாத நிலை காணப்பட்டது.

ஒட்டுமொத்தமாக எல்லாத்துறைகளும் மந்தநிலையில் காணப்பட்ட போதும் யாழ்ப்பாண பொருளாதாரம் சரிந்துவிடவில்லை.

ருவாண்டா போல், சூடான் போல் குழந்தைகளும் பெற்றோர்களும் உணவுக்காக தெருக்களில் அலையவில்லை.

நலிந்த ஊட்டச்சத்தற்ற குழந்தைகள் பெருளமவில் காணப்படவில்லை. ஐரோப்பா மற்றும் கனடா போன்ற நாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட பணம், அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கிய நிவாரணங்கள் வறிய மக்களின் உணவுத்தேவையை ஓரளவு பூர்த்தி செய்தது.

ஏற்கனவே குறிப்பிட்டது போல யுத்தத்தின் மிகப் பெரிய பாதக விளைவு பெருமளவு பெறுமதிமிக்க மனித உயிர்கள், வீடுகள், கட்டங்கள், உட்பட மெய்ச் சொத்துக்கள் அழிவடைந்தமையேயாகும்.

மறுபுறமாக யாழ்ப்பாணத் தமிழர்களின் சேமிப்பு, உறவினர்கள் ஐரோப்பிய நாடுகளிலிருந்து அனுப்பிய பணம், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் வீட்டு மற்றும் நிவாரணத் திட்டங்கள் போன்றவை சராசரியாக யாழ்ப்பாண குடும்ப பொருளாதாரம் முன்பை விட ஒரு உயர்வு நிலைக்கு வருவத ற்கு காரணமாகும்.

ஆனால் மட்டக்களப்பு, அம்பாறை, முல்லைத்தீவு, மன்னார் போன்ற வடக்கு மற்றும் கிழக்கு மாவட்டங்கள் யுத்தத்தினால் கடும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது. வறுமை மட்டமும் மாவட்டங்களில் முன்பை விட உயர்வு நிலையிலேயே இருக்கிறது. (முற்றும்)

கல்வித் தரிசனம் பகுதிக்கு
துறைசார்ந்தவர்களிடமிருந்து
தரமான ஆக்கங்கள்
கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3.2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.

(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்கப்பட்ட 81 மனித எச்சங்கள் குறித்து பரிசோதனை அவசியம் வைத்திய அதிகாரி வைத்தியரட்ன

மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் தோண்டப்பட்டு வரும் மனித புதைகுழியில் இருந்து இதுவரை 81 மனித எலும்புக்கூடுகள் மீட்கப் பட்டுள்ளன. இவை குறித்து பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண் டும் என்று அநுராதபுரம் நீதிமன்ற வைத்திய அதிகாரி தனஞ்செய வைத்தியரட்ன தெரிவித்துள்ளார்.

இதுவரை மீட்கப்பட்ட 81 மனித எலும்புக்கூடுகள் மற்றும் எச்சங்கள் யாவும் பத்திரமாக வைக்கப்பட்டுள்ளதாக அந்த வைத்திய அதிகாரி தனஞ்செய வைத்தியரட்ன குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு தோண்டப்பட்ட குழியில் இருந்து பெண்கள் மற்றும் சிறு வர்களின் எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன. இந்நிலையில் இவர்கள் எவ்வாறு கொல்லப்பட்டனர் என்பதை கண்டுபிடிக்க மேலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வைத்தியரட்ன குறிப்பிட்டார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதாக கூறப்படுவதன் பின்னர் தோண்டப்படும் பாரிய மனித புதைகுழி இது வென்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாக்க முன்னிற்கிறோம் பொதுபல சேனா தெரிவிப்பு

(கொழும்பு)

சிங்கள பௌத்தர்களின் உரிமைகளுக்காக மட்டுமல்ல தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாக்கவும் பொதுபல சேனா முன்னின்று செயற்படுகின்றது என அதன் பொதுச் செயலாளர் கலாநிதி அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். வெளிநாடுகளிடம் நாம் பணம் வாங்குவதை அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவினால் நிரூபிக்க முடியுமா என்றும் அவர் சவால் விடுததுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

எந்தவொரு நாட்டிடமிருந்தோ அமைப்புக்களிடமிருந்தோ அல்லது அரசாங்கத்திடமிருந்தோ நாம் பணம் வாங்கவில்லை. மாறாக எமது பக்தர்கள் வழங்கும் நிதியுதவிகள் மூலமே சிங்கள பௌத்த மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக் கின்றோம்.

அது மட்டுமல்லாது, கிழக்கில் தமிழ் மக்கள் தமது தீர்த்து வைக்க ப்படாத பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொள்ள எம்மை நாடி வருகின்றனர். இவர்களுக்கான அமைச்சர்கள் எவரும் எப்போதாவது உதவி செய்திருக்கின்றார்களா? சிங்கள பௌத்தர்களுக்கு எதிரான அந்நிய சக்திகளின் சதிகளை வெளிப்படுத்திய எந்தவொரு அமைச்ச ரையும் உங்களால் அடையாளம் காட்ட முடியுமா? அவ்வாறானவர்கள் இன்று பொதுபல சேனா வெளிநாடுகளிடம் பணத்தை வாங்கிக்கொண்டு வெளிநாட்டு தலையீட்டுக்கு துணை போகின்றது என குற்றஞ்சாட்டுகி றனர்.

சிங்களமாகட்டும் தமிழாகட்டும் முஸ்லிமாகட்டும் இதனூடான அடிப்படை வாதத்தையே நாம் எதிர்க்கின்றோம் என்றார். (அ-2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி சிற்றம்பலம் சிவபாதநாயகி

தெல்லிப்பழை பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் சிவபாதநாயகி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வட்டுக்கோட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி யோகராஜா வாலாம்பிகை

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு தெகிவளையை வசிப்பிடமா கவும் கொண்ட யோகராஜா வாலாம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியர்) கடந்த 24 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 8 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### நாராயணபிள்ளை சுப்ரமணியம்

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நாராயணபிள்ளை சுப்ரமணியம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு கொழும்பில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெறும்.



### டேவிற் இராஜகாரியர் இராஜதுரை

கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Heilbronn ஐ வசிப்பிடமாகவும் கொண்ட டேவிற் இராஜகாரியர் இராஜதுரை கடந்த 24 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு Bergfriedhof, Bad Friedrichs hall , Germany என்னும் முகவரியில் நல்லடக்கம் செய்யப்படும்.



### கிருஸ்ணபிள்ளை கணேசன்

காளுவன்,சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை கணேசன் கடந்த 24 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்றுமுற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### லக்ஷனா குலேந்திரராஜா

கனடா மொன்றியலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லக்ஷனா குலேந்திரராஜா கடந்த 24 ஆம் திகதி திங்க ட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் மார்ச் மாதம் இரண்டாம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு அடக்கம் செய்யப்படும்.




### ஆறுமுகசாமி குகேந்திரா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் லண்டன் Barnet ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஆறு முகசாமி குகேந்திரா கடந்த 22 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு St.Mary lebone Crematorium,E End Rd, East Finchley, London N2 ORZ ,United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாய் மடியில் 14 02 1929
ஈசன் மடியில் 19 12 1999

சண்முகம் இராமலிங்கம்



தாய் மடியில் 29 06 1979
ஈசன் மடியில் 20 02 2012

இராமலிங்கம் அருள்நிதி

வாழ்க்கையிலே மறக்க நினைக்கும் நாள்
ஆனால் நினைவிலோ நீங்காத நாள்
அதுதான் சிவராத்திரி நாள்
அருள் நீ உயிர் நீத்த கோர நாள்
என்றும் நீங்காத நினைவுகளுடன்

செங்குந்தர் வீதி,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

தொ.பே.இ. 0775713311.

(சி-6600)

# திருமறைக் கலாமன்றம் நடத்தும் நாடக விழா சனி, ஞாயிறு தினங்களில்

நாடகத்தை நோக்கிய பார்ப்போரின் வருகையை அதிகரிக்கச் செய்யும் நோக்குடனும், உதிரிகளாக மேடையேற்றப்பட்ட நாடகங் களை ஒரே களத்தில் ஒன்றிணைக்கும் செயற்பாடாகவும் திருமறைக் கலாமன்றம் ஏற்பாடு செய்துள்ள *நாடக விழா* எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் (சனி,ஞாயிறு) நடைபெறவுள்ளது.

இல, 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இரு நாட்களும் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள நாடக விழாவில் ஏழு வகையான நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன.

முதலாம் நாளில் *நிற்க கற்க, எட்டு முள வேட்டி* ஆகிய நவீன நாடகங்களும் *குவேனி தென்மோடி* நாட்டுக்கூத்தும் மேடையேற றப்படும். இரண்டாம் நாளில் *மண விலங்குகள், எதற்கும் ஒரு காலமுண்டு* ஆகிய நவீன நாடகங்களும் *கடமை வீரன், சிறுவர் நாடகம், சத்திய வேள்வி* இசை நாடகம் ஆகியனவும் மேடையேற றப்படும்.

இலவசமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நாடக விழாவை பார்வை யிட நாடகக் கலையில் ஆர்வமுள்ள அனைவரையும் வருகை தருமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (அ)

சாமுண்டீஸ்வரிதுணை

## ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி அம்மாள் தேவஸ்தானம் கோட்டுவாசல்- பருத்தித்துறை

### குருக்கள் தேவை

கோட்டுவாசல் ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி தேவஸ்தானம் அறியத்தருவது ஆலயத்திற்கு பிரதம குருக்கள் தேவை. குருக்கள் பட்டம் தரித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். 30 நாட்களுக்குள் தொடர்பு கொண்டு விபரங்களை நேரிலே தெரியப்படுத்தவும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்.**

ஆலய பரிபாலகர் தீபானந்தன்:-0776520315,
தர்மகர்த்தா சந்திரமூர்த்தி:-077 4173180, 021 2260052

(சி-6599)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவநீதம்பிள்ளையின் பரிந்துரையை நிறைவேற்றவேண்டும்

## பா.ம.க.நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்து

(சென்னை)

**இலங்கை போர்க்குற்றம் குறித்து நவநீதம்பிள்ளை பரிந்துரையை நிறைவேற்ற வேண்டும் என பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.**



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கைப் போரின் போது நடந்த மனிதவுரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் மீது அங்கு நடைபெறும் விசாரணைகளை கடந்த ஆண்டு நேரில் ஆய்வு செய்த ஐ.நா. மனிதவுரிமை ஆணையர் நவநீதம்பிள்ளை, அவரது இறுதி அறிக்கையை ஐ.நா. மனிதப் பேரவையில் அடுத்த மாதம் 26 ஆம் திகதி தாக்கல் செய்யவிருக்கிறார்.

முன்கூட்டியே வெளியிடப்பட்டுள்ள அவரது அறிக்கையில், இலங்கை அரசு நடத்திய போர்க்குற்ற விசாரணை ஐ.நா.வுக்கு திருப்தியளிக்கவில்லை என்று கூறபபட்டிருக்கிறது.

ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையின் 24 ஆவது கூட்டத்தில் பங்கேற்ற முன்னாள் மத்திய அமைச்சரும், பா.ம.க. இளைஞர் அணித் தலை வருமான மருத்துவர் அன்பு மணி ராமதாஸ், இலங்கைப் போருக்கு பின்னரும் அங்கு நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் இனப்படுகொலைகளை பட்டியலிட்டு, அது குறித்து சுதந்திரமான சர்வதேச விசாரணைக்கு ஆணையிட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

தமிழகத்திலுள்ள பெரும்பாலான கட்சிகள் மற்றும் அமைப்புகளின் நிலைப்பாடும் இதுவாகவேயுள்ளது.

பா.ம.க. உள்ளிட்ட கட்சிகளின் குற்றச்சாட்டை உறுதி செய்யும் வகையிலேயே ஐ.நா. மனிதவுரிமை ஆணையர் நவநீதம்பிள்ளையின் இறுதி அறிக்கையும் அமைந்திருக்கிறது. இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மறுவாழ்வு மற்றும் மறுகட்டுமான வசதிகளை செய்து தருவதில் ஓரளவு முன்னேற்றம் எட்டப்பட்டிருக்கும் போதிலும், இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து சுதந்திரமான, நம்பகமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற ஐ.நா.வின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையிலோ, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கும் வகையிலோ எந்த நடவடிக்கையையும் இலங்கை மேற்கொள்ளவில்லை என்று அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, காணாமல் போனவர்கள் பற்றி விசாரிப்பதற்காக தனி விசாரணை ஆணையமும், இராணுவ நீதிமன்றங்களும் அமைக்கப்பட்டுள்ள போதிலும் அவை பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை . மேலும் நீதி வழங்கல் நடவடிக்கைகள் திட்டமிட்டே தாமதப்படுத்தப்படுவதாலும், பல சாட்சிகள் மிரட்டப்படுவதுடன், சில சாட்சிகள் கொல்லப்பட்டதாலும், இலங்கைப் படையினரின் அட்டூழியங்கள் குறித்து வெளிப்படையாக சாட்சி சொல்ல பாதிக்கப்பட்டவர்கள் முன்வருவதில்லை . அதே நேரத்தில் இலங்கை மீதான போர்க் குற்றச்சாட்டுகளுக்கு புதிய ஆதாரங்கள் வெளியாகியுள்ள நிலையில் பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பை உறுதி செய்தால், அவர்கள் சர்வதேச விசாரணை அமைப்பின் முன் நேர்நின்று சாட்சியமளிக்க முன்வருவார்கள் என்று கூறியுள்ள நவநீதம்பிள்ளை, இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து சுதந்திரமான சர்வதேச விசாரணைக்கு ஆணையிடும்படி ஐ.நா. மனிதவுரிமை பேரவைக்கு பரிந்துரைத்துள்ளார்.

இவ்வளவுக்குப் பிறகும் இலங்கையில் நடந்த குற்றங்கள் குறித்து அந்நாடே விசாரணை நடத்தி நீதி வழங்கும் என நம்புவது இலவு காத்த கிளி கதையாகிவிடும்.

ஈழத் தமிழர்கள் இந்தியாவை தந்தை நாடாக கருதும் நிலையில், அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதி பெற்றுத் தர வேண்டியது மத்திய அரசின் கடமையாகும்.

எனவே, இலங்கை அரசு மீதான போர்க்குற்றம் மற்றும இனப்படுகொலை குற்றச் சாட்டுக்கள் குறித்து நேர்மையான, சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்துவதற்கான தீர்மானத்தை அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனிதவுரிமை பேரவையின் 25 ஆவது கூட்டத்தில் இந்தியா தனி யாகவோ அல்லது அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்தோ கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்துகிறேன் என்று கூறியுள்ளார். (2)

## ஈழத்தமிழர் படுகொலைக்கு சர்வதேச விசாரணை அவசியம்

## சென்னையில் போராட்டம்




(சென்னை)

இலங்கையில் தமிழ் ஈழம அமைவதற்கு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும், இனப்படுகொலைக்கு எதிராக சர்வதேச விசாரணை நடத்த வேண்டும், இலங்கையில் நடந்தது போர் குற்றம் அல்ல, இனப்படுகொலை என்று மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கலெக்டர் அலுவலகம் அருகில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பங்கேற்று ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவும், மத்திய அரசுக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பினர்.

இந்த போராட்டத்தில் பங்கேற்ற அனைவரும் மத்திய அரசை கண்டித்தும், தமிழ் ஈழத்தை வலியுறுத்தியும் பதாகையை கொண்டு வந்தனர். போராட்டத்தையொட்டி அந்த பகுதியில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.

இதில் திராவிட விடுதலைக் கழக தலைவர் கொளத்தூர் மணி, பெரியார் தி.க. பொதுச் செயலாளர் கோவை ராமகிருஷ்ணன், மே-17 இயக்க நிர்வாகி திருமுருகன், இயக்குநர் புகழேந்தி, தங்கராஜ், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் மல்லை சத்யா, வடசென்னை மாவட்ட செயலாளர் ஜீவன் உள்ளிட்ட தமிழ் ஆர்வலர்கள் பலர் அதில் கலந்து கொணடனர். (2)



இஸ்ரேலிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜெர்மன் சான்சலர் ஏஞ்சலா மார்க்கெஸ், அந்நாட்டு ஜனாதிபதி ஷிமன் பயர்ஸை, ஜெருசலேம் நகரில் வைத்து சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# நைஜீரிய பாடசாலை விடுதியில் தீவிரவாதிகள் துப்பாக்கிச்சூடு

### 45 மாணவர்கள் பலி; 16 மாணவிகள் கடத்தல்

(கானோ)

நைஜீரியாவில் பாடசாலை விடுதியில் தூங்கிக் கொண்டிருந்த மாணவர்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய திடீர் தாககுதலில் 45 மாணவர்கள் பலியாகினர். 16 மாணவிகள் கடத்தப்பட்டனர்.



இத்தாக்குதல்சம்பவம் யோப் மாகாணம் புனியாடி எனுமிடத்தில் அரசுப்பாடசாலை விடுதியில் நேற்று அதிகாலை 2 மணியளவில் நடைபெற்றது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

அரசு பாடசாலை ஒன்றினுள் அதிகாலை புகுந்த தீவிரவாதக கும்பல் ஒன்று அங்கு தூங்கி கொண்டு இருந்த மாணவர்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கி சூடு நடத்தினர். மேலும் வகுப்பு அறைகளுக்கு தீ வைத்து கொளுத்தியுள்ளனர். இதில் 45 மாணவர்கள் பலியாகினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தீவிரவாதிகள் 16 மாணவிகளையும் கடத்தி சென்றுள்ளனர். அம்மாநில பொலிசார் இறந்தவர்கள் அனைவரும் மாணவர்கள் தானா என்று உடனடியாக சொல்ல முடியாது என்று கூறியுள்ளனர்.

இறந்தவர்கள் உடல்கள் அங்குள்ள வைத்தியசாலையில கருகிய நிலையில் வைக்கப் பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு அந்நாட்டு அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. தாக்குதலால் அந்நாட்டு ஜனாதிபதிக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. (2)

## உக்ரேன் பிரச்சினைக்கு அமெரிக்காவின் உதவியை கோருகிறார் யானுகோவிச்

(வோஷிங்டன்)

ஐரோப்பிய யூனியனுடன் உக்ரைனை இணைக்கக் கோரி எதிர்க்கட்சியினர் அளித்த நெருக்கடி முற்றியதால் தலைநகரை விட்டு வெளியேறிய யானுகோவிச், அங்கு நிலவும் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண உதவும்படி அமெரிக்காவை கேட்டுக்கொண்டுள்ளார்.

அமெரிக்க துணை ஜனாதிபதி பிடனை அண்மையில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு யானுகோவிச் பேசியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து பிடனின் அலுவலக மூத்த அதிகாரிகள் கூறுகையில்,

தொலைபேசி உரையாடலின்போது, உக்ரைன் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிகள் ஏற்கனவே மூடப்பட்டுவிட்டதாக யானுகோவிச்சை பிடன் எச்சரித்தார்..

இதனிடையே, உக்ரைனில் எண்ணற்ற மக்களின் உயிரிழப்புக்கு யானுகோவிச் காரணமாக இருந்தார் என்றும், அவர் தப்பி ஓடி விட்டதாகவும் கூறி யானுகோவிச்சை கைது செய்ய அந்நாடு நேற்றுமுன்தினம் பிடியாணை பிறப்பித்துள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியா செல்வமா வீரமா?
அன்னையா தந்தையா தெய்வமா?
ஒன்றில்லாமல் மற்றொன்று உருவாகுமா?
~ சரஸ்வதி சபதம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பிரம்மாவிற்கு மன்னிப்புக் கொடுத்து கோயில் கட்டவேண்டும்

இன்று சிவராத்திரி விரதம். சிவ விரதங்களில் மிகவும் வலிமையானது. இவ்விரதம் அனுஷ்டிக்கப்படுவதற்கு வேறுபட்ட புராணக் கதைகள் இருக்கவே செய்கின்றன.

அதில் ஒரு கதை இவ்வாறு கூறுகிறது. பிரம்மாவும் விஷ்ணுவும் தமக்குள் ஆணவம் கொண்டு தர்க்கப்படுகின்றனர். இருவரில் யார் பெரியவர் என்பதே தர்க்கம்.

முடிவுகளை அறிய முடியாத நிலையில் சிவப்பரம்பொருள் ஜோதியாகத் தோன்றி, இருவரில் யார் எனது அடியை அல்லது முடியை காண்கிறார்களோ அவர்களே பெரியவர் எனக் கூறுகிறார்.

சிவனின் அறிவித்தலை அடுத்து, பிரம்மா அன்னப்பட்சி வடிவம்கொண்டு ஆகாயம் நோக்கி சிவனின் முடியைக் காணப் பறக்கிறார்.

விஷ்ணுவோ பன்றி உருவெடுத்து நிலத்தைக் கிழித்து சிவப்பரம்பொருளின் திருவடியைக் காணப் பாதாளம் நோக்கி செல்கிறார்.

ஆதியும் அந்தமுமில்லா அரும் பெரும் சோதியின் அடிமுடியை இருவராலும் காணமுடியவில்லை. இருந்தும் பிரம்மா சிவனின் முடியைக் கண்டதாக பொய் சொல்கிறார். அதற்கு சிவனின் திருமுடியில் இருந்து வந்த தாழம்பூவைச் சாட்சியாக்குகிறார்.

விஷ்ணுவோ சிவனின் திருவடியை தன்னால் காணமுடியவில்லை என்பதை ஏற்றுக் கொள்கிறார். இந்நிலையில் பொய் கூறிய பிரம்மாவுக்கு பூவுலகில் கோயில் இல்லை என்றும் பொய்ச் சாட்சி கூறிய தாழம்பூவை இந்நாள் கொண்டு பூசைக்கு எடுக்கலாகாது என்றும் தண்டனை விதிக்கிறார் சிவன்.

இந்தப் புராணக் கதை நீண்டகாலத்துக்கு முற்பட்டது. எனினும் பிரம்மாவுக்கு சிவன் விதித்த தண்டனை இன்னமும் நீங்கியபாடில்லை. இப்போதெல்லாம் தண்டனைகள் குறைக்கப்படுகின்ற–மன்னிக்கப்படுகின்ற காலத்தில், இதுபற்றி நாமும் சிந்திக்கவேண்டும்.

சிவபரம்பொருள் பிரம்மாவுக்கு விதித்த தண்டனையை மன்னித்தருளினார் என்று புராணக்கதை உருவாகுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காததால், பிரம்மாவை வழிபடும் வழக்கம் நம்மிடம் இல்லாமல் போயிற்று எனலாம்.

இதனால் பிரம்மாவின் துணைவி சரஸ்வதி தேவியாருக்கும் கோயில் கட்டும் வழக்கம் நம்மரபில் இருக்கவில்லை.

விஷ்ணுவுக்கு கோயில் கட்டியதன் காரணமாக விஷ்ணு பத்தினியான இலக்குமி தேவிக்கு தனிக் கோயில் அமைக்கும் வழக்கம் வைஷ்ணவ மரபில் உண்டு. இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் அந்தக் காலத்தில் இருந்த மன்னர்கள் செல்வத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். அதனால் செல்வத்திற்கு அதிபதியான இலட்சுமிக்கும் காத்தல் கடவுளாகிய விஷ்ணுவுக்கும் கோயில் கட்டினர்.


ஆனால் படைத்தல் கடவுளாகிய பிரம்மாவுக்கும் கல்வித் தாயாகிய சரஸ்வதிக்கும் கோயில் கட்ட ஆர்வம் கொள்ளவில்லை என்றே கருதவேண்டும்.

எனவே இப்போது இருக்கக்கூடிய உலகியல் நிலையில், படைத்தலும் கல்வியும் முக்கியமானவை என்பதால் பிரம்மாவுக்கு கோயில் கட்டி அங்கு சரஸ்வதியை கொலுவிருத்தி வழிபாடு செய்யும் நடைமுறை பற்றி வேத விற்பன்னர்கள் சிந்திக்க வேண்டும்.

குழந்தைப் பாக்கியம் தரக்கூடிய பிரம்மாவுக்கு கோயில் கட்டுவது எங்கள் இனவிருத்திக்கும் சரஸ்வதி ஆலயம் கல்விப் பெருக்கிற்கும் உதவும் என்பதால், பிரம்மாவை சிவன் மன்னித்தார் என்ற புதிய புராணம் எழுதப்பட்டு நான்முகனையும் சரஸ்வதியையும் நம் மண்ணிற்கு அழைத்து வரவேண்டும் என்பது நம் சிற்றறிவின் சிந்தனை. வேதத்தில் துறைபோனவர்கள் இதுபற்றி சிந்திப்பது பயன்தரும்.

# மகா சிவராத்திரி தினத்தில் ஆன்மீகச் செயலை முன்னெடுப்போம்

## சிவதொண்டர் அமைப்பு கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி விரதம் இன்று வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்படுகின்ற நிலையில் இந்த விரதத்தை மிகவும் பக்திபூர்வமாக கடைப்பிடிக்குமாறும் விரத காலத்தில் ஆன்மீக செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் சிவதொண்டர் அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், களியாட்டங்கள், மதுபாவனை, புகைத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடாமல் இன்றைய தினத்தை புனிதமாக அனுஷ்டிக்கு மாறும் மேற்படி அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, சைவத் தமிழ் மக்கள் அனைவரும் சிவதரிசனத்தில் ஈடுபடும் பொருட்டே சிவராத்திரி தினம் பொது விடுமுறை தினமாக அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அந்த அர்த்தத்திற்கு ஏற்றாற்போன்று அனைவரும் செயற்படுமாறும் மேற்படி அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதைவிடுத்து சைவத் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்சியொன்று இன்று யாழ்ப்பாணத்தில் பொதுக் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளமையானது அந்த அரசியல் கட்சியில் உறுப்பினர்களின் சிவவழிபாட்டு உரிமையை மறுக்கும் செயல் என்றும் மேற்படி சிவதொண்டர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சிவதொண்டர் அமைப்பு நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சைவத் தமிழ் மக்களின் புனிதமான விரதமான சிவராத்திரி விரதம் இன்று உலகெங்கும் உள்ள சைவத் தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஆனால், வடக்கு, கிழக்கிலுள்ள சில தனியார் நிறுவனங்களில் 27,28 ஆம் திகதிகளில் குறித்த நிறுவனங்கள் வழமைபோன்று இயங்கும் என்று விளம்பரப் பலகைகள் தொங்க விடப்பட்டுள்ளன. அத்துடன் தமிழ் மக்களைப் பிரதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்சியொன்று தனது உறுப்பினர்கள் அனைவருக்குமான பொதுக் கலந்துரையாடல் ஒன்றை இன்று யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளது. இந்தச் செயற்பாடுகளானவை அந்த அரசியல் கட்சி உறுப்பினர்களுடையதும் நிறுவனங்களிலுள்ள சைவத் தமிழ்ப் பணியாளர்களுடையதும் வழிபாட்டு உரிமையை மறுக்கும் செயலாகும்.

பிற மதங்களின் நிகழ்வுகளில் இவ்வாறான கூட்டங்கள் நடத்தப்படுவதில்லை. வர்த்தக நிறுவனங்கள திறக்கப்படுவதில்லை. ஆனால், சைவத் தமிழ் மக்களின் புனிதமான தினாங்கள் மட்டும் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவதானது எமது சமயத்தை அவமதிக்கும் செயற்பாடாகும்.

கடந்த காலங்களில் சிவராத்திரி தினத்தன்று சில திணைக்களங்கள் செயலமர்வுகளையும் கருத்தரங்குகளையும் ஒழுங்குபடுத்தி நடத்தி வந்தன. அந்தச் செயற்பாடு இன்று நிறுத்தப்பட்டிருக்கின்றது. இதன்மூலம் அந்தந்த திணைக்கள உத்தியோகத்தர்களும் பணியாளர்களும் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்க வழி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால், இன்றும் சில வர்த்தக நிறுவனங்கள் தமது பணியாளர்களை பணிக்கு அமர்த்தியுள்ளதுடன் அரசியல் கட்சி கலந்துரையாடலை ஒழுங்குபடுத்தியுள்ளமையானது ஒட்டுமொத்த சைவத்தமிழ் மக்களின் மனாங்களையும் புண்படுத்தும் செயற்பாடாகும்.

எனவே, எதிர்வரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாமல் இருப்பதை பொறுப்புடையவர்கள் உறுதிப்படுத்துவதுடன் இன்று சிவராத்திரி விரத நிகழ்வு அற்ற வேறு நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பின் அந்த நிகழ்வை இன்று காலை 10 மணியுடன முடிவுக்கு கொண்டுவந்து அவர்கள் ஆலய தரிசனங்களைச் செய்வதற்கு அனுமதிக்குமாறு சிவதொண்டர் அமைப்பு விநயமாகக் கேட்டுக்கொள்கின்றது. (எ-11)

## சந்தைக் கடைத்தொகுதிகளை இராணுவம் விடுவித்தது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள மருதங்கேணி பொதுச் சந்தைக் கடைத் தொகுதிகளை இராணுவத்தினர் விடுவித்துள்ளனர்.

மருதங்கேணி பொதுச் சந்தையின் கடைத்தொகுதிகளை இராணுவத்தினர் கையகப்படுத்தியிருந்தனர். யுத்த காலப்பகுதியில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட சந்தைக்கடைத் தொகுதிகள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னரும்விடுவிக்கப்படவில்லை.

ஆயினும் தற்போது இராணுவ காவலரண்கள் பல யாழ் மாவட்டத்தில் அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையிலே இச்சந்தையின் கடைத் தொகுதியிலிருந்த இராணுவத்தினரும் வெளியேறியுள்ளனர்.

பருத்தித்துறை பிரதேச சபையின் உப அலுவலகமான மருதங்கேணி பிரதேசசபையின் கீழ்க் குறித்த சந்தை உள்ளது.

எனவே இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட கடைத்தொகுதிகள் வியாபார நடவடிக்கைகளுக்காக வழங்கப்படவுள்ளதனால் கடைகளை ஒப்பந்த அடிப்படையில் பெறவுள்ளவர்களை பருத்தித்துறை பிரதேச சபையின் மருதங்கேணி உப அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-9-64)

## சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் சிவராத்திரி விழா இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு உடுவில் பிரதேச நரசிங்க வைரவர் ஆலய மண்டபத்தில் உடுவில் பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்ப்பணா சுதர்சன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக உடுவில் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் முத்துவேல் சசிக்குமார்,புன்னாலைக் கட்டுவன் வடக்கு ஜே/208 பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுகிர்தா விஸ்ணுரஞ்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக புன்னாலைக் கட்டுவன் வடக்கு ஜே/208 கிராமசேவகர் [illegible] மயூரதன் கலந்து கொள்வார். (அ-2)

## சத்திய தரிசனம்



கடவுளுக்கும் பக்தனுக்கும் இடையே எப்போதும் நெருங்கிய தொடர்பு உண்டு. தனது பக்தனுக்கு தீங்கிழைக்கப்பட்டால் கடவுளுக்குப் பொறுக்காது. நிச்சயம் அவனை மன்னிக்கமாட்டார். கடவுள் தன்னையே கூட மதிக்காமல் தவறு செய்தவனை மன்னிக்கலாம். ஆனால் தன் அடியவனுக்கு தீங்கு செய்பவனை தெய்வம் நிச்சயம் மன்னிக்காது.

ஒருவன் தெய்வீகம் அடையவேண்டுமானால் முதலில் அவனது தவறுகளை மறப்பதை நிறுத்தவேண்டும். அதுமட்டுமல்ல அடுத்தவர் தவறை மிகைப்படுத்துவதையும் தவிர்க்க வேண்டும். அடுத்தவரிடம் இருக்கும் தவறைத் தேடியலைதல் தவறு. அதற்குப் பதில் உன்னிடம் இருக்கும் சிறிய தவறுகளைத் தேடிக்கண்டுபிடி. அடுத்தவரிடம் இருக்கும் குறைகள் எவ்வளவுதான் பெரிதாக இருந்தாலும் அதற்கு முக்கியத்துவம் கொடுக்காதே.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### செய்யக்கூடாதவை

நம்மைவிடப் பெரியவர்கள் முன் கால்மேல் கால்போட்டு அமரக் கூடாது. முகர்ந்து பார்த்த பூவைத் தலையில் சூடக்கூடாது. பிறரிடம்பேசும்போது உடலை ஆட்டுதல், நெளித்தல், காது குடைதல், மூக்கைச் சிமிண்டுதல் போன்ற துர்ப்பழக்கங்கள் கூடாது.

உட்கார்ந்திருக்கும்பொழுது காலாட்டுதல், துடையை ஆட்டுதல் கூடாது. அதனால் நம் சக்தி விரயமாகிறது. பெரியவர்களிடம் பேசும்பொழுது கைநீட்டிப்பேசுதலோ, உரத்துச் சத்தமிட்டோ பேசக்கூடாது. பெரியவர்களிடம் எதையும் பெற்றுக்கொள்ளுமுன் எழுந்து நின்று பெறவேண்டும் உட்கார்ந்த நிலையிலேயே பெறக்கூடாது.

பெருமூச்சு விடுவது மிகப்பெரும் தவறு. அதனால் துன்பங்கள்தான் அதிகரிக்கும். பெருமூச்சு விடுபவரின் மூச்சுக்காற்று அருகில் உள்ளவர் மேல் படக்கூடாது. பட்டால் அவருக்கும் கெடுதல். இலவசமாக யாரிடமும் எள் பெறக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவாலை வாலிபர் சங்க ஏற்பாட்டில் மாட்டுவண்டி சவாரி போட்டி






இளவாலை வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் மாட்டு வண்டி சவாரிப் போட்டி இடம்பெற்றது. கருவம்பனை சவாரித்திடலில் இடம்பெற்ற இப் போட்டிகள் இவ்வாண்டிற்கான முதல் போட்டியாகும்.

50ற்கும் மேற்பட்ட காளைச் சோடிகள் பங்குபற்றிய இப் போட்டிகள் ஏ,பீ,சீ, டீ ஆகிய நான்கு பிரிவாக இடம்பெற்றன.

17 காளைச் சோடிகள் பங்குபற்றிய ஏ பிரிவில் முதலாமிடத்தை அளவெட்டி சிவஞானமும், இரண்டாமிடத்தை சங்குவேலி ஈசனும், மூன்றாமிடத்தை பெரியவிளான் சிவாவும், நான்காமிடத்தை பொன்னாலை வசந்தனும் பெற்றுக்கொண்டனர்.

பீ பிரிவில் முதலாமிடத்தை இளவாலை அருந்து, இரண்டாமிடத்தை இளவாலை சனா, மூன்றாமிடத்தை புத்தூர் கவிராஜ், நான்காமிடத்தை கோண்டாவில் அருள் பெற்றுக்கொண்டனர்.

சீ பிரிவில் முதலாமிடத்தை வட்டுக்கோட்டை ஆனந்தி, இரண்டாமிடத்தை அளவெட்டி கணாதீபன், மூன்றாமிடத்தை புன்னாலைக்கட்டுவன் அருந்தவம், நான்காமிடத்தை அளவெட்டி துஷி பெற்றுக்கொண்டனர்.

டீ பிரிவில் முதலாமிடத்தை அளவெட்டி லோஜிதன், இரண்டாமிடத்தை வட்டுக்கோட்டை ஆனந்தி, மூன்றாமிடத்தை அளவெட்டி சோதிநாதன், நான்காமிடத்தை அளவெட்டி துஷி பெற்றுக்கொண்டனர்.

வெற்றி பெற்ற காளைச் சொந்தக்காரர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டன.

கடந்த 24 வருடங்களின் பின்னர் கருகம்பனை சவாரித்திடலில் சவாரிப் போட்டிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

காளைச்சவாரி ஆரம்பித்து வைக்கப்படுவதையும் மூத்த சவாரியாளரும் சவாரி சங்க போஷகரும் வெற்றியாளர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், காளைகள் பாய்வதையும் படங்களில் காணலாம். (க-23)

## விளையாட்டு உபகரணம் வழங்கும் நிகழ்வு


பருத்தித்துறை உதைபந்தாட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களிற்கு பயிற்சிக்கு தேவையான பந்துகளை வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு பருத்தித்துறை உதைபந்தாட்டலீக்கின் உப தலைவர் ம. நவநீதமணி தலைமையில் அல்வாய்தெற்கு கிராம அலுவலர்பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் றஞ்சித் றொட்றிகோவும் பொதுச்செயலாளர் உபாலி ஹேவகேவும் நிறைவேற்று பணிப் பாளர் அனுரா டீ சில்வாவும் கலந்து சிறப்பிக்கின்றார்கள்.

நிகழ்வில் பருத்தித்துறை லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களின் தலைவர், செயலாளர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்





தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையிலான வீரர்களின் 14 ஆவது போர் நேற்று தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் கோலாகலமாக ஆரம்பமான போது....

### கரவெட்டி பிரதேச இ.கழக பெண்களுக்கான வலைப்பந்தாட்டம்; கலைமதி, மனோகரா இறுதியாட்டத்திற்கு தகுதி



கரவெட்டி பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை நவிண்டில் கலைமதி கழக விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. இதில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டஅரைஇறுதி போட்டிகளின் முடிவில் கலைமதி, மனோகரா இளைஞர் கழக அணியினர் இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றனர்.

முன்னர் நடைபெற்ற அரையிறுதி ஆட்டங்களில் கலைமதி இளைஞர் கழகம் டயமண்ட்ஸ் இளைஞர் கழக அணியை 17:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் வீழ்த்தி இறுதி ஆட்டத்தில் நுழைந்தது. இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் மனோகரா இளைஞர்கழக அணியை எதிர்த்து சிவகுமரன் இளைஞர் கழக அணி மோதியது இப்போட்டியில் 19:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் சிவகுமரன் இளைஞர் கழகத்தை வீழ்த்தி இறுதி ஆட்டத்தில் நுழைந்தது மனோகரா இளைஞர்கழகம். எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி இடம் பெறும் பிரதேச இளைஞர் விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வில் இவ் இறுதி போட்டி இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-23)

# தலைவர் வெற்றிக்கிண்ண உதைபந்து; டயமன்ஸ், நவஜீவன்ஸ் இன்று பலப்பரீட்சை






(மானிப்பாய்)

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்திய இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுபோட்டியின் இறுதிஆட்டமும் பரிசில் வழங்கல் நிகழ்வும் இன்று வியாழக்கிழமை பி.ப 3.30 மணிக்கு கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுகழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம அதிதியாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன நிறைவேற்று பணிப்பாளர் அனுரா டீ சில்வா கலந்து சிறப்பிக்கின்றார்.

இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதுகின்றது. (க-23)

## உடுவில் இ.கழக கரம் போட்டி

உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு பெற்ற இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.


இதில் ஒரு அங்கமாக ஆண், பெண் இருபாலாருக்குமானகரம்போட்டி உடுவில் மான்ஸ் கல்லூரியில் இன்று காலை 8.30 மணி முதல் இடம் பெறவுள்ளதாக பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் அனுஷன் கேட்டுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இந்தியா வெற்றி

விராட் ஹோலியின் அபார சதமும், ரஹானேயின் அரைச்சதமும் கைகொடுக்க பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஆசிய கிண்ணத் தொடரின் 2-வது போட்டியில் இந்திய அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

5 அணிகள் மோதும் 12-வது ஆசிய கிண்ணப் போட்டிகள் பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது.



இத்தொடரின் 2-வது போட்டி பங்களாதேஷ் - இந்திய அணிகளுக்கு இடையில் பதுல்லவில் நேற்று நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, தலைவர் முஷ்பிகுர் ரஹீமின் (117) அபார சதத்தின் உதவியுடன் 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 279 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக மொஹமட் ஷமி 4 விக்கெட்டுக்களைக்கைப்பற்றினார்.

280 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, அணித்தலைவர் விராட் ஹோலியின் (136) அபார சதமும், ரஹானேயின் (73) அரைச்சதமும் கைகொடுக்க 49 ஓவர்களின் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

பங்களாதேஷின் பந்துவீச்சில் ரூபல் ஹுசைன், அப்துர் ரஷாக், ரஹ்மான், சொகைக் காஷி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக இந்திய அணியின் தலைவர் விராட் ஹோலி தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் இந்திய அணி 4 புள்ளிகளை பெற்றது.

இத்தொடரின் 3-வது போட்டி ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் இதே மைதானத்தில் இன்றைய தினம் நடைபெறுகிறது. (கு)

### வீரர்களின் போர்

# ஸ்கந்தவரோதய ஆதிக்கம் தடுமாறுகிறது மகாஜனா

(யாழ்ப்பாணம்)

வீரர்களின் போர் என அழைக்கப்படும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டிகள மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நேற்றுக் காலை ஆரம்பமாகின.


நாணயசுழற்சியில் வென்ற தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது தடுமாறியது.

24.3 ஓவர்களினை எதிர்கொண்ட தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சகல விக்கெடடுக்களையும் இழந்து 78 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

அணி சார்பில் டிலோஷன் 27 ஓட்டங்களையும், மயூரன் 18, கபிலன் 8 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி சார்பில் கதேஜன் 6.3 ஓவர்கள் பந்துவீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பிரஷாத் 10 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சுஜிதரன் 17 ஓட்டங்களுக்கு 1விக்கெட்டினையும் கைப்பறறினர்.



பதிலுக்கு தனது முதல் இன்னிங்சில் துடுப்பாடிய சுன்னாகம ஸ்கந்தவரோதயக் கல்லூரி 46.2 ஓவர்களில் 232 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில்சரத்குமார் நான்கு ஆறு ஓட்டங்கள், ஏழு நான்கு ஓட்டங்கள்அடங்கலாக 71ஓட்டங்களையும் ஜனக்ஷன்67, சுஜிதரன்32, பிரஷாந 22 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஒரு கட்டத்தில் குறைவான ஓட்டங்களில் 6 இலக்குகளை இழந்த போதும் ஜோடி சேர்ந்த ஜனக்ஷன் மற்றும் சரத்குமார் 7-வது விக்கெட்டிற்காக 79 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். இதன் மூலம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி வலுவான ஒரு நிலையினை அடைந்தது.

பந்துவீச்சில் ஜனந்தன் 61 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், கஜந்தன் 44 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், நிஷாந் 38 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் மயூரன் 13 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

154 ஓட்டங்கள் பின்னிலையில் 2-வது இன்னிங்சில் துடுப்பாடிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி போட்டி நேரம் முடிவடைந்து இடைநிறுத்தப்படுகையில் 21 ஓவர்களை எதிர்கொண்டு 4 விக்கெட்டுக்களை இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் டிலோஷன் ஆட்டமிழக்காது 36 ஓட்டங்களையும், பவன் 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கதேயோன் 2 விக்கெட்டுக்களையும், பாலபிரஷாந், ஜனக்ஷன் தலா 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

போட்டியின் 2-வது நாள் இன்று காலை தொடரவுள்ளது. (க-23)

## இன்றைய போட்டி

(மானிப்பாய்)

யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் வருடாந்தம் நடத்தி வரும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளின் இறுதிப் போட்டி இன்று வியாழக கிழமை மாலை 5 மணி முதல் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெறவுள்ளது.

8 அணிகள் பங்கு கொண்ட ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியும் சென்றலைட்ஸ் புளூஸ் அணியும் மோதவுள்ளது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் வி.க அணியும் யாழ் இந்து மகளிர் வி.க அணியும் மோதவுள்ளது.

35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான இறுதிப் போட்டியில் ஜொலிஸ ரார் வி.க அணியும் பல்கலைக்கழக பழைய மாணவர் அணியும் மோதவுள்ளது.

இவ் நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ.இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார். (க-23)

## அரசியல்...

ஒரே விதமான கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டி ...ள்ளார்.

இலங்கைக்கு எதிராக சில தரப்பி...ர் திட்டமிட்ட வகையில் குற்றச்சா...டுக்களை முன்வைத்து வருவ...த் தெரிவித்துள்ளார்.

...புறச் சக்திகளின் தீர்வுத் திட்டங்களை அமுல்படுத்த முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சமூகம் அனைத்து நாடுகளையும் ஒரே விதமாக நடத்த வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டதன் மூலம் இலங்கையில் மட்டுமன்றி பிராந்திய வலயத்திற்கு நன்மைகளை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (எ-11)

## மனித உரிமை...

...ந்த அறிக்கையில் இலங்கை தொடர்...ான முக்கியமான குற்றச்சாட்டுக்கள ...முன்வைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் போரின் போது இடம்பெற்ற மீறல்களுக்குப் பொறுப்புகூறப்படாமை, நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படாமை குறித்து தொடர்ச்சியாக அமெரிக்கா கவலை வெளியிட்டு வந்துள்ளது.

அண்மைக்காலமாக, ஊடகங்கள், மதசிறுபான்மையினர், மனித உரிமை ஆர்வலர்கள், நீதித்துறையினர் மீதான தாக்குதல்கள் குறித்து அமெரிக்க அதிகாரிகள் கவலை வெளியிட்டு வந்துள்ளனர்.

இந்தநிலையில், இந்த அறிக்கையில் இலங்கை குறித்து காட்டமான குற்றச்சாட்டுக்கள் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வரத் தயாராகி வரும் அமெரிக்கா, ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பமாக இன்னும் ஒருவாரமே உள்ள நிலையில் இந்த அறிக்கையை வெளியிடவுள்ளது முக்கியமானதாக கருதப்படுகிறது. (எ-11)

## இராணுவ படைக்...

கள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை கூட, படைக்கலைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பெரியளவிலான படைக்கலைப்பு, ஒரு பெரிய சமூக எழுச்சியை ஏற்படுத்தும் என்று கோத்தபாய ராஜபக்ஷ கடும் கோபத்துடன் கூறியுள்ளார்.

எந்தவொரு விவேகமுள்ள அரசாங்கமும், போர்க்களத்தில் உயிரைப் பணயம் வைத்துப் போராடிய படையினரை வீட்டுக்கு அனுப்புமா?

படைக்கலைப்பு நாட்டில் உறுதியற்ற நிலையை ஏற்படுத்தும். அரசியல் கொந்தளிப்பையும், சமூக பொருளாதார உறுதியற்ற நிலையையும் உருவாக்கும். ஒருவேளை, படையினரை வீட்டுக்கு அனுப்ப வைத்து, மிகப்பெரிய நெருக்கடிக்குள் எம்மைச் சிக்க வைக்கலாம் என்று, விடுதலைப் புலிகளுக்கு நெருக்கமானவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

போருக்குப் பிந்திய மீட்புத் திட்டங்களில் ஆயுதப்படைகள் பணியாற்றுகின்றன. அவர்களினால் எல்லா சமூகங்களும் பயனடைகின்றன. பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும எதையும் இலங்கை அரசாங்கம் செய்யாது.

அமெரிக்கா தனக்கு நெருக்கமான கூட்டாளி நாடுகளின் பாதுகாப்புக் குறித்து மட்டுமே கரிசனை கொள்கிறது. போர் முடிவுக்கு வந்த பின்னர், யாழ்ப்பாணத்தில் இராணுவத் தலையீடுகள் குறைக்கப்பட்டது குறித்து அமெரிக்கா நன்றாகவே அறியும். ஆனாலும், வடக்கு மாகாணத்தில் போர்க்காலத்தில் உள்ளது போன்று படையினர் நிலைகொண்டுள்ளது போன்று கருத்துகளை வெளியிடுகிறது.

தமது குடிமக்களினதும், கூட்டாளி நாடுகளினதும் பாதுகாப்புக்காக அமெரிக்கா தனது படைகளை தனது நாட்டு எல்லைகளுக்கு வெளியே நிறுத்தி வைத்துள்ளது.

விடுதலைப் புலிகள் மீண்டும் ஒன்றிணையும் முயற்சிகளை மேற்கொள்ளமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, எமது படையினரை நாம் நிறுத்தி வைத்துள்ளதை, மட்டும் அவர்களால் ஏன் புரிந்துகொள்ள முடியவில்லை? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (எ-11)

## நவிபிள்ளையின்...

கள் இடைநிறுத்தப்படுவதால் பொருளாதார தடைகள், விசா தடைகள் என்பன இலங்கைக்கு எதிராக செயற்படுத்தப்படலாம்.

நவநீதம்பிள்ளையின் அறிக்கையில் இருக்கும் சில விடயங்கள் அரசாங்கத்தினால் செயற்படுத்தக் கூடிய மட்டத்தில் இருக்குமாயின் அது தொடர்பான விடயங்களை நாடாளுமன்றத்தில் சட்டமூலம் ஊடாக நிறைவேற்றி நாடாளுமன்றத்தில் அமுல்படுத்தப்பட வேண்டும்.

இந்த நிலையில், மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை தொடர்பான சவால்களை எதிர்கொள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் அமுல்படுத்தியுள்ள பரிந்துரைகள் தொடர்பிலான முழுமையான அறிக்கை மற்றும் காணொளிகளை உறுப்பு நாடுகளுக்கு வழங்க வேண்டும்.

அத்துடன் உறுப்பு நாடுகளுக்கு இலங்கை தூதரகங்கள் மூலமாக அதுபற்றி தெளிவுபடுத்த வேண்டும்.

இலங்கைக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்களை தவிர்ப்பதற்காக தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்து முன்அனுபவங்களை பெறுவது மட்டுமல்லாது மனித உரிமை ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளின் ஆதரவை பெற இறுதிவரை அர்ப்பணிப்புடன்செயற்பட வேண்டும்என இலங்கை மனித உரிமை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (எ-11)

## நல்லை ஆதீன...

துரையாடினார்.

இந்தச்சந்திப்பின் போது, உதுஹம ரத்னபால சிறி புத்தராக்கித மகாநாயக்க தேரர் கூறுகையில், புத்த மதத்திற்கும் இந்து மதத்திற்கும் நெருங்கிய தொடர்புள்ளது. புத்தபெருமான் இந்து மதத்தைசேர்ந்தவர்தான். எனவே பௌத்தர்கள் இந்துக்களுக்கு உதவி செய்யவேண்டும். உண்மையான பௌத்தர்களோ , இந்துக்களோ யாருக்கும் தீங்கு இழைக்கமாட்டார்கள் .அதேபோன்று பௌத்தர்களோ இந்துக்களோ யாரையும் கட்டாயப்படுத்தி , வலுக்கட்டாயமாக மதத்தில் இணைத்ததில்லை. மதத்தில் இணையுமாறு வற்புறுத்தியதில்லை.

இந்துக்கள் வழிபடும் தெய்வங்களை பௌத்தர்களும் விகாரைகளில் வைத்து வழிபடுகின்றனர். இந்து மதத்திற்கும் பௌத்த மதத்திற்கும் ஆரம்பகாலம் தொட்டே நெருங்கிய தொடர்புண்டு. ஆனால் இந்த இரண்டு மதங்களிலும் உள்ள சிறுகுழுவினர் மக்களிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்து மதமும் பௌத்த மதமும் இந்தியாவிலிருந்துதான் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவை. எனவே இந்துமதக்குருமார்களும் பௌத்த துறவிகளும் ஒன்றிணைந்து இந்த நாட்டில் புரட்சியை ஏற்படுத்தவேண்டும். மக்களை அமைதிவாழ்வுக்கு அழைத்து செல்லவேண்டும் என்று தெரிவித்த அவர் பசுவதையினை பௌத்தர்களும் இந்துக்களும் புறக்கணித்து வந்தனர். ஆனால் முஸ்லிம்களினால் பசுக்கள் வதைககபட்டு உணவுக்காக வெட்டப்பட்டு வருகின்றது.

இதனைத்தடுக்க பௌத்த மதத்தவர்களுடன் இணைந்து இந்துக்களும் போராடவேண்டும் என்றும அவர் மேலும் தெரிவித்தார்.(எ-6)

## இறுதி நேரத்தில்...

வழங்கியமை தொடர்பில் ஜப்பானிய தூதுவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கு ஜப்பான் பல்வேறு வழிகளிலும் உதவி வருகிறது. இந்த நிலையில் ஜெனிவாவில் அமெரிக்காவின் யோசனை தொடர்பில் ஜப்பான் இறுதி நேரத்திலேயே முடிவெடுக்கும். இதற்காக ஜப்பானின் குழு ஒன்று ஜெனிவாவுக்கு செல்லவுள்ளதாகவும் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஜெனிவா பிரேரணை தொடர்பில், ஜப்பானின் வெளியுறவு அமைச்சு இன்றும் உத்தியோகபூர்வ அறிவித்தலை விடுக்கும் என்று ஜப்பானின் இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது. (எ-11)

## மகிந்த...

மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளவில்லை. இந்த சூழ்நிலையில் ஜனாதிபதி மகிந்தவை மன்மோகன் சந்திக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BEACON - யாழ்நகர், வெலிங்டன் சந்தி.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு (G.A.Q,B.A) மாணவர்களுக்கான கருத்தரங்கு

### வரலாறு

- G.A.Q :- காலம் - 01.03.2014, 02.03.2014
  நேரம் - 8.00 - 12.00 am
  குறிப்பு :- 'கையேடுகள் வழங்கப்படும்'
- BA I, BA II :- காலம் - 08.03.2014, 09.03.2014
  நேரம் - 8.00 - 12.00 am

முன்பதிவுகளை மேற்கொள்ளலாம்.

ஆசிரியர்
S.S.தாஸ்
BA (Hons) sp

(C-6595)

## மரண அறிவித்தல்

### அருளானந்தம் சற்குணசபேசன்



வட்டுக்கோட்டையினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் வட்டு சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆலய அறங்காவலர் க.அருளானந்தம் அவர்களின் சிரேஷ்ட புத்திரன் ஆகிய அருளானந்தம் சற்குணசபேசன் அவர்கள் 2014.02.26 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் குகனேஸ்வரியின் அன்புக் கணவரும் அ.குகசோதியின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 2014.02.26 ஆம் திக்தி நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. மேற்படி தகவல்களை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலட்டி வீதி, வட்டு தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல் :- ச.குகனேஸ்வரி (மனைவி)
அ.குகசோதி (சகோதரன்)

(C-6606)

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

### Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

### Diploma In English (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

### IELTS

Toping centre for registering more IELTS candidates in Jaffna
&
Approved centre for IELTS online Registration system for Exam

< We gurantee minimum 6.0 band and above >

Duration: 2 1/2 Months

### BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

### A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

### EVENING & WEEKEND CLASSES STARTS ON

| Batch I | Batch II | Batch III | Batch IV |
|---|---|---|---|
| 01.03.2014 | 03.03.2014 | 08.03.2014 | 10.03.2014 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavapullivamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

(C-6593)

## தவறவிடப்பட்டுள்ளது

ஸ்ரேசன் வீதி, கோண்டாவிலைச் சேர்ந்த துரை சிங்கம் கஜேந்திரன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பன உட்பட ஆவணங்கள் கோண்டா விலுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடைப்பட்ட பலாலி வீதியில் தவறவிடப்பட்டுள்ளது. (5699)

கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
T.P :- 077 533 4718, 077 474 5843

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட அல்லது கோண்டாவில் கொக்குவில் பகுதிகளில் பிரதானவீதிக்குஅண்மையில்குறைந்தது3அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை:

தொடர்புகளுக்கு :-
0777 285 794

(5700)

## உள்நாட்டு, வெளிநாட்டு கல்வி - தொழில் வழிகாட்டி சேவையின்

# 5வது ஆண்டில் சிகரம் இப்போது...



- மாதம் 2,500$ வருமானத்துடன் சுவிற்சர்லாந்தில் ஹொட்டேல் கல்வியும், வேலைவாய்ப்பும்
- 2 வருடத்தில் PR வசதியுடன் நியூசிலாந்து பயண ஏற்பாடு
- மிகக் குறைந்த கட்டணத்தில் சைப்பிறசில் படிக்க, உழைக்க ஏற்பாடு
- மலேசியாவில் வருமானத்துடன் பயிற்சி பெற்று விரும்பிய எந்த நாட்டுக்கும் செல்வதற்கான ஏற்பாடு
- MBBS, Dental, Engineering, Bachelors, Masters & Diploma Programs in China, Germany, Italy, Latvia & Cyprus

வெறுமனே வெளிநாடு போக ஆவலாதிப்பட்டு அலையாமல் சிறந்த கல்வி, கௌரவமான தொழில் - திருப்தியான வருமானம் - நிரந்தர குடியுரிமை ஏற்பாடுகளுடன் நம்பகமான சேவையை பெற உடனே வாருங்கள்

(C-6604)

சிகரம் Sikaram
Gateway to Education & Employment

சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி
இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
Call: 0773616798 www.Sikaram.lk

## BA, B.sc, BBA, B.com
## காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L-ல் முழுமைச் சித்தியடைந்தவர்களும் இரண்டு பாடம் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
- B.A இல் பொருளியல், வரலாறு, சமூகவிஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ், Journalism and Mass Communication ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவுசெய்ய முடியும்.
- இக் கற்கை நெறிகளின் கால எல்லை 2 1/2 வருடங்க்ளாகும்.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.

குறிப்பு : A/L இல் ஒரு பாடம் சித்தியடைந்தவர்கள் ஒரு வருடக் கற்கைநெறியாக (FOUNDATION COURSE) அடிப்படைநிலைக் கல்வியின் இரண்டாம் வருடத்தைப் பூர்த்தி செய்து பட்டப்படிப்பினை நிறைவு செய்ய முடியும்.

**இக் கற்கைநெறிகள் யாவும் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.**

- மேற்குறிப்பிட்ட கற்கைநெறிகளுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.
- பரீட்சைகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறுகின்றன.

யாழ்ப்பாணம், பேராதனைப் பல்கலைக்கழகங்களுக்குரிய 1st in Com,GAQ இற்குரிய புதிய பிரிவுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

முக்கிய அறிவித்தல்: மேற்குறிப்பிட்ட விரிவுரைகளில் பங்கேற்கும் வெளி மாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதி இலவசம்.

யாழ்.இணைப்பாளர்,
காமராசர் பல்கலைக்கழகம்.
தொ.பே: 222 8148

புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(C-6994)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.